# பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | பக்கம் |
| --- | --- | --- |
| 1 | முன்னுரை | 1 |
| 2 | மீன்வளக் கொள்கைகளும் மற்றும் அதன் தொலைநோக்கு பார்வையும் | 7 |
| 3 | 2016-17 ஆம் ஆண்டில் மீன்வளத்துறையின் முக்கிய நிகழ்வுகள் / சாதனைகள் | 9 |
| 4 | தமிழகத்தின் மீன்வளம் – ஒரு கண்ணோட்டம் | 18 |
| 5 | நிர்வாக அமைப்பு | 26 |
| 6 | தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாத்தல் | 31 |
| 7 | கடல் மீனவர் – நலத்திட்டங்கள் | 39 |
| 8 | உள்நாட்டு மீன்வளம் | 109 |
| 9 | விரிவாக்கம் மற்றும் பயிற்சி | 121 |
| 10 | சிறப்புத் திட்டங்கள் | 124 |
| 11 | மீனவ கூட்டுறவு சங்கங்கள் | 131 |
| 12 | தமிழ்நாடு மீனவர் நல வாரியம் | 133 |
| 13 | தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் (வரையறுக்கப்பட்டது) (TAFCOFED) | 136 |
| 14 | தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் (வரையறுக்கப்பட்டது) (TNFDC) | 142 |
| 15. | தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம் | 154 |
| 16. | 2017-18 ஆம் ஆண்டு மீன்வளத்துறைக்கான மொத்த நிதி ஒதுக்கீடு | 174 |
| 17. | நிறைவுரை | 174 |

# மீன்வளத்துறை

# கொள்கை விளக்க குறிப்பு

# 2017-2018

*“மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு நடைபெறும் நல்லாட்சியில் மீனவரின் வாழ்க்கையை மேலும் மேம்படுத்தும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.”*

*மாண்புமிகு முதலமைச்சர்*
*திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள்*
*06.03.2017 அன்று ஆற்றிய உரை.*

## 1. முன்னுரை

தமிழ்நாடு, செறிவுமிக்க பல்வேறு வகையான நீர்வாழ் உயிரின ஆதாரங்களைக் கொண்டு, மீன்வள மேம்பாட்டில் இந்தியாவின் முன்னோடி மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது. தமிழ்நாட்டிலுள்ள மீன்வள ஆதாரங்கள், நன்னீர் மற்றும் கழிமுகப்பகுதியில் மீன்பிடிப்பினை மேற்கொள்ளும் மீனவர்களையும் உள்ளடக்கிய பத்து இலட்சத்திற்கும் அதிகமான மீனவர்களுக்கு வாழ்வாதாரமாக விளங்குகின்றன. மாநிலத்தின் மீன்வள ஆதாரங்கள், மாநிலத்தின் கொள்கைகளின் அடிப்படையில், அறிவியல் ரீதியாகவும் மற்றும் நீடித்த வளங்குன்றா வகையிலும் மேலாண்மை

செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாதாரங்களின் பொருளாதார மற்றும் சமூகப்பரிமாணங்களை வழங்கிடும் வகையில், கணிசமான அளவு கவனம் மற்றும் முக்கியத்துவம் தமிழ் நாடு அரசால் அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டு மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் நலனுக்கு அரசு அதிமுக்கியத்துவம் அளித்து வருகிறது. மீன் உற்பத்தி திறனை வளங்குன்றா வகையில் அதிகரித்தல் மற்றும் அவற்றின் தரம் மேம்படுத்துதல் மூலம் மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் ஆகியன இந்த அரசின் அடிப்படைக் கொள்கைகளாகும்.

தமிழ்நாடு அரசு, மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் வாழ்வாதார வாய்ப்புகளை அதிகரித்திடவும், உலகத்தரத்திற்கு இணையான கடற்கரையோர உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிடவும், மதிப்பு கூட்டப்பட்ட மீன் உணவுப் பொருட்கள் தயாரிப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு கடல்மீன் தரத்தினை அதிகரிக்கும் வசதிகளை உருவாக்கிடவும், மாற்று வழி மீன்பிடிப்பு மூலம் ஆழ்கடல் மீன்பிடிப்பினை மேற்கொள்வதற்கான முயற்சிகளை உருவாக்கிடவும் மற்றும் நமது மீனவ மக்களின் வாழ்க்கைத்

தரத்தினை உயர்த்துவதற்கான சமூகப்பாதுகாப்பினை அளித்திடவும் உறுதிபூண்டுள்ளது.

2011-ஆம் ஆண்டில் மீன்பிடி தடைக்காலங்களில் வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகையான ரூ.1,000/-த்தினை அரசு ரூ.2,000/-மாக உயர்த்தி வழங்கியது. மீனவர்களின் வாழ்வாதார சிரமங்களைக் கருத்தில் கொண்டு தற்போது ஒவ்வொரு மீனவ குடும்பத்திற்கும் வழங்கப்பட்டு வரும் மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகையான ரூ.2,000/- த்தினை ரூ.5,000/-ஆக 2016-17 ஆம் ஆண்டில் மீண்டும் உயர்த்தியது. 2011–ஆம் ஆண்டில் அரசால் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமான, மீன்பிடிப்பு குறைந்த காலங்களில் ஒவ்வொரு கடல் மீனவ குடும்பத்திற்கும் சிறப்பு நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டு வந்த ரூ.4,000/-, 2016-17 ஆம் ஆண்டு முதல் ரூ.5,000/- ஆக மீண்டும் உயர்த்தியது.

நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை நிலைநாட்ட தமிழ்நாடு அரசு உறுதிபூண்டுள்ளது. பாக் வளைகுடா பகுதியில் நமது மீனவர்களின் மீன்பிடி உரிமையில் இலங்கை கடற்படை தொடர்ந்து வரம்புமீறினாலும், நமது

மீனவர்களின் வாழ்வாதாரமான மீன்பிடி தொழிலை அமைதியாக மேற்கொள்ள ஊக்கமான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. தமிழ்நாடு மற்றும் இலங்கை மீனவ பிரதிநிதிகளுக்கிடையே பேச்சுவார்த்தை நடத்திட தேவையான வசதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசால் அளிக்கப்பட்டு, மீனவர்களுக்கிடையேயான நான்காவது சுற்று பேச்சுவார்த்தை 02.11.2016 அன்று புதுடில்லியில் நடைபெற்றது. நமது மீனவர்கள் படும் துயரினை, 31.12.2016, 07.04.2017 அன்றைய தேதிகளில் புதுடில்லியில் நடைபெற்ற கூட்டு செயற்குழு கூட்டத்திலும், மற்றும் இலங்கை, கொழும்புவில் 02.01.2017 அன்று நடைபெற்ற அமைச்சர்களுக்கிடையேயான கூட்டங்களிலும் அழுத்தமாக எடுத்துரைக்கப்பட்டது.

தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய பகுதிகளில் மீன்பிடிக்கும்போது நமது மீனவர்களையும், மீன்பிடி படகுகளையும் இலங்கை அரசு சிறைப்பிடிப்பது, ஒட்டுமொத்த தமிழக மீனவ சமூகத்தினரிடையே கவலை மற்றும் பாதுகாப்பற்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளது. இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் விதமாக, பாக் வளைகுடா பகுதியில் உள்ள இழுவலைப் படகுகளை,

ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக மாற்றி, பாக் வளைகுடா பகுதியிலுள்ள மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதாரத்தினை வழங்கிட அரசு சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பாக் வளைகுடா பகுதியிலுள்ள இழுவலை படகுகளை ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக மாற்றிட, 70 விழுக்காடு மானிய உதவித் தொகை (மத்திய அரசு 50 விழுக்காடு மற்றும் மாநில அரசு 20 விழுக்காடு) வழங்கிட முடிவெடுக்கப்பட்டுள்ளது. 2017-18ஆம் ஆண்டில், 500 ஆழ்கடல் செவுள்வலையுடன் கூடிய தூண்டில் முறை சூரை மீன்பிடி படகுகள் கட்டுவதற்கு மானியமாக ரூ.286 கோடி (மத்திய அரசு – ரூ.200 கோடி மற்றும் மாநில அரசு – ரூ.86 கோடி) வழங்கிட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இலங்கை கடற்படையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பாக் வளைகுடா மாவட்டங்களைச் சார்ந்த மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடிப்பினை மேற்கொள்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூரில் ரூ.113.90 கோடி மதிப்பீட்டில் மீன்பிடித்துறைமுகம் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

2016-17 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சல் மற்றும் சின்னமுட்டம், மற்றும் நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகங்கள் அமைக்கும் பணிகள் நிறைவுற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

மீன்பிடிக்கையில் ஆழ்கடலில் ஏற்படும் ஆபத்து தருணங்களில் மீனவர்களின் உயிர் மற்றும் மீன்பிடி உடைமைகளை, உடனடியாக காப்பாற்றிட தேவையான மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தகவல்கள் அளிப்பதை உறுதி செய்யவும், மீனவர்கள் இருக்குமிடத்தினை துல்லியமாக அறிய ஏதுவாக செயற்கை கோள் உதவியுடன் புவிநிலை இருப்பு அமைப்பு (Global Positioning system) பொருத்தப்பட்டுள்ள 1,600 ஆபத்துக்கால எச்சரிக்கை தகவல் பரப்பும் கருவிகள் (Distress Alert Transmitters) மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மீன்வள கூட்டு மேலாண்மை, அறிவுசார் மேலாண்மை திறன் மேம்படுத்துதல், வாழ்வாதாரத்திற்கு உதவியளித்தல், மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட, கம்பியில்லா தொலை தொடர்பு வசதியினை ஏற்படுத்துதல் மற்றும் மீன்பிடிப்பு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற

திட்டங்கள் கடலோர பேரிடர் அபாயம் குறைப்புத் திட்டத்தின் (Coastal Disaster Risk Reduction Project(CDRRP)) கீழ் செயல்படுத்திட, உலக வங்கி ரூ.321.30 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

கிராமப்புற பகுதிகளில் மீன்வளர்ப்பு, ஒரு முக்கியமான வருவாய் ஈட்டும் தொழிலாக வளர்ந்து வருகிறது. வேளாண்மையுடன் மீன்வளர்ப்பினை ஒருங்கிணைப்பதன் மூலம் உற்பத்தித்திறனை அதிகரிக்க இயலும். கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநில அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக, மாநிலத்தின் மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் அதன் தேவை ஆகியவற்றிற்கான இடைவெளி 2015-16 ஆம் ஆண்டில் 8.73 கோடியிலிருந்து 2016-17 ஆம் ஆண்டில் 6 கோடியாகக் குறைந்துள்ளது.

## 2. மீன்வளக் கொள்கைகளும் அதன் தொலைநோக்கு பார்வையும்

தமிழ்நாடு அரசின் முக்கிய மீன்வளக் கொள்கைகள் பின்வருமாறு:

- மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை பாதுகாத்தல்.

- மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கும்போது அவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.
- பல்வேறு நிவாரணத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் மீனவ மக்களுக்கு சமூகப் பாதுகாப்பினை அளித்தல்.
- பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் மீனவ மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.
- மீன்களை சுகாதாரமாகக் கையாளவும், பதப்படுத்தவும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி வலுப்படுத்துதல் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் மீன் விற்பனையை ஊக்குவித்தல்.
- சட்டப்பூர்வ ஒழுங்கு முறைகளான, வலைகளின் கண்ணி அளவினை ஒழுங்குபடுத்துதல், அழிவினை ஏற்படுத்தும் வலைகளின் பயன்பாட்டினை தடை செய்தல் போன்றவற்றை அமலாக்கம் செய்வதன் மூலம், மீன்வள ஆதாரங்களை பாதுகாத்தல் மற்றும் மீன்வள இருப்புகளை அதிகப்படுத்துதல், செயற்கை மீன் உறைவிடங்களை அமைத்தல்.
- தூரக் கடல் மீன்பிடிப்பு / ஆழ்கடல் மீன்பிடிப்பினை, குறிப்பாக சூரை மீன்பிடிப்பினை மாற்று முறை

மீன்பிடிப்பாக மேற்கொள்வதற்கு, மீனவர்களுக்கு நிதி உதவி அளித்தல் மற்றும் ஆழ்கடல் மீன்பதனிடும் அலகினை ஏற்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் மீன்வள ஆதாரங்களை மேலாண்மை செய்தல்.

- சுற்றுச்சூழலுக்கு உகந்த நீடித்த நீர்வாழ் உயிரின வளர்ப்பு / மீன்பிடிப்பு முறைகளை ஊக்குவித்தல் மற்றும் ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டுதல்.
- மனிதவளத் தேவையினைப் பூர்த்தி செய்ய மீன்வளம் சார்ந்த கல்வி மற்றும் பயிற்சி நிலையங்களை வலுப்படுத்துதல்.
- ஊரக வேலை வாய்ப்பினை உருவாக்குதல்.
- மீன்வள கூட்டுறவு அமைப்புகளை வலுப்படுத்துதல்.
- ஆற்றல் வாய்ந்த, திறமைமிக்க மற்றும் ஒளிவுமறைவற்ற நிர்வாகத்தினை உறுதிப்படுத்துதல்.

## 3. 2016-17 ஆம் ஆண்டில் மீன்வளத்துறையின் முக்கிய நிகழ்வுகள் / சாதனைகள்

1. மீன்பிடிப்பு குறைந்த காலங்களில் ஒவ்வொரு கடல் மீனவ குடும்பத்திற்கும் வழங்கப்பட்டு வரும் சிறப்பு நிவாரணத் தொகையான ரூ.4,000/-ம், 2016-17 ஆம் ஆண்டிலிருந்து ரூ.5,000/- ஆக அரசு உயர்த்தியது. இத்திட்டத்தினை

2016-17 ஆம் ஆண்டில் செயல்படுத்த அரசு, ரூ.82.50 கோடிக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

2. மீன்பிடி தடைக்காலத்தில் மீனவர்களின் வாழ்வாதார சிரமங்களைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு மீனவ குடும்பத்திற்கும் வழங்கப்பட்டு வரும் மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகையான ரூ.2,000/- த்தை ரூ.5,000/-ஆக 2016-17 ஆம் ஆண்டில் அரசு உயர்த்தியது. 2017-18 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தினை செயல்படுத்த அரசு ரூ.83.17 கோடிக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

3. 2017-18 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், மாண்புமிகு மீன்வளம், நிதி மற்றும் பணியாளர்(ம) நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் அவர்கள், தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம், தமிழ்நாடு மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நிவாரண உதவித்தொகையான ரூ,2,700/-ஐ ரூ,4,500/- ஆக உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்தார்கள். இதற்காக, இத்திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டு வரும் மாநில அரசின் பங்குத் தொகை தேவையான அளவிற்கு உயர்த்தப்படும்.

4. தமிழ்நாடு மற்றும் இலங்கை மீனவ பிரதிநிதிகளுக்கிடையே பேச்சுவார்த்தை நடத்திட தேவையான வசதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசால் அளிக்கப்பட்டு, மீனவர்களுக்கிடையேயான நான்காவது சுற்று

பேச்சுவார்த்தை 02.11.2016 அன்று புதுடில்லியில் நடைபெற்றது.

5. புதுடெல்லியில் 31.12.2016 மற்றும் 07.04.2017 அன்றைய தேதிகளில் நடைபெற்ற ஒருங்கிணைந்த செயற்குழு கூட்டத்திலும் மற்றும் 02.01.2017 அன்று இலங்கையில் கொழும்புவில் நடைபெற்ற அமைச்சர்களுக்கிடையேயான கூட்டத்திலும் மீனவர்களின் துயரம் அழுத்தமாக எடுத்துரைக்கப்பட்டது.

6. தமிழக அரசின் அயராத தொடர் முயற்சிகளால், 2016 ஆம் ஆண்டில் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் வாடிய 290 மீனவர்களும், ஐக்கிய அரபு நாட்டில் ‘அஜ்மான்’ சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட 23 தமிழக மீனவர்களும், தமிழ் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர். மேலும், 2017 ஆம் ஆண்டில் (27.06.2017 வரை), ஈரான் கடலோர பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்ட 30 மீனவர்களும் மற்றும் இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட 123 மீனவர்களும் தாயகம் அழைத்துவரப்பட்டனர்.

7. இலங்கை கடற்படையால் கைதுசெய்யப்பட்ட மற்றும் இயந்திர கோளாறால் அடித்துச்செல்லப்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 18 மீனவர்களின் படகுகள் நீண்ட காலமாக பராமரிப்பின்றி இலங்கை கடற்பகுதியில் மூழ்கின. இந்த மீனவர்களின் வறிய நிலை மற்றும் அவர்களது படகுகளை மீட்க இயலாத

நிலையினை கருத்தில் கொண்டு, ஒவ்வொரு மீனவருக்கும் தலா ரூ.5 இலட்சம் வீதம் ஆக மொத்தம் ரூ. 90 இலட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து விடுவிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு, அந்நிவாரணத்தொகை 19.04.2017 அன்று மீனவர்களுக்கு வழங்கப்பட்டது.

8. அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமான, பாக் வளைகுடா பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபடும் இழு வலை படகுகளை, ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக மாற்றும் திட்டத்திற்கு ஒரு படகிற்கு அதிகபட்ச மானியமாக ரூ.56 இலட்சம் (70 விழுக்காடு) வீதம் 500 இழுவலை படகுகளை, ஆழ்கடல் செவுள்வலையுடன் கூடிய தூண்டில் முறை சூரை மீன்பிடி படகுகளாக மாற்றுவதற்கு, 2017-18 ஆம் ஆண்டில் ரூ.286 கோடிக்கு (மத்திய அரசு– ரூ.200 கோடி மற்றும் மாநில அரசு – ரூ.86 கோடி) அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

9. கடலில் மீன்பிடிக்கும் போது உயிரிழந்த அல்லது காணாமல்போன அல்லது அயல்நாட்டினரால் சிறைபிடிக்கப்பட்டு தாயகம் அழைத்துவரப்பட்ட 155 மீனவர்களின் குடும்பங்களுக்கு ரூ.4.25 கோடி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் 104 மீனவ குடும்பங்களுக்கு ரூ.3.47 கோடியும்,

2017 ஆம் ஆண்டில் (30.06.2017 வரை), 51 மீனவ குடும்பங்களுக்கு ரூ.78 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

10. 2017-18 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு மீன்வளம், நிதி மற்றும் பணியாளர்(ம) நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, விற்பனை வரியிலிருந்து விலக்களித்து, இயந்திர மீன்பிடி படகு ஒன்றிற்கு வழங்கப்படும் டீசலின் அளவை, ஆண்டு ஒன்றிற்கு 15,000 லிட்டரிலிருந்து 18,000 லிட்டராகவும், இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகு ஒன்றிற்கு வழங்கப்படும் டீசலின் அளவை, ஆண்டு ஒன்றிற்கு 3,600 லிட்டரிலிருந்து 4,000 லிட்டராகவும் அரசு உயர்த்தி வழங்கியுள்ளது. இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகு ஒன்றிற்கு லிட்டருக்கு ரூ. 25/- என்ற மானிய விலையில் வழங்கப்படும் மண்ணெண்ணெயின் அளவையும், ஆண்டு ஒன்றிற்கு 3,000 லிட்டரிலிருந்து 3,400 லிட்டராக அரசு உயர்த்தி வழங்கியுள்ளது.

11. இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூரில் ரூ.113.90 கோடி செலவில் மீன்பிடி துறைமுகம் அமைக்கும் பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

12. இந்த அரசின் புதிய முயற்சியாக, மீன்பிடிக்கையில் ஆழ்கடலில் ஏற்படும் ஆபத்து தருணங்களில் மீனவர்களின் உயிர் மற்றும் மீன்பிடி உடைமைகளை உடனடியாக காப்பாற்றிட தேவையான மீட்பு நடவடிக்கைகளை எடுக்க

சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு தகவல் எச்சரிக்கை அளித்து, மீனவர்கள் இருக்குமிடத்தினை துல்லியமாக அறிய ஏதுவாக, செயற்கை கோள் உதவியுடன் புவிநிலை இருப்பு அமைப்பு (Global Positioning system) பொருத்தப்பட்டுள்ள 1,600 ஆபத்துக்கால எச்சரிக்கை தகவல் பரப்பும் கருவிகள் (Distress Alert Transmitters)ரூ.2.38 கோடி செலவில் 2016-17 ஆம் ஆண்டில் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

13. மீன்வள கூட்டு மேலாண்மை, அறிவுசார் மேலாண்மை திறன் மேம்படுத்துதல், வாழ்வாதாரத்திற்கு உதவியளித்தல், மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட கம்பியில்லா தொலை தொடர்பு வசதியினை ஏற்படுத்துதல் மற்றும் மீன்பிடிப்பு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற திட்டங்கள் கடலோர பேரிடர் அபாயம் குறைப்புத் திட்டத்தின் (Coastal Disaster Risk Reduction Project(CDRRP)) கீழ் செயல்படுத்திட, உலக வங்கி ரூ.321.30 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

14. அயல் நாடுகளில் பின்பற்றப்படும் மீன்வள கூட்டுமேலாண்மை முயற்சியில் தற்போதைய வளர்ச்சி குறித்தான அறிவுத்திறனை மேம்படுத்துவதற்காக, மீன்வளத்துறையில் பணிபுரியும் 15 அலுவலர்கள் வியட்நாம் நாட்டிற்கும், 4 அலுவலர்கள் ஆஸ்திரேலியாவிற்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

15. கடலில் மீன்பிடிக்கும் போது மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட, தமிழ்நாட்டிலுள்ள 13 கடலோர மாவட்டங்களிலுள்ள இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு 49,500 விலையில்லா உயிர் காப்பு மிதவைகள் (Lifebuoys) வழங்கப்பட்டுள்ளன.

16. மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதாரமாக 10 மிதவை கூண்டுகள் காஞ்சிபுரம், இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டடங்களில் நிறுவப்பட்டு மீனவர்களால் மீன்வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் 5.42 டன் மீன்கள் அறுவடைசெய்யப்பட்டு பயனாளிகளால் ரூ.16.95 இலட்சம் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

17. கடந்த 12.12.2016 அன்று சென்னைக்கு அருகே கரையைக் கடந்த “வர்தா” புயல் காரணமாக திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு, அவர்களது வாழ்வாதார நடவடிக்கைகளை மீள தொடங்குவதற்கு நிவாரணமாக, ரூ.19.13 கோடியை அரசு விடுவித்துள்ளது.

18. கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் மற்றும் சின்னமுட்டம், மற்றும் நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகங்கள் அமைக்கும் பணிகள் நிறைவுற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டன .

19. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மணக்குடி மீனவ கிராமத்தில், அரசு மற்றும் தனியார் பங்களிப்பில் (Public-

Private Partnership) வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, இயக்குதல், மற்றும் மாற்றுதல் (Design Build Finance Operate and Transfer (DBFOT)) அடிப்படையில் மீன்பிடிதுறைமுகம் அமைக்க அரசு, கொள்கை அளவில் இசைவினை அளித்துள்ளது.

20. தமிழ்நாட்டில் நகரங்கள் மற்றும் மாநகரங்களிலுள்ள மீன்விற்பனை சந்தைகள் ரூ.14.25 கோடியில் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன.

21. கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநில அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக, மாநிலத்தின் மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் அதன் தேவை ஆகியவற்றிற்கான இடைவெளி 2015-16 ஆம் ஆண்டில் 8.73 கோடியிலிருந்து 2016-17 ஆம் ஆண்டில் 6 கோடியாகக் குறைந்துள்ளது.

22. ‘அரசால் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, நடுக்குப்பத்தில் தற்காலிக மீன்விற்பனை சந்தை ரூ.14.43 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது மற்றும் நிரந்தர மீன் விற்பனை சந்தை அமைக்கும் பணி முன்னேற்றத்திலுள்ளது. ‘ஜல்லிக்கட்டு’ தொடர்பான வன்முறையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்க ரூ.32.75 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

23. திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் எண்ணெய் கசிவால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட

30,000 மீனவ குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணமாக ஒவ்வொரு மீனவ குடும்பத்திற்கும் ரூ.5,000/- வீதம் மொத்தம் ரூ.15 கோடி அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 06.03.2017 அன்று நிவாரணம் வழங்கப்பட்டது.

24. மேலும், விபத்திற்கு காரணமான கப்பல் நிறுவனத்திடமிருந்து பெருநிறுவன சமூக பொறுப்பு நிதி தொகுப்பிலிருந்து வழங்கப்பட்ட நிதியிலிருந்து திருவள்ளூர் மற்றும் சென்னை மாவட்டங்களிலுள்ள 2 இடங்களில் மீன்விற்பனை சந்தைகள் ரூ.75 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் கட்டுவதற்கு அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

25. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, பன்னிரெண்டாவது வகுப்பு தேர்ச்சி பெற்ற, மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள மீனவ இளைஞர்களுக்கு மாற்று வாழ்வாதாரமாக, இந்திய கடற்படை மற்றும் இந்திய கடலோர காவற்படையில் வேலை வாய்ப்பினைப் பெற்றிட தேவைப்படும் சிறப்பு பயிற்சி வழங்கிட அரசு ரூ.1.04 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

26. தமிழ் நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலம் சில்லரை மீன் விற்பனை அங்காடிகள், நடமாடும் மீன் விற்பனை அலகுகள், மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட மீன் பொருட்கள் தயாரிக்கும் சமையலறை கூடம் ஆகியவற்றினை உருவாக்கி தரமான மீன்களையும் மதிப்பு கூட்டப்பட்ட மீன் உணவு பொருட்களையும் சுகாதாரமான சூழலில் நுகர்வோருக்கு

வழங்கிட ஏதுவாக, ரூ.4.92 கோடிக்கு அரசு நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

27. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 2016-17 ஆம் ஆண்டில் வரி செலுத்தும் முன் உள்ள இலாபமாக ரூ.11.85 கோடி (தணிக்கை செய்யப்படாதது) ஈட்டியுள்ளது.

28. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 2015-16 ஆம் ஆண்டிற்கு ஈவுத் தொகையாக, ரூ.1.82 கோடி அரசுக்கு செலுத்தியுள்ளது. மேலும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ரூ.1 கோடி வழங்கியுள்ளது.

29. உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு–2015-ல், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் மூலம் ரூ.500 கோடி முதலீட்டிலான 4 திட்டங்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இத்திட்டங்கள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திலுள்ளன.

30. மீன்வளப் பிரிவுகளில் தேவைப்படும் பயிற்சி பெற்ற தொழில்நுட்ப மனித வளத் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு மீன்வளப் பல்கலைகழகத்தில் பட்டதாரி மாணவர்கள் சேர்க்கை 80 லிருந்து 110 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## 4. தமிழகத்தின் மீன்வளம் – ஒரு கண்ணோட்டம்

தமிழ்நாட்டின் மீன்வளமானது கடல் மீன்வளம், உள்நாட்டு மீன்வளம் மற்றும் உவர்நீர் மீன்வளம் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. 2016-17ஆம் ஆண்டில் தமிழ்

நாட்டின் மொத்த மீன் உற்பத்தி 6.69 இலட்சம் டன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் 4வது இடத்தை வகிக்கும் தமிழ்நாடு, 79,336 மெட்ரிக் டன் கடல் பொருட்களை ஏற்றுமதி செய்து 2016-17 ஆம் ஆண்டில் ரூ.3,914.39 கோடி அந்நியச் செலாவணியை ஈட்டியுள்ளது.

**4.1 கடல் மீன்வளம்**

தமிழ்நாடு 13 கடலோர மாவட்டங்களை உள்ளடக்கி, 1,076 கி.மீ நீளமுள்ள, இந்தியாவிலேயே இரண்டாவது நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் 608 மீனவ கிராமங்களில் வசிக்கும் கடலோர மீனவ மக்கட்தொகை 9.85 இலட்சமாகும். 1,016 கி.மீ. நீளமுள்ள கிழக்கு கடற்கரை மற்றும் 60 கி.மீ. நீளமுள்ள மேற்கு கடற்கரையை ஒட்டிய அண்மைக் கடல் பகுதிகளில் மீன்வள ஆதாரங்கள் அதிகபட்ச அளவில் பிடிக்கப்பட்ட நிலையில், தூரக்கடல் மற்றும் ஆழ்கடல் பகுதியில் உள்ள மீன்வளம் இன்னும் உகந்த அளவிற்கு பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளது. மாநிலத்தின் கடல் மீன் உற்பத்தி, தற்போது 4.72 இலட்சம் டன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கடல் மீன்வளம் குறித்த சிறு கண்ணோட்டம் அட்டவணை 1ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: 1**

**கடல் மீன்வளம் குறித்த புள்ளி விவரங்கள் 2016-17**

| | |
|---|---|
| கடற்கரை நீளம் | 1,076 கி. மீ. |
| பிரத்யேக பொருளாதார மண்டலம், (Exclusive Economic Zone (EEZ) | 1.9 இலட்சம் ச.கி.மீ |
| கண்டத்திட்டு (Continental shelf) | 41,412 ச..கி..மீ |
| கடலோர மாவட்டங்கள் | 13 |
| மீனவ கிராமங்கள் | 608 |
| கடலோர மீனவ மக்கட்தொகை (உத்தேச மதிப்பீடு) | 9.85 இலட்சம் * |
| **பதிவு செய்யப்பட்ட மீன்பிடிக் கலன்கள் (இணையதளம் மூலம்) (30.06.2017)** | |
| 1. மீன்பிடி விசைப்படகுகள் | 5,861 |
| 2. நாட்டுப்படகுகள் (இயந்திரம் பொருத்தப்பட்டவை மற்றும் இயந்திரம் பொருத்தப்படாதவை ) | 35,666 (30,239 + 5,427) |
| **உட்கட்டமைப்பு வசதிகள்** | |
| பெரிய மீன்பிடி துறைமுகங்கள் | 5 (சென்னை, தூத்துக்குடி சின்னமுட்டம், குளச்சல் மற்றும் மு ட்டம்(ppp)) |
| கட்டுமானப் பணிகள் நடைபெற்று வரும் பெரிய மீன்பிடி துறைமுகங்கள் | 3 (தேங்காப்பட்டினம், பூம்புகார் மற்றும் மூக்கையூர்) |
| நடுத்தர மீன்பிடி துறைமுகங்கள் | 4 (பழையாறு, மல்லிப்பட்டினம், கடலூர், நாகப்பட்டினம்) |
| மீன் இறங்கு தளங்கள் / படகு அணையும் தளம் | 36 |
| மீன் இறங்கு மையங்கள் | 254 |
| கடல்மீன் உற்பத்தி (2016-17) | 4.72 இலட்சம் டன் * |
| கடல்பொருள் ஏற்றுமதி (2016-17) | 79,336 மெட்ரிக் டன்** (மதிப்பு ரூ.3194.39 கோடி ) |

ஆதாரம் :

* தமிழ்நாடு மீன்வளத்துறை புள்ளி விவரங்கள்

** கடல்பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம்(MPEDA)

## 4.2 உள்நாட்டு மீன்வளம்

தமிழ்நாட்டில் மீன்வளர்ப்பிற்கு உகந்த நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறிய பாசன குளங்கள், பருவ மழையினால் நிரம்பும் குறுகிய கால குளங்கள் மற்றும் குட்டைகள், ஆறுகள், கழிமுகங்கள் மற்றும் இதர நீர்நிலைகளை உள்ளடக்கிய, பல்வேறு உள்நாட்டு நீர்வள ஆதாரங்கள் 3.83 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் உள்ளன. உள்நாட்டு மீனவ மக்கட் தொகையானது 2.29 இலட்சம் ஆகும். காலம் தவறிய குறைவான பருவமழையினாலும், குளம் மற்றும் குட்டைகளில் குறுகிய காலமே நீர் இருப்பதாலும் குறுகிய காலத்தில் வேகமாக வளரும் மீன் இனங்களான 'அமூர் கெண்டை', (Amur carp) 'மரபுவழி மேம்படுத்தப்பட்ட பண்ணை திலேப்பியா' (Genetically Improved Farmed Tilapia (GIFT)), 'ஜெயந்தி ரோகு' மற்றும் கெளுத்தி வகையைச் சார்ந்த 'பங்கேசியஸ்' (Pangassius) போன்ற மீன் இனங்களை இருப்பு செய்வது அவசியமாகிறது. உள்நாட்டு மீன்வளம் குறித்த சிறு கண்ணோட்டம் அட்டவணை 2–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: 2**

**உள்நாட்டு மீன்வளம் குறித்த புள்ளி விவரங்கள் (2016-17)**

| | | |
|---|---|---|
| உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள் | : | 3.83 இலட்சம் ஹெக்டேர் |
| நீர்த்தேக்கங்கள் (78 எண்ணிக்கை*) | : | 62,015 ஹெக்டேர் |
| நீண்டகால மற்றும் குறுகியகால குளங்கள் | : | 2,65,819 ஹெக்டேர் |
| உவர்நீர் பரப்பளவு | : | 56,000 ஹெக்டேர் |
| உள்நாட்டு மீனவ மக்கட்தொகை (உத்தேச மதிப்பீடு) | : | 2.29 இலட்சம் |
| **மீன்குஞ்சு உற்பத்தி மையங்கள்** | : | |
| i) அரசு மீன்பண்ணைகள் | : | 8 |
| ii) தனியார் மீன்பண்ணைகள் | : | 49 |
| **மீன்குஞ்சு வளர்ப்பு மையங்கள்** | : | |
| i) அரசு மீன்பண்ணைகள் | : | 39 |
| ii) தனியார் மீன்பண்ணைகள் | : | 180 |
| (2016-17 ஆம் ஆண்டு உள்நாட்டு மீன் உற்பத்தி) | : | 1.97 இலட்சம் டன் |

*பொதுப்பணித்துறையின் கீழ் மொத்தமுள்ள 78 நீர்த்தேக்கங்களில் 61 நீர்த்தேக்கங்கள் மீன்வளத்துறையால் மீன் வளர்ப்பிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் சராசரி மழை பெறும்போது உள்நாட்டு மீன்வள நீராதாரங்களிலிருந்து 4.50 இலட்சம் டன்கள் மீன் உற்பத்தி செய்ய இயலும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு 70 கோடி மீன்விரலிகள் தேவைப்படும். தமிழ்நாடு அரசு, தேசிய

வேளாண் அபிவிருத்தி திட்டம் (National Agriculture Development Programme - NADP), தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (National Fisheries Development Board-NFDB), தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டம் (Irrigated Agriculture Modernization and Water-Bodies Restoration and Management - IAMWARM) சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டம் (Special Area Development Programme-SADP), நபார்டு (National Bank for Agriculture and Rural Development - NABARD) போன்ற பல்வேறு திட்டங்களிலிருந்து நிதியுதவியினைப் பெற்று, அரசு மீன்பண்ணைகள் மேம்படுத்தப்பட்டதோடு, தனியார் மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்களை உருவாக்கிடவும் ஊக்குவிக்கப்பட்டது. இதனால் கூடுதலாக 34.8 ஹெக்டேர் பரப்பளவில் அரசு மற்றும் தனியார் மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகள் உருவாக்கப்பட்டு, 2015-16ஆம் ஆண்டு மிக அதிக அளவில் முன்னெப்பொழுதும் இல்லாத அளவான 64 கோடி மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு மீன்குஞ்சு தேவை மற்றும் உற்பத்திக்கிடையிலான இடைவெளி 6 கோடியாக குறைந்துள்ளது.

2016 ஆம் ஆண்டில், வடகிழக்கு பருவமழை பொய்த்ததின் காரணமாக தமிழ் நாட்டிலுள்ள அனைத்து நீர்நிலைகளிலும் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு நீர் இருப்பின்றி வறண்டதால், மாநிலத்தின் உள்நாட்டு மீன் வளப்பணிகள் வெகுவாக பாதிக்கப்பட்டன. 2016-17 ஆம் ஆண்டில் மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தி முந்தைய ஆண்டு மீன் உற்பத்தியான 2.42 இலட்சம் டன்களிலிருந்து 1.97 இலட்சம் டன்களாகக் குறைந்துள்ளது. மேலும், தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களும் வறட்சிக்கு இலக்கான பகுதிகளாக அரசு அறிவித்துள்ளது.

### 4.3 உவர்நீர் மீன்வளம்

தமிழ்நாட்டில், மொத்த உவர்நீர் பரப்பளவு 56,000 ஹெக்டேர் ஆக உள்ளது. இது மீன்பிடிப்பிற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் 7,100 ஹெக்டேர் பரப்பளவில் கடலோர நீர்வாழ் உயிரின உற்பத்தி குறிப்பாக இறால்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் இறால் வளர்ப்பு தொழில் போதுமான அளவில் வளர்ச்சி பெற்று, குறிப்பிட்ட நோய்கிருமிகளற்ற "வெனாமி" இறால்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, ஒரு பெரிய பொருளாதார

செயல்பாடாக உருவெடுத்துள்ளது. இதுவரை 1,739 இறால் பண்ணைகள் (3,607.56 ஹெக்டேர்) மற்றும் 51 இறால் குஞ்சு பொரிப்பகங்கள், இந்திய கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணை சட்டம் 2005–ன் படி பதிவு செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட வாரியாக, கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் பதிவினைப் பெற்ற இறால் பண்ணைகள் மற்றும் இறால் குஞ்சு பொரிப்பகங்கள் விவரம் அட்டவணை 3ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை :3**

**மாவட்ட வாரியாக கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் பதிவினை பெற்ற இறால் பண்ணைகள் மற்றும் பொரிப்பகங்கள்**

| வ. எண் | மாவட்டம் | பதிவு செய்யப்பட்ட இறால் பண்ணைகள் | | வெனாமி இறால் வளர்ப்பிற்காக அனுமதி பெற்ற பண்ணைகள் | | இறால் குஞ்சு பொரிப்பகம் |
|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | நீர் பரப்பு (ஹெக்.) | எண்ணிக்கை | நீர் பரப்பு (ஹெக்.) | எண்ணிக்கை |
| 1 | திருவள்ளூர் | 52 | 159.36 | 7 | 67.38 | - |
| 2 | காஞ்சிபுரம் | 74 | 96.18 | 12 | 27.84 | 18 |
| 3 | விழுப்புரம் | 25 | 44.68 | - | - | 28 |
| 4 | கடலூர் | 129 | 227.46 | 8 | 49.95 | 1 |
| 5 | நாகப்பட்டினம் | 809 | 1,512.55 | 56 | 257.59 | 3 |
| 6 | திருவாரூர் | 160 | 446.48 | 10 | 70.64 | - |
| 7 | தஞ்சாவூர் | 300 | 615.32 | 18 | 129.61 | - |
| 8 | புதுக்கோட்டை | 57 | 161.15 | 1 | 6.00 | - |
| 9 | இராமநாதபுரம் | 111 | 252.68 | - | - | 1 |
| 10 | தூத்துக்குடி | 21 | 91.20 | 3 | 73.04 | - |
| 11 | கன்னியாகுமரி | 1 | 0.5 | - | - | - |
| | **மொத்தம்** | **1,739** | **3,607.56** | **115** | **688.05** | **51** |

## 5. நிர்வாக அமைப்பு

மீன்துறை ஆணையர் / இயக்குநர், துறையின் தலைவராக உள்ளார். மேலும், மீன்துறை ஆணையர் / இயக்குநர், தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநராகவும், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் உள்பட அனைத்து மீனவ கூட்டுறவு சங்கங்களின் நடைமுறை சார்ந்த பதிவாளராகவும் மற்றும் தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் உறுப்பினர் செயலராகவும் உள்ளார்.

மீன்வள மேம்பாடு மற்றும் மீனவர் நலத்திட்டங்கள், 47 மீன்துறை உதவி இயக்குநர்களின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இச்செயல்பாடுகளைக் கண்காணிக்கவும் மற்றும் மேற்பார்வையிடவும், மாநில அளவில் 10 மண்டலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில், சென்னை, நாகப்பட்டினம், தூத்துக்குடி ஆகிய 3 மண்டலங்கள் மீன்துறை இணை இயக்குநர்கள் தலைமையிலும் மற்றும் கடலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, பவானிசாகர், தருமபுரி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 7 மண்டலங்கள் மீன்துறை துணை இயக்குநர்கள்


தலைமையிலும் இயங்கி வருகின்றன. மேலும், தலைமைப் பொறியாளர் தலைமையில் செயல்பட்டுவரும் பொறியியல் பிரிவு, சென்னை, நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் நாகர்கோயில் என 4 கோட்டங்களாக பிரிக்கப்பட்டு, 13 உபகோட்டங்களின் மூலமாக பொறியியல் பணிகள் கண்காணிக்கப்படுகின்றன.

பாக் வளைகுடா மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களை கண்காணித்து திறம்பட செயல்படுத்திடவும், 6 தென் மண்டலங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் கடல் மற்றும் உள்நாட்டு மீன்வளப் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்திடவும், ஒரு கூடுதல் மீன்துறை இயக்குநர் பணியிடம் அரசாணை (டி) எண்.123, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மற்றும் மீன் துறை நாள்.31.05.2017-ன்படி உருவாக்கப்பட்டு, இந்திய ஆட்சிப்பணி நிலையில் உள்ள அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மீன்வளத்துறையின் நிர்வாக அமைப்பு பின்வரும் படம் 1—ல் காட்டப்பட்டுள்ளது.

படம்:1

மீன்வளத்துறை – நிர்வாக அமைப்பு




மீன்வளத்துறையின் ஒப்பளிக்கப்பட்ட மொத்தப் பணியாளர்கள் எண்ணிக்கை 1,689 ஆகும், பதவி வாரியாக ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் விவரம் அட்டவணை 4ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: 4**
**பதவி வாரியாக ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள்**

| வ.எண் | பதவியின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1. | கூடுதல் மீன்துறை இயக்குநர் | 05 |
| 2. | மீன்துறை இணை இயக்குநர் | 05 |
| 3. | மீன்துறை துணை இயக்குநர் | 13 |
| 4. | மீன்துறை துணை இயக்குநர் (பொறியியல்) | 01 |
| 5. | நிதி ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அலுவலர் | 01 |
| 6. | மீன்துறை துணை இயக்குநர் (பணியாளர்) | 01 |
| 7. | மீன்துறை உதவி இயக்குநர் | 51 |
| 8. | நேர்முக உதவியாளர் | 12 |
| 9. | துணை பதிவாளர் | 01 |
| 10. | கணக்கு அலுவலர் | 01 |
| 11. | மீன்துறை ஆய்வாளர் | 166 |
| 12. | கூட்டுறவு சார் பதிவாளர் | 15 |
| 13. | கடல் முதல்வர் | 14 |
| 14. | மீன்துறை சார் ஆய்வாளர் | 85 |
| 15. | கூட்டுறவு முதுநிலை ஆய்வாளர் | 27 |
| 16. | இதர பணியாளர்கள் | 1,191 |
| | **மொத்தம்** | **1,589** |

| பொறியியல் பிரிவு | | |
|---|---|---|
| வ. எண் | பதவியின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
| 1. | தலைமைப்பொறியாளர் | 01 |
| 2. | செயற்பொறியாளர் | 06 |
| 3. | உதவி செயற்பொறியாளர் | 14 |
| 4. | உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 30 |
| 5. | முதுநிலை வரைவு அலுவலர் | 01 |
| 6. | வரைவு அலுவலர் | 08 |
| 7. | இளநிலை வரைவு அலுவலர் | 04 |
| 8. | கோட்ட கணக்கு அலுவலர் | 04 |
| 9. | தொழில்நுட்ப உதவியாளர் | 23 |
| 10. | இதர பணியாளர்கள் | 09 |
| | **மொத்தம்** | **100** |

2016-17ஆம் ஆண்டில், பல்வேறு நிலையிலுள்ள 144 பணியிடங்கள் மீன்வளத்துறையால் நிரப்பப்பட்டுள்ளன. இவை தவிர, நடப்பாண்டில் 11 மீன்துறை உதவி இயக்குநர்கள் மற்றும் 10 உதவியாளர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். பல்வேறு நிலைகளிலுள்ள 151 பணியிடங்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் விரைவில் நிரப்பப்படவுள்ளன.

## 6. தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாத்தல்

### 6.1 “கச்சத் தீவினை திரும்பப் பெறுதல்” – பிரச்சனைகள் மற்றும் தற்போதைய நிலைமை

கச்சத்தீவினை இந்தியாவிற்கு மீளப்பெறுதல் மற்றும் பாக் வளைகுடா பகுதியில் தமிழ் நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை நிலைநாட்டுதல் ஆகியன தமிழ்நாடு அரசின் முதன்மையான குறிக்கோள்களாகும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தனிப்பட்ட முறையில் உச்சநீதிமன்றத்தில் கச்சத்தீவினை மீட்பது தொடர்பாக 2008-ல் தொடரப்பட்ட வழக்கு எண். 561/2008-ல், தமிழக அரசின் வருவாய்துறையினையும் ஒரு வாதியாக இணைத்துக் கொள்ள, கடந்த 2011ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மேற்காணும் வழக்கில் வருவாய்த்துறையால் ஒரு இணைப்பு பிரேரணை தாக்கல் செய்யப்பட்டு, தமிழ்நாடு அரசு தன்னையும் இந்த வழக்கில் இணைத்துக் கொண்டது.

மேலும், 1960ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் “பெருபாரி” வழக்கில், இந்திய நாட்டுக்குச் சொந்தமான ஒரு

பகுதியை அந்நிய நாட்டிற்குக் கொடுப்பது தொடர்பான உடன்பாட்டை, நாடாளுமன்றத்தின் ஒப்புதலோடு இந்திய அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தின் மூலம் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும் என அளித்த தீர்ப்பின் அடிப்படையில், 1974 மற்றும் 1976ஆம் வருடத்திய இந்திய–இலங்கை ஒப்பந்தங்கள் சட்டப்பூர்வமாக செல்லுபடியாகாது என்ற நிலைப்பாட்டினை முன்னிறுத்தி, கச்சத்தீவை திரும்பப் பெறும் வகையில், 03.05.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் மற்றொரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மேலும், கச்சத்தீவினை திரும்பப் பெறவும், தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை நிலைநாட்டவும், மேலும் ஒரு தீர்மானம் 05-12-2014 அன்று, தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், கடந்த 3.6.2014, 7.8.2015 மற்றும் 14.6.2016 ஆகிய நாட்களில் மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களிடம் அளிக்கப்பட்ட கோரிக்கை மனுவில், 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை இரத்து செய்து, கச்சத்தீவினை மீளப்பெற்று தமிழ்நாட்டு மீனவர்களின்

பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிரந்தரமாக நிலைநாட்டிட வலியுறுத்தியுள்ளார்கள்.

கச்சத்தீவில் தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய உரிமையை நிலைநாட்டுவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதல்களின்படி அரசு மேற்கொண்ட இடைவிடாத முயற்சிகளின் பயனாக, 23.12.2016 அன்று நடைபெற்ற புனித அந்தோணியார் புதிய தேவாலயத்தை புனிதப்படுத்தும் விழாவில் 100 தமிழ்நாட்டு மீனவர்கள் கலந்து கொள்ள மத்திய அரசு தனது தடையில்லாச் சான்றினை வழங்கியது. இதன் பயனாக நமது தமிழ்நாட்டு மீனவர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.

கச்சத்தீவு மீதான இந்தியாவின் இறையாண்மையை நிலைநாட்டி, பாரம்பரிய மீன்பிடிப்பு பகுதிகளில் மீன்பிடிக்கும் உரிமையை நிலைநாட்டுவதன் மூலமே, நமது மீனவர்கள் தொடர்ந்து சந்தித்து வரும் இப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்ற தனது நிலைப்பாட்டினை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்திவருகிறது.

## 6.2 மீனவர்கள் துன்புறுத்துதலை தடுக்கவும் மற்றும் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடி படகுகளை விடுவிக்கவும் அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

தமிழக மீனவர்கள், தங்களின் வாழ்வாதாரத்திற்காக பாரம்பரிய மீன்பிடி பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபடும் பொழுது, அவர்களது பாதுகாப்பினை உறுதி செய்வதை தமிழக அரசு முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. தமிழக மீனவர்கள் தொன்றுதொட்டு பாரம்பரியமாக அனுபவித்து வரும் மீன்பிடி உரிமையை நிலைநாட்டி பாதுகாக்க தமிழ்நாடு அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகிறது. இலங்கை கடற்படையால் தொடர்ந்து சிறைபிடித்தல், அவர்கள் மீது தாக்குதல்கள் நிகழ்த்துதல் மற்றும் துன்புறுத்துதல் போன்ற செயல்கள், அவர்களது வாழ்வுரிமை, வாழ்வாதாரம் மற்றும் பாக் வளைகுடாப் பகுதியில் பாரம்பரியமான மீன்பிடிப்பு பகுதியில் மீன்பிடிக்கும் உரிமைகளின் மீது அத்துமீறுவதாகவும் அமைந்துள்ளது. தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் தொடர் தாக்குதல் நிகழ்வுகள், துன்புறுத்துதல், சிறைபிடித்தல் மற்றும் நீண்ட நாட்களாக நமது அப்பாவி மீனவர்களை இலங்கை சிறையில் நிறுத்திவைத்தல் ஆகிய நிகழ்வுகளில் ஆழ்ந்த அக்கறை கொண்ட மாண்புமிகு

புரட்சித் தலைவி அம்மாவின் அரசு இதுவரை, 129 கடிதங்கள் வாயிலாக இந்நிகழ்வுகளை மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளது.

மேலும், மத்திய அரசு தனது அனைத்து விதமான இராஜாங்க ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொண்டு, கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை உடனடியாக விடுவித்திடுவதை உறுதி செய்யவும், மீண்டும் அத்தகைய நிகழ்வுகள் நடப்பதைத் தடுத்திடவும், தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள்.

இலங்கை அரசால் முடக்கி வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்களின் 79 படகுகளை உடனடியாக விடுவித்திட அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கடந்த 05.12.2014 அன்று, தமிழக சட்டமன்ற கூட்டத்தில் தமிழக அரசால் தீர்மானம் ஏகமனதாக இயற்றப்பட்டது. மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இடைவிடாத முயற்சியின் பயனாக, இலங்கை அரசால் 2014 ஜுன் மாதம் முதல் முடக்கி வைக்கப்பட்டிருந்த எஞ்சிய 80 படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

விடுவிக்கப்பட்ட 80 படகுகளில், முதற்கட்டமாக 34 படகுகள் **19.03.2015** அன்றும் இரண்டாம் கட்டமாக 30 படகுகள் 30.04.2015 அன்றும் தமிழகத்திற்கு கொண்டுவரப்பட்டன. எஞ்சிய 16 படகுகள் கடலில் மூழ்கியமையால் தமிழகம் கொண்டுவர இயலவில்லை. இலங்கை அரசால் கைப்பற்றப்பட்ட 18 படகுகள் (மோசமான வானிலை / இயந்திர பழுதால் இலங்கை கடற்பகுதிக்குள் மூழ்கிய இரு படகுகள் உட்பட) சீர்செய்து பயன்படுத்த இயலாத அளவிற்கு பாதிப்பிற்குள்ளானதை கருத்தில் கொண்டு, பாதிக்கப்பட்ட 18 மீனவர்களுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதம் ஆக மொத்தம் ரூ.90 இலட்சம் சிறப்பு உதவியாக இந்த அரசால் வழங்கப்பட்டது.

2017ஆம் ஆண்டில், 165 தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டனர், அவர்களுள் 123 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டு தாயகம் அழைத்து வரப்பட்டனர். மேலும், நாளது தேதி (30.06.2017) வரை இலங்கை அரசால் கைது செய்யப்பட்டுள்ள 42 மீனவர்கள் மற்றும் இலங்கை அரசால் முடக்கிவைக்கப்பட்டுள்ள 141 படகுகளை விடுவித்திடவும் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இடைவிடாத முயற்சி மற்றும் உறுதியான நடவடிக்கைகளின் பயனாக கடந்த மே 2011 முதல் 2,664 மீனவர்களும், அவர்களது 357 மீன்பிடி படகுகளும் பின்வரும் விவரப்படி இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு தமிழகம் அழைத்து வரப்பட்டனர். அதன் விவரம் பின்வருமாறு.

**அட்டவணை:5**
**இலங்கையிலிருந்து விடுவிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் படகுகள் விவரம்**

| வருடம் | விடுவிக்கப்பட்ட மீனவர்கள் | விடுவிக்கப்பட்ட படகுகள் |
|---|---|---|
| 2011 | 222 | 40 |
| 2012 | 219 | 39 |
| 2013 | 645 | 119 |
| 2014 | 787 | 158 |
| 2015 | 378 | 1 |
| 2016 | 290 | 0 |
| 2017 | 123 | 0 |
| **மொத்தம்** | **2,664** | **357** |

## 6.3 இந்திய இலங்கை மீனவர் அளவிலான பேச்சுவார்த்தை

இந்திய இலங்கை நாடுகளை சேர்ந்த மீனவ சங்கங்களிடையே கருத்துகளை பரிமாறிக் கொள்வதற்கு ஏதுவாக, நேரிடை பேச்சு வார்த்தையை நடத்த வேண்டும் என்ற தமிழக மீனவ சங்கங்களின் உணர்வுப் பூர்வ

விருப்பத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்று, தமிழ்நாடு மற்றும் இலங்கை மீனவர்களுக்கு இடையேயான பேச்சு வார்த்தையை சென்னையில் நடத்துவதற்கு ஏற்பாடுகளை செய்திடுமாறு மத்திய அரசினை கேட்டுக் கொண்டார்கள். அதன்பேரில், முதற்கட்ட பேச்சுவார்த்தை கடந்த 27-01-2014 அன்று சென்னையிலும், அடுத்தகட்ட பேச்சுவார்த்தை இலங்கையிலுள்ள கொழும்புவில் 12.05.2014 அன்றும், மூன்றாம் கட்ட பேச்சு வார்த்தை 24.3.2015 அன்று சென்னையிலும் நடைபெற்றன.

தமிழ்நாடு மற்றும் இலங்கை மீனவ பிரதிநிதிகளுக்கிடையே பேச்சுவார்த்தை நடத்திட தேவையான வசதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசால் அளிக்கப்பட்டு, மீனவர்களுக்கிடையேயான நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தை 02.11.2016 அன்று புதுடில்லியில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தமிழ்நாட்டு மீனவர்கள் சந்தித்து வரும் துயரங்கள் அழுத்தமாக எடுத்துரைக்கப்பட்டன. புதுடெல்லியில் 31.12.2016 மற்றும் **07.04.2017** அன்றைய தேதிகளில் நடைபெற்ற ஒருங்கிணைந்த செயற்குழு கூட்டத்திலும் மற்றும் 02.01.2017 அன்று இலங்கை கொழும்புவில் நடைபெற்ற

அமைச்சர்களுக்கிடையேயான கூட்டத்திலும் மீனவர்களின் துயர்குறித்து விவாதிக்கப்பட்டது.

மீனவர்கள் அளவிலான பேச்சு வார்த்தையினை தொடர்ந்து நடத்திட தமிழ்நாடு அரசு உறுதிபூண்டுள்ளது.

## 7. கடல் மீனவர் – நலத்திட்டங்கள்

தமிழகத்தில் வாழும் மீனவர்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்திட, எப்பொழுதுமே முன்னுரிமை அளித்து, பல்வேறு நலத்திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. நலத்திட்டங்களின் பயன்கள் குறுகிய காலத்திற்குள் வெளிப்படையான வகையில் பயனாளிகளை சென்றடைவதை உறுதி செய்திடும் வகையில் அரசு, பல்வேறு நலத்திட்டங்களின் மூலம் வழங்கப்படும் நிதியுதவிகளை, பயனாளிகள் சேமிப்பு வங்கிக்கணக்கில் நேரடியாக சென்றடையும் விதமாக தேசிய மின்னணு பணப்பரிவர்த்தனை (NEFT) மூலம் விடுவித்து வருகிறது. பல்வேறு நலத்திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு :

**7.1 மீன்பிடி தடைக்காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிதிஉதவியான ரூ.2,000/-த்தை ரூ.5,000/- ஆக உயர்த்தி வழங்குதல்**

கடல் மீன்வளத்தைப் பேணிக்காத்திட, 2001 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த மீன்பிடி தடைக்காலம் 2017 ஆம் ஆண்டு முதல் 45 நாட்களிலிருந்து 61 நாட்களாக (கிழக்கு கடற்கரைப் பகுதியில் ஏப்ரல் 15 முதல் ஜுன் 14 வரையிலும், மேற்கு கடற்கரை பகுதியில் ஜுன் 15 முதல் ஆகஸ்ட் 14 வரையிலும்) அதிகரிக்கப்பட்டுள்ளது. மீன்பிடிப்பு தடை செய்யப்பட்ட காலங்களில், மீன்பிடி படகுகளில் பணியாளர்களாகவும் / தினக்கூலிகளாகவும் தொழில் புரியும் மீனவர்கள், வருமானம் ஈட்டுவதற்கு வேறுவழியில்லாததால், அவர்களது குடும்பத்தினைப் பராமரிப்பதற்கு மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். மீன்பிடி படகுகளில் பணியாளர்களாகவும் / தினக்கூலிகளாகவும் கடல் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள ஏழை மீனவர்களின் துயரத்தை போக்கிட இந்த அரசு 2011ஆம் ஆண்டில் பதவியேற்ற பின், நிவாரண உதவித் தொகையினை, ரூ.1,000/-லிருந்து ரூ.2,000/-ஆக உயர்த்தியது.

தேர்தல் வாக்குறுதியினை நிறைவேற்றும் பொருட்டு, 2016-17ஆம் ஆண்டு நிதிநிலை கூட்டத் தொடரில் மீன்பிடி தடைக்கால நிவாரணம் ரூ.2,000/–த்திலிருந்து ரூ.5,000/- ஆக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து, இத்திட்டத்தினை 2017-18–ம் ஆண்டு முதல் செயல்படுத்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக 2017-18 ஆம் ஆண்டில், உயர்த்தப்பட்ட விகிதத்தில் மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகை வழங்கிடும் பொருட்டு ரூ.83.17 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு, இதுவரை (30.06.2017 முடிய) 13 கடலோர மாவட்டங்களில் 1,30,568 மீனவ குடும்பங்களுக்கு நிவாரணத்தொகை ரூ.65.28 கோடி தேசிய மின்னணு பணப் பரிமாற்றம் (NEFT) மூலம் பயனாளிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டது. இந்த உயர்த்தப்பட்ட நிவாரணத் தொகை வழங்கப்படுவதால் அரசுக்கு ஆண்டுதோறும் ரூ.49.65 கோடி கூடுதலாக செலவாகும்.

இத்திட்டம் 2017-18 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**7.2 மீன்பிடிப்பு குறைந்த காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகையாக வழங்கப்பட்டு வரும் ரூ.4,000/-த்தை ரூ.5,000/- ஆக உயர்த்தி வழங்குதல்.**

மீன்பிடி குறைவு காலத்தில் துயருறும் கடலோர மாவட்ட மீனவ குடும்பங்களின் துயரினை களைந்திடும் விதமாக, ரூ.4,000/- சிறப்பு நிவாரணமாக வழங்கும் புதிய திட்டம் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, 2011ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேர்தல் வாக்குறுதியினை நிறைவேற்றும் பொருட்டு, 2016-17ஆம் ஆண்டு நிதிநிலை கூட்டத் தொடரில் மீன்பிடிப்பு குறைவு காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகையாக வழங்கப்பட்டு வரும் ரூ.4,000/-த்தை ரூ.5,000/- ஆக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

2016-17 ஆம் ஆண்டில், இத்திட்டத்தினை செயல்படுத்த அரசு 82.50 கோடி ரூபாய் ஒப்பளிப்பு வழங்கியது. இது வரை, 13 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,55,403 கடல் மீனவ குடும்பங்களுக்கு ரூ.77.70 கோடி 'தேசிய மின்னணு பணப்பரிவர்த்தனை(NEFT)' மூலம்

பயனாளிகளின் வங்கிக்கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

உயர்த்தப்பட்ட உதவி தொகை ரூ.5,000/- வழங்கும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதால் அரசுக்கு ஆண்டுதோறும் 16.50 கோடி ரூபாய் கூடுதலாக செலவாகும்.

## 7.3 கடல் மீனவர்களுக்கான தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

இத்திட்டம் மத்திய–மாநில அரசுகளின் சம விகித நிதி பங்களிப்போடு, ஒவ்வொரு ஆண்டும் மீன்பிடிப்பு குறைவு காலத்தில் கடல் மீனவர்களுக்கு நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது.

மத்திய மாநில அரசுகளின் பங்களிப்புத் தொகையான ரூ.1,800/-உடன் (தலா ரூ 900/- வீதம்) மீனவரின் பங்களிப்புத் தொகையினையும் சேர்த்து ரூ.2,700/- மீன்பிடிப்பு குறைவு காலங்களில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

2016-17 ஆம் ஆண்டில், அரசு தனது பங்காக ரூ.38.70 கோடியை (மத்திய மாநில அரசுகளின் பங்குத்தொகை) ஒப்பளித்துள்ளது. 13 கடலோர

மாவட்டங்களைச் சேர்ந்த 2,10,919 கடல் மீனவர்களுக்கு மொத்தம் ரூ.37.96 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. நிவாரணத் தொகை, தேசிய மின்னணு பணப் பரிமாற்றம் (NEFT) மூலம் பயனாளிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

2017-18ஆம் ஆண்டிற்கான நிதிநிலை கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின்படி தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரண உதவித்தொகை ரூ,2,700/- லிருந்து, ரூ,4,500/- ஆக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டது. இதற்காக, இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மாநில அரசின் பங்குத் தொகையினையும் தேவையான அளவிற்கு உயர்த்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, 2017-18 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்ட விகிதத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்திட பயனாளிகள் சேர்க்கைக்கான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 2017-18 ஆம் ஆண்டிற்கான மொத்த மாதாந்திர தவணைத் தொகையான ரூ.1,500/- வசூலிப்பதற்கும் அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மீனவரும், மாதமொன்றுக்கு

ரூ.175/- வீதம் 8 மாதங்களும், 9 வது மாதம் ரூ.100/- ஆக மொத்தம் ரூ.1500/- செலுத்துவர். இத்தொகையுடன் மத்திய மாநில அரசுகளின் பங்களிப்புத் தொகையான ரூ.3,000/- (துலா ரூ.1500/-வீதம்) சேர்க்கப்படும். மீனவரின் பங்களிப்புத் தொகையினையும் சேர்த்து மொத்தம் ரூ4,500/- மீன்பிடிப்பு குறைவு காலங்களில் பயனாளிகளுக்கு பட்டுவாடா செய்யப்படும்.

இந்த உயர்த்தப்பட்ட நிவாரண உதவித்திட்டம் 2017-18 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும்.

## 7.4 கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

இத்திட்டம், மாநிலத்திட்டமாக கடல் மீனவர்களுக்கு செயல்படுத்தப்படும் திட்ட வழிமுறைகளைப் பின்பற்றி மீனவ மகளிருக்கும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2016-17ஆம் ஆண்டில் அரசு தனது பங்காக ரூ.36.36 கோடியை ஒப்பளித்துள்ளது. தமிழகத்திலுள்ள 13 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,98,944 கடல் மீனவ மகளிருக்கு மொத்தம் ரூ.35.81 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. நிவாரணத் தொகை, தேசிய மின்னணு

பணப் ðKõ˜ˆî¬ù (NEFT) மூலம் பயனாளிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

2017-18ஆம் ஆண்டிற்கான நிதிநிலை கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின் படி, தமிழ்நாடு கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரண உதவித்தொகை ரூ,2,700/- லிருந்து, ரூ,4,500/- ஆக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டது. இதற்காக, இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மாநில அரசின் பங்கு தொகை தேவையான அளவிற்கு உயர்த்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, இத்திட்டத்தின் கீழ் மீனவ மகளிர் பயனாளிகள் சேர்க்கைக்கான நிர்வாக ஒப்புதல் அரசால் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மீனவ மகளிரும், மாதமொன்றுக்கு ரூ.175/- வீதம் 8 மாதங்களும், 9வது மாதம் ரூ.100/- ஆக மொத்தம் ரூ.1500/- செலுத்துவர். இத்தொகையுடன் மாநில அரசின் பங்களிப்புத் தொகையான ரூ.3,000/- சேர்க்கப்படும். மீனவ மகளிரின் பங்களிப்புத் தொகையுடன் சேர்த்து மொத்தம்

ரூ4,500/- மீன்பிடிப்பு குறைவு காலங்களில் பயனாளிகளுக்கு பட்டுவாடா செய்யப்படும்.

இந்த உயர்த்தப்பட்ட நிவாரண உதவித்திட்டம் 2017-18 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

மேலும், பல்வேறு கடல் மீனவர் நலத்திட்டங்கள் மூலமாக, ரூ.182.10 கோடி நிதியினை 2016-17 ஆம் ஆண்டில் அரசு வழங்கியுள்ளது. அதன் விவரம் அட்டவணை.6ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை:6**
**2016–17 ஆம் ஆண்டில் பல்வேறு கடல் மீனவர் நலத்திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட நிதியுதவி.**

| வ.எண் | திட்டங்கள் | பயானாளிகள் (எண்ணிக்கை) | வழங்கப்பட்ட தொகை ரூ. கோடியில் |
|---|---|---|---|
| 1 | மீன்பிடி தடைக்காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல் | 1,53,124 | 30.62 |
| 2 | மீன்பிடிப்புக் குறைந்த காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்குதல் | 1,55,403 | 77.70 |
| 3 | தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் | 2,10,919 | 37.97 |
| 4 | கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் | 1,98,944 | 35.81 |
| | **மொத்தம்** | | **182.10** |

## 7.5 மீனவர் குழு விபத்துக் காப்புறுதி திட்டம்

இத்திட்டம் மத்திய மாநில அரசுகளின் சமவிகித நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்தில் மீனவர்களிடமிருந்து சந்தா தொகை ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. மத்திய மாநில அரசுகளால், சமவிகித நிதி பங்களிப்பில் காப்புறுதி சந்தா தொகை செலுத்தப்படும். விபத்தில் மரணம் அடையும்/ காணாமல் போகும்/ நிரந்தர ஊனம் அடையும் நேர்வுகளில், மீனவருக்கு காப்புறுதித் தொகையாக ரூ.2,00,000/- வழங்கப்படுகிறது. மேலும், பகுதி ஊனமடையும் மீனவருக்கு காப்புறுதித் தொகை ரூ.1,00,000/-மாக வழங்கப்படுவதோடு மருத்துவ செலவினை ஈடு செய்திட, ரூ.10,000/- வழங்கப்பட்டு வருகிறது.

10.12.2016 முதல் 09.12.2017 வரையுள்ள காலத்தில் 6,66,380 கடல் மற்றும் உள்நாட்டு மீனவர் / மீனவ மகளிருக்கும் மற்றும் தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் மீன்பிடி தொழில் சார்ந்த பிரிவில் உறுப்பினர்களாக உள்ள மீனவர் / மீனவ மகளிருக்கும், காப்புறுதி சந்தாத் தொகையாக, ரூ.67.77 இலட்சம் (மாநில அரசின் பங்காக) புதுடில்லி, தேசிய மீனவர் கூட்டுறவு இணையத்திற்கு (FISHCOPFED-National Federation of Fishermen's

Co-operatives Ltd) செலுத்தப்பட்டு காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. 2014-15 ஆம் ஆண்டு முதல் 30.06.2017 வரை, பின்வருமாறு காப்புறுதித் தொகை பெற்று வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை:7**
**மீனவர் குழு விபத்துக் காப்புறுதி திட்டம்– பயனாளிகள் மற்றும் வழங்கப்பட்ட காப்புறுதித் தொகை விவரம்**

| வருடம் | பயனாளிகள் எண்ணிக்கை | நிவாரணத்தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2014-15 | 119 | 113.00 |
| 2015-16 | 133 | 118.00 |
| 2016-17 | 178 | 305.00 |
| 2017 – 18 (30.06.2017 வரை) | 09 | 16.00 |

2017-18 ஆம் ஆண்டிலும் இத்திட்டம், தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 7.6 பாரம்பரிய மீன்பிடிக்கலன்களை இயந்திரமயமாக்குதல்

மீனவர்கள் தங்களது பாரம்பரிய மீன்பிடி கலன்களில் பொருத்துவதற்கான வெளிப்பொருத்தும் இயந்திரம்/ உட்பொருத்தும் இயந்திரம் வாங்குவதற்கு மானிய உதவியை அரசு அளித்து வருகிறது. மத்திய மாநில அரசுகளின் சமவிகித நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ், இயந்திரத்தின் விலையில் 50 விழுக்காடு

அல்லது ரூ.30,000/- இதில் எது குறைவோ அது மீனவர்களுக்கு மானியமாக வழங்கப்படுகிறது.

மத்திய அரசு, நீலப் புரட்சித் திட்டத்தின் கீழ், பாரம்பரிய மீன்பிடி கலன்களில் பொருத்துவதற்கான இயந்திரத்தின் ஒரு அலகின் விலையை ரூ.1.20 இலட்சமாக (சக்கரங்களை இயக்க உதவும் கருவி மற்றும் சுக்கான் உள்பட) உயர்த்தி ஆணையிட்டு, வெளிப்பொருத்தும் இயந்திரம்/ உட்பொருத்தும் இயந்திரம் வழங்குவதற்கான ஒரு அலகின் விலையில் 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.60,000/- நிதியுதவி வழங்கும். மீதமுள்ள 50 விழுக்காடுத் தொகையினை பயனாளிகள் செலுத்த வேண்டும்.

## 7.7 தமிழக மீனவர்களுக்கு / மீன்பிடி கலன்களுக்கு ஆபத்துகால எச்சரிக்கை தகவல் பரப்பும் கருவி (Distress Alert Transmitter (DAT)) 90 விழுக்காடு மானியத்துடன் வழங்குதல்.

தங்களது வாழ்வாதாரத்திற்காக கடல் மீன்பிடி தொழிலுக்கு செல்லும் மீனவர்கள், தங்களது உயிருக்கும் உடைமைக்கும் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் அபாயகரமான சூழலுக்கு சில சமயங்களில் உள்ளாகின்றனர். மேலும், கடல் நடுவே ஏற்படும் இத்தகைய ஆபத்து தருணங்களில்,

கரையிலுள்ள சம்பந்தப்பட்டவர்களுடன் ஆபத்து நிலை குறித்து தகவல் தெரிவிக்கத் தேவையான தொலைதொடர்பு வசதிகள் இல்லாமையால் மீனவர்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர்.

இதனை களையும் பொருட்டு, தமிழ்நாட்டிலுள்ள மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு, செயற்கைகோள் வழியாக 'ஆபத்து கால எச்சரிக்கை தகவல் பரப்பும் கருவிகளை' (Distress Alert Transmitters) மீன்பிடி விசைபடகுகள் மற்றும் இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 27.02.2016 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், ரூ.48 கோடி திட்ட மதிப்பீட்டில், 30,000 ஆபத்துகால எச்சரிக்கை தகவல் பரப்பும் கருவிகள் மீன்பிடி படகு உரிமையாளர்கள் / மீனவர்களுக்கு படிப்படியாக வழங்கப்படும். முதற்கட்டமாக, 1,600 ஆபத்துகால எச்சரிக்கை தகவல் பரப்பும் கருவிகள் வழங்கும் பணி முடிவுற்றுள்ளது.

இத்திட்டம் 2017-18 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

## 7.8 கடல் மீனவ மக்களுக்கு "பயோமெட்ரிக்" (Bio-Metric Identity Card) அடையாளஅட்டை வழங்குதல்

### 7.8.1 கடல் மீனவர்

மும்பையில் 26.11.2008 அன்று நடந்த தீவிரவாத தாக்குதலுக்குப் பின்னர், கடலோரப் பாதுகாப்பினை உறுதி செய்திடும் பொருட்டு, கடல் மீனவர்களுக்கு "பயோமெட்ரிக்" (Bio-Metric Identity Card) அடையாள அட்டைகளை வழங்குவதற்கான மத்திய அரசின் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, ரூ.1.16 கோடி நிதி தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2.06 இலட்சம் மீனவர்களுக்கு 'பயோமெட்ரிக்' அடையாள அட்டைகள் வழங்கப்பட உள்ளன. இப்பணி பெங்களூரிலுள்ள 'பாரத் மின்னனு நிறுவனத்திடம்' ஒப்படைக்கப்பட்டு, 1,86,512 கடல் மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 7.8.2 கடல் மீனவ மகளிர்

மீனவ மகளிருக்கும் 'பயோமெட்ரிக்' அடையாள அட்டை வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், பெங்களூருவிலுள்ள "பாரத் மின்னணு நிறுவனத்தின்"

மூலம் **1,62,262** 'பயோமெட்ரிக்' அடையாள அட்டைகள் பெறப்பட்டு மீனவ மகளிருக்கு வழங்கப்பட்டுள்ளன.

மேலும், புதிதாக சேர்க்கப்பட்ட மீனவர் மற்றும் மீனவ மகளிருக்கும், 'பயோமெட்ரிக்' அடையாள அட்டை பெறாத மீனவர் மற்றும் மீனவ மளிருக்கும் 'பயோமெட்ரிக்' விவரங்கள் பதிவு செய்யப்பட்டு, 'பயோமெட்ரிக்' அடையாள அட்டைகள் ஒவ்வொரு கடலோர மாவட்டத்திலும் உள்ள மீனவ/மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விரைவில் வழங்கப்படும்.

## 7.9 மீன்பிடி கலன்களை இணைய தளம் மூலம் பதிவு செய்தல்

கடல் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்திய அரசானது, மீன்பிடி கலன்களை இணையதளம் மூலம் பதிவு செய்யும் திட்டத்தை அறிமுகம் செய்து, ரூ.1.33 கோடி செலவில் இத்திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் **30**.06.2017 வரை, 5,861 மீன்பிடி விசைப்படகுகள், 30,239 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகள் மற்றும் 5,427 இயந்திரம் பொருத்தப்படாத நாட்டுப்படகுகள் இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## அட்டவணை:8
## தமிழ்நாட்டில் பதிவுசெய்யப்பட்ட மீன்பிடி படகுகள் – 30.06.2017 அன்றுள்ளவாறு

| வ. எண் | மாவட்டம் | மீன்பிடி விசை படகுகள் | இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடி படகுகள் | இயந்திரம் பொருத்தப்படாத மீன்பிடி படகுகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | திருவள்ளூர் | 0 | 2,154 | 1 | **2,155** |
| 2 | சென்னை | 852 | 1,232 | 64 | **2,148** |
| 3 | காஞ்சிபுரம் | 11 | 2,153 | 517 | **2,681** |
| 4 | விழுப்புரம் | 23 | 1,074 | 964 | **2,061** |
| 5 | கடலூர் | 303 | 2,421 | 1,910 | **4,634** |
| 6 | நாகப்பட்டினம் | 1,173 | 4,399 | 136 | **5,708** |
| 7 | திருவாரூர் | 1 | 174 | 0 | **175** |
| 8 | தஞ்சாவூர் | 271 | 1,008 | 102 | **1,381** |
| 9 | புதுக்கோட்டை | 420 | 1,172 | 238 | **1,830** |
| 10 | இராமநாதபுரம் | 1,724 | 3,485 | 1,026 | **6,235** |
| 11 | தூத்துக்குடி | 293 | 4,378 | 38 | **4,709** |
| 12 | திருநெல்வேலி | 0 | 1,079 | 1 | **1,080** |
| 13 | கன்னியாகுமரி | 790 | 5,510 | 430 | **6,730** |
| | **மொத்தம்** | **5,861** | **30,239** | **5,427** | **41,527** |

## 7.10 மீனவர்களுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட உயர்வேக டீசல் எரியெண்ணெய் வழங்குதல்

தமிழ்நாடு மீன்வளத்துறையில் பதிவு செய்யப்பட்ட மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப்படகுகளில் பயன்படுத்தப்படும் அதிவேக டீசல் எரியெண்ணெய்க்கு, தமிழ்நாடு அரசு 100 விழுக்காடு விற்பனை வரி விலக்களித்து வருகிறது. இதன்படி, ஒவ்வொரு விசைப்படகிற்கும், வருடத்திற்கு (மீன்பிடிப்பு உள்ள 10 மாதங்களுக்கு) அதிகபட்சமாக 15,000 லிட்டரும், ஒவ்வொரு இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டு படகிற்கும், வருடத்திற்கு அதிகபட்சமாக 3,600 லிட்டரும் விற்பனைவரி விலக்களிக்கப்பட்ட அதிவேக டீசல் எரியெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

மீனவ சமுதாயத்தின் கோரிக்கையை ஏற்று, 2017-18 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின்படி, விற்பனை வரியிலிருந்து விலக்களித்து, மீன்பிடி விசைப் படகு ஒன்றிற்கு வழங்கப்படும் டீசலின் அளவினை, ஆண்டு ஒன்றிற்கு 15,000 லிட்டரிலிருந்து 18,000 லிட்டராகவும், இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகு ஒன்றிற்கு வழங்கப்படும் டீசலின்

அளவை, ஆண்டு ஒன்றிற்கு 3,600 லிட்டரிலிருந்து 4,000 லிட்டராகவும் அரசு உயர்த்தி வழங்கியுள்ளது.

2016-17 ஆம் ஆண்டில் மாவட்ட வாரியாக ஒதுக்கீடு விவரம் அட்டவணை 9 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை:9**

**2016–17ம் ஆண்டில் மாவட்ட வாரியாக விற்பனைவரி விலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் ஒதுக்கீடு விவரம்**

| வ.எண் | மாவட்டம் | மீன்பிடி விசைப்படகுகள் (கிலோ லிட்டரில்) | இயந்திர மயமாக்கப்பட்ட நாட்டுப்படகுகள் (கிலோ லிட்டரில்) | மொத்த ஒதுக்கீடு (கிலோ லிட்டரில்) |
|---|---|---|---|---|
| 1 | திருவள்ளூர் | 0 | 7,056 | 7,056 |
| 2 | சென்னை | 12,298 | 3,815 | 16,113 |
| 3 | காஞ்சிபுரம் | 152 | 6,262 | 6,414 |
| 4 | கடலூர் | 3,022 | 4,032 | 7,054 |
| 5 | விழுப்புரம் | 213 | 3,532 | 3,745 |
| 6 | நாகப்பட்டினம் | 11,454 | 5,270 | 16,724 |
| 7 | தஞ்சாவூர் | 4,437 | 396 | 4,833 |
| 8 | புதுக்கோட்டை | 8,177 | 1,496 | 9,673 |
| 9 | இராமநாதபுரம் (இராமேஸ்வரம் உட்பட) | 23,809 | 4,511 | 28,320 |
| 10 | தூத்துக்குடி | 3,938 | 9,536 | 13,474 |
| 11 | திருநெல்வேலி | 0 | 0 | 0 |
| 12 | கன்னியாகுமரி | 325 | 1,571 | 1,896 |
| | **மொத்தம்** | **67,825** | **47,477** | **1,15,302** |

## 7.11 பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட தொழிலக மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்குதல்

தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், மண்ணெண்ணெயில் இயங்கக்கூடிய இயந்திரம் பொருத்தப்பட்ட பாரம்பரிய மீன்பிடி கலன்களின் உரிமையாளர்களுக்கு, விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட தொழிலக மண்ணெண்ணெய் மானிய விலையில், லிட்டர் ஒன்றிற்கு ரூ.25/-வீதம் (மாதமொன்றிற்கு, ஒரு மீன்பிடி கலனுக்கு 200 லிட்டர் வீதம்) 2011-12 ஆம் ஆண்டு வரை தமிழக அரசால் வழங்கப்பட்டு வந்தது. நாட்டுப்படகு மீனவர்களுக்கு, நாட்டுப் படகினை இயக்க அதிகரித்து வரும் செலவினத்தை குறைத்திடும் விதமாக, 2012-13 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட மானிய விலையில் வழங்கப்படும் தொழிலக மண்ணெண்ணெயின் அளவினை, ஒரு படகிற்கு, மாதமொன்றிற்கு, 200 லிட்டரிலிருந்து 250 லிட்டராக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

2016-17 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்திட மண்ணெண்ணெயினால் இயங்கக்கூடிய

5,000 நாட்டுப்படகுகள் பயன்பெறும் வகையில் ரூ.16.09 கோடி அரசால் நிதி ஒப்பளிக்கப்பட்டு, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் இயங்கும் நாட்டுப் படகுகளுக்கு தமிழ்நாடு மாநிலத் தலைமை மீனவர் கூட்டுறவு இணையம் மூலமாகவும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மூலமாகவும் தொழிலக மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

மீனவ சமுதாயத்தின் கோரிக்கையை ஏற்று, 2017-18 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின்படி, விற்பனை வரியிலிருந்து விலக்களித்து, இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகு ஒன்றிற்கு லிட்டருக்கு ரூ.25/- என்ற மானிய விலையில் வழங்கப்படும் மண்ணெண்ணெயின் அளவினை, ஆண்டு ஒன்றிற்கு 3,000 லிட்டரிலிருந்து 3,400 லிட்டராக அரசு உயர்த்தி வழங்கியுள்ளது.

2016-17ஆம் ஆண்டில் மாவட்ட வாரியாக விற்பனைவரி விலக்களிக்கப்பட்ட மானிய விலையிலான தொழிலக மண்ணெண்ணய் ஒதுக்கீட்டு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை:10**
**2016–17ம் ஆண்டில் மாவட்ட வாரியாக விற்பனைவரி விலக்களிக்கப்பட்ட மானிய விலையிலான தொழிலக மண்ணெண்ணய் ஒதுக்கீடு.**

| வ.எண் | மாவட்டம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட மண்ணெண்ணய் விவரம் (கிலோ லிட்டரில்) |
|---|---|---|
| 1 | தூத்துக்குடி | 3,474 |
| 2 | திருநெல்வேலி | 2,624 |
| 3 | கன்னியாகுமரி | 7,767 |
| | மொத்தம் | 13,865 |

## 7.12 மீனவ சமுதாயத்தைச் சார்ந்த 10 வது மற்றும் 12வது வகுப்பு மாணவ / மாணவியருக்கு ரொக்கப்பரிசு வழங்குதல்

மீனவ சமுதாயத்தைச் சார்ந்த மாணவ, மாணவிகள் உயர் கல்வி கற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, 2005-06 ஆம் ஆண்டு முதல், 10 வது மற்றும் 12வது வகுப்பு தேர்வில், மாவட்டம் மற்றும் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் மீனவ மாணவ / மாணவியருக்கு, தமிழக அரசால் ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

2016-17 ஆம் ஆண்டு நிதி நிலை கூட்டத்தொடரில் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள், தற்போது வழங்கப்பட்டு வரும் ரொக்கப்பரிசினை உயர்த்தி அறிவித்ததை தொடர்ந்து, மாணவ மாணவிகளுக்கு

வழங்கப்படும் ரொக்கப்பரிசு அட்டவணை 11ல் உள்ளவாறு உயர்த்தப்பட்டுள்ளது.

**அட்டவணை : 11**
**ரொக்கப் பரிசுகள் விவரம்**

| வ. எண் | விவரம் | உயர்த்தப்பட்ட ரொக்கப் பரிசு (ரூபாயில்) | | | |
|---|---|---|---|---|---|
| | | 12ம் வகுப்பு | | 10ம் வகுப்பு | |
| | | வழங்கப் பட்டு வந்த தொகை | உயர்த்தப்பட்ட தொகை | வழங்கப் பட்டு வந்த தொகை | உயர்த்தப் பட்ட தொகை |
| 1 | மாநில அளவில் – முதலிடம் | 10,000/- | 50,000/- | 6,000/- | 25,000/- |
| 2 | மாநில அளவில் – இரண்டாமிடம் | இல்லை | 30,000/- | இல்லை | 20,000/- |
| 3 | மாநில அளவில் – மூன்றாமிடம் | இல்லை | 20,000/- | இல்லை | 15,000/- |
| 4 | மாவட்ட அளவில் – முதலிடம் | 6,000/- | 6,000/- | 2,000/- | 3,000/- |
| 5 | மாவட்ட அளவில் – இரண்டாமிடம் | இல்லை | 4,000/- | 1,000/- | 2,000/- |
| 6 | மாவட்ட அளவில் – மூன்றாமிடம் | இல்லை | 2,000/- | 600/- | 1,000/- |

2016-17 ஆம் கல்வி ஆண்டில், அதிக மதிப்பெண் பெற்ற மீனவ சமுதாயத்தைச் சார்ந்த மாணவ மாணவியருக்கு ரொக்கப்பரிசு வழங்க அரசு 15.72 இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்துள்ளது. உயர்த்தப்பட்ட ரொக்கப் பரிசினை வழங்குவதால் அரசுக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.8.26 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும்.

## 7.13 திருச்சினாங்குப்பம் மீனவர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் மறுகட்டுமானம்

திருவள்ளூர் மாவட்டம், திருச்சினாங்குப்பத்தில் உள்ள 492 அடுக்குமாடி குடியிருப்புகளை ரூ.24.60 கோடி திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாக மறுகட்டுமானம் செய்ய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது, 492 குடியிருப்புகளும் இடிக்கப்பட்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டுமானப்பணி நடைபெற்றுவருகிறது.

**கடல் மீனவர் – நிவாரணத்திட்டங்கள்**

## 7.14 பிற நாட்டினரால் சிறைபிடிக்கப்படும் மீனவர்களது குடும்பத்திற்கு தின உதவித் தொகை வழங்குதல்

கடலில் மீன்பிடிக்கும் போது அண்டை நாட்டினரால் சிறைபிடிக்கப்படும் மீனவர்களின் குடும்பத்தினருக்கு உதவிடும் வகையில், நாளொன்றுக்கு ரூ.50/- வீதம் தின உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. மீனவ குடும்பங்களுக்கு இந்நேர்வுகளில் வழங்கப்பட்டு வந்த தின உதவித் தொகை கடந்த 2011-12 ஆம் ஆண்டு முதல் ரூ.250/- ஆக உயர்த்தி, வழங்கப்பட்டு வருகிறது. தின உதவித் தொகையை உடனடியாக வழங்கிடும் வகையில்,

இத்திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2016-17ஆம் ஆண்டில், 317 மீனவர்களின் குடும்பத்திற்கு ரூ.27.42 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

2017-18 ஆம் ஆண்டிலும், இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 7.15 கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு தின உதவித் தொகை வழங்குதல்

கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு, நாளொன்றுக்கு தின உதவித்தொகையாக வழங்கி வந்த ரூ.50/- (மாதமொன்றுக்கு ரூ.1,500/- வீதம்) ரூ.250/-ஆக உயர்த்தி, (மாதமொன்றுக்கு ரூ.7,500/-ஆகவும்) கடந்த 2011-12 ஆம் ஆண்டு முதல் வழங்கி வருகிறது. 2016-17ஆம் ஆண்டில், 25 மீனவர்களின் குடும்பத்திற்கு ரூ.17.33 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

2017-18ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 7.16 இலங்கை மற்றும் பிற நாடுகளின் கடற்படையால் துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவரது குடும்பத்தினருக்கும் /காயமடையும் மீனவருக்கும் நிவாரணம் வழங்குதல்

கடலோர மாவட்டங்களிலுள்ள மீனவர்கள், தங்களது பாரம்பரிய மீன்பிடி பகுதியான பாக் வளைகுடா பகுதியில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருக்கும் நேரங்களில், இயந்திர கோளாறு மற்றும் இயற்கை சீற்றம் காரணமாக இலங்கை கடற்பகுதிக்குள் படகுகள் அடித்துச் செல்லப்படுவதால், இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்படுதல் / துன்புறுத்தப்படுதல், சில சமயங்களில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகுதல் போன்ற சம்பவங்களும் ஏற்படுகின்றன.

இவ்வாறு துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவரது குடும்பத்தினருக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து கருணைத் தொகையாக ரூ.3 இலட்சம் வழங்கப்படுகிறது. துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவர், அவரது குடும்பத்தில் பொருளீட்டக் கூடிய ஒரே நபராக இருக்கும் பட்சத்தில், இந்த கருணைத் தொகை ரூ.5 இலட்சமாக வழங்கப்படுகிறது. பலத்த காயம் மற்றும் சிறு காயம் அடையும் மீனவர்களுக்கு கருணைத்தொகையாக முறையே ரூ.50,000/- மற்றும் ரூ.20,000/- வழங்கப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் 06.03.2017 அன்று, கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, இலங்கை கடற்படையினரால் கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டதில் ஒரு மீனவர் உயிரிழந்தும் மற்றொருவர் காயமடைந்தும் பாதிப்புக்குள்ளாயினர். முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து துப்பாக்கி சூட்டில் உயிரிழந்த மீனவர் குடும்பத்திற்கு கருணைத் தொகையாக ரூ.5 இலட்சமும், இச்சம்பவத்தில் காயமடைந்த மீனவர் குடும்பத்திற்கு சிறப்பினமாக கருதி கருணைத்தொகையினை ரூ.50,000/-த்திலிருந்து ரூ.1,00,000/- ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டு, இத்தொகை வழங்கப்பட்டது.

### 7.17 கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்கள் / துப்பாக்கிச் சூட்டில் இறக்கும் மீனவர்களின் பிள்ளைகளின் உயர்கல்வி செலவினங்களுக்காக தனிநிதி ஏற்படுத்துதல்

கடலில் மீன்பிடிக்கச் சென்று, காணாமல் போகும் மீனவர்கள் / இலங்கை கடற்படையினரால் சுடப்பட்டு இறக்க நேரிடும் மீனவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை, அன்றாட செலவினங்களை சமாளிக்கப்

போதுமானதாக இல்லை. மேலும், அம்மீனவர்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கி உள்ளதால், அவர்களின் மகன் / மகள்களின் கல்வியைத் தொடரத் தேவையான நிதி வசதியின்றி, மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். இதனால், காணாமல்போகும் / இறக்க நேரிடும் மீனவர்களின் பிள்ளைகள் போதிய நிதி உதவி இல்லாததால், தங்களது பள்ளி / கல்லூரிப் படிப்பினை தொடர இயலாமல் வேலைவாய்ப்பினைத் தேடிச்செல்லும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

இந்த நிலையினைக் கருத்தில் கொண்டு காணாமல் போன / துப்பாக்கிச் சூட்டினால் இறக்க நேரிடும் மீனவர்களின் பிள்ளைகள், தொடர்ந்து கல்வி கற்பதற்கான முழுச் செலவினத்தையும் மேற்கொள்ள, தமிழ்நாடு மீனவர் நல வாரியம் மூலம் ரூ.25 இலட்சம் பிரத்தியேக நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

2017-18ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 7.18 'வர்தா' புயல் நிவாரண உதவிகள்

கடந்த 12.12.2016 அன்று சென்னைக்கு வடக்கில் 10 கிலோ மீட்டர் தொலைவில் கரையை கடந்த ‘‘வர்தா’’ புயல்

காரணமாக திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட கடலோர பகுதிகளில் இருந்த மீன்பிடி படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் பெரும் சேதத்திற்கு உள்ளானது. மீன்பிடி உபகரணங்களை இழந்த 16,768 மீனவர்களுக்கு, திருவள்ளூர் (9,916), சென்னை (3,172) மற்றும் காஞ்சிபுரம் (3,680) உடனடியாக நிவாரணம் வழங்கி, அவர்கள் தங்களது இயல்பு வாழ்க்கையினை மீண்டும் தொடர ரூ.19.13 கோடி 'மாநில பேரிடர் மீட்புத் தொகை' State Disaster Response Fund (SDRF)யிலிருந்து நிவாரணம் மற்றும் சீரமைப்பிற்காக அரசு வழங்கியுள்ளது.

மேலும், 'வர்தா' புயலால் சென்னை கடற்பகுதியில் இரண்டு விசைபடகுகள் மூழ்கின. பாதிக்கப்பட்ட 10 மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.1,00,000/- வீதம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 06.03.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

## 7.19 எண்ணெய் கசிவில் பாதிக்கப்பட்ட திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சார்ந்த மீனவர்களுக்கு நிவாரண உதவி வழங்குதல்

28.01.2017 அன்று எண்ணூர் காமராஜர் துறைமுகத்திற்கு அருகில் இரண்டு தனியார் கப்பல்கள் எதிர்பாராத விதமாக நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் கப்பலிலிருந்து கச்சா எண்ணெய் கசிவு ஏற்பட்டு கடலில் பரவியதால் திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு மிகுந்த சிரமத்திற்கு உள்ளானார்கள். பாதிக்கப்பட்ட மூன்று மாவட்டங்களிலுள்ள மீனவர்கள் கடலுக்கு சென்று மீன்பிடித்து கொண்டுவரப்பட்ட மீன்களை வாங்குவதற்கு எவரும் முன்வராததாலும், விலை சரிவாலும், மீனவர்களும் மீன்பிடிப்பு சார்ந்த தொழில் புரிவோரும் பாதிப்படைந்தனர்.

எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் துயரினை விரைந்து நீக்கிடும் வகையில் நிவாரணம் வழங்கிட கேட்டு மாண்புமிகு மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களை, புதுடில்லியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28.2.2017 அன்று நேரில் சந்தித்து நிவாரணம் வழங்க கோரியுள்ளார்கள். பாதிக்கப்பட்ட

திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களின் துயரினை கருத்திற்கொண்டு, பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மீனவ குடும்பத்திற்கும் ரூ.5,000/- வீதம் 30,000 குடும்பங்களுக்கு மொத்தம் 15 கோடி ரூபாய் இடைக்கால நிவாரணமாக வழங்க அரசால் ஆணையிடப்பட்டு, நிவாரண உதவித்தொகை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 06.03.2017 அன்று வழங்கப்பட்டது.

மேலும், எண்ணெய் கசிவால் மாசு ஏற்படுத்திய நிறுவனங்களின், பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து (Corporatate Social Responsibility Fund), சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் 2 மீன்விற்பனை சந்தைகள் கட்டுவதற்கு அரசால் ரூ.75 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## மீன்வள ஆதாரங்கள் / உற்பத்தியை அதிகரித்தல்

### 7.20 மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்தல்

மீன்வளத்தினைப் பாதுகாத்து அதிகரித்திட, மீன்பிடி தடைக்காலம் அமலாக்கம் செய்தல், கடலில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்தல், செயற்கை மீன் உறைவிடங்களை அமைத்தல்

மற்றும் பல்வகை மாற்று மீன்பிடி முறைகளை மேற்கொள்ளுதல் போன்ற சில வழிமுறைகளை மீன்வளத்துறை செயல்படுத்தி வருகிறது.

### 7.21 மீனவர்கள் புதிய சூரைமீன்பிடி தூண்டில் மற்றும் செவுள்வலை விசைப்படகுகளை (Tuna Long Liner Cum Gill Netter) வாங்கிட 50 விழுக்காடு மானியம் வழங்குதல்

கடலோர மீன்வளங்களை பாதுகாப்பதன் மூலம் நிலையான மீன்வளத்தைப் பெருக்கவும், அதிகம் பிடிக்கப்படாத, ஆழ்கடல் மீன்வளங்களான சூரை மீன் மற்றும் அதுபோன்ற மீன் இனங்களை மீனவர்கள் பிடிப்பதை ஊக்கப்படுத்திடவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், நாட்டிலேயே முதன்முறையாக, “தூண்டில் மற்றும் செவுள்வலையுடன் கூடிய புதிய சூரை மீன்பிடி படகுகள் (Tuna Long Liner Cum Gill Netter) கட்டிட 50 விழுக்காடு” மானியம் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், தூண்டில் மற்றும் செவுள்வலையுடன் கூடிய புதிய சூரை மீன்பிடி படகு (Tuna Long Liner Cum Gill Netter) கட்டுவதற்கு, ஒரு படகிற்கு ஆகும் உத்தேச மதிப்பான

ரூ.60 இலட்சத்தில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படும்.

இத்திட்டத்தில், 171 சூரை மீன்பிடி படகுகள் கட்டுவதற்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டன. கட்டுமான பணியின் வெவ்வேறு நிலைகளுக்காக 45 சூரை மீன்பிடி படகுகளுக்கு ரூ.7.93 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

## 7.22 பாக் வளைகுடா மாவட்டங்களில் இழுவலை படகுகளை ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக மாற்றுவதற்கு மானிய உதவித் தொகை வழங்குதல்.

தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய பகுதிகளில் மீன்பிடிக்கும்போது இலங்கை கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுவதால், பாக் வளைகுடா பகுதியில் இழுவலைப் படகுகளைக் கொண்டு மீன்பிடித்தலானது அதிக கவனத்தை ஈர்த்து வருகிறது. நீண்டகாலமாக நமது மீனவர்களையும், மீன்பிடி படகுகளையும் இலங்கை அரசு சிறைப்பிடிப்பது, ஒட்டுமொத்த தமிழக மீனவ சமூகத்தினரிடையே கவலை மற்றும் பாதுகாப்பற்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் விதமாக, பாக் வளைகுடா பகுதியில் உள்ள இழுவலைப் படகுகளை மத்திய

மாநில அரசுகளின் நிதியுதவியுடன், பல்வேறு கட்டங்களாக மூன்று வருடங்களில், ஆழ்கடல் தூண்டில் மற்றும் செவுள்வலையுடன் கூடிய சூரை மீன்பிடி படகுகளாக மாற்றிட, அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், தமிழ்நாட்டில் பிரத்தியேகமாக பாக் வளைகுடா மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். தூண்டில் மற்றும் செவுள்வலையுடன் கூடிய புதிய சூரை மீன்பிடி படகு ஒன்று கட்டுவதற்கு ரூ.80 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனில் 70 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.56 இலட்சம் வரை மானிய உதவியாக வழங்கப்பட்டு, 20 விழுக்காடு நிறுவன நிதியுதவியுடனும் மற்றும் 10 விழுக்காடு பயனாளிகளின் பங்களிப்புடனும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

2017-18ஆம் ஆண்டில், 500 இழுவலைப் படகுகளை தூண்டில் மற்றும் செவுள்வலையுடன் கூடிய புதிய சூரை மீன்பிடி படகுகளாக கட்டி ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக மாற்றிட ரூ.286 கோடி ( மத்திய அரசு– ரூ.200 கோடி மற்றும் மாநில அரசு – ரூ.86 கோடி) மானிய உதவியாக வழங்கப்படும்.

## 7.23 ஆழ்கடல் மீன்பிடிப்பு – தாய்கப்பல் நிறுவும் கோட்பாடு

நடுக்கடலில் மீன்களை பாதுகாக்க, குளிரூட்டப்பட்ட கடல்நீர் மற்றும் குளிரூட்டப்பட்ட மீன் பாதுகாக்கும் அறை போன்ற வசதிகளைக் கொண்ட ‘‘ஆழ்கடல் மீன்பதனிடும் அலகு மற்றும் தாய்கப்பல்’’ நிறுவப்படுமென அரசு அறிவித்தது. இந்த தாய் கப்பலானது, ஆழ்கடலில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள மீன்பிடி விசை படகுகளுக்கு அத்தியாவசியமான இடுபொருட்களை வழங்கும் மையமாக விளங்குவதுடன், அவர்களால் பிடிக்கப்படும் மீன்களைப் பெற்று உடனுக்குடன் கரைக்கு கொண்டு வரும் சேவையினையும் அளிக்கும். இதனால், மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள மீன்பிடி படகுகள் கரைக்கு வந்துசெல்லும் செலவை குறைப்பதுடன், பிடிக்கப்படும் மீன்கள் ஏற்றுமதிக்கு உகந்த தரம் வாய்ந்ததாக இருப்பதால் மீனவர்கள் அவர்கள் பிடிக்கும் மீன்களுக்கு நல்ல விலையினையும் பெறுவர்.

இத்திட்டத்திற்கான கலந்தாலோசகராக ‘திருவாளர்கள் மகேந்திரா கன்சல்டிங் இஞ்சீனியர்ஸ் லிமிடெட்’ சென்னை என்ற நிறுவனம் நியமனம் செய்யப்பட்டது. அந்நிறுவனம் பல்வேறு ஆய்வுகளுக்குப் பின்னர், இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கோட்பாடு மற்றும் வழிமுறைகளை

அளித்ததனைத் தொடர்ந்து, கன்னியாகுமரி அல்லது சென்னை மாவட்ட கடற்பகுதியில் இத்திட்டத்தினை ஒரு முன்னோடித்திட்டமாக செயல்படுத்திட முடிவு செய்யப்பட்டது. உலகளாவிய ஒப்பந்தபுள்ளி கோரும் முறையில் இரண்டு முறையும், தேசிய அளவில் ஒரு முறையும் ஒப்பந்த புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தபுள்ளிகள் ஏதும் பெறப்படாததால், மறு ஒப்பந்த புள்ளி கோருவதற்காக இத்திட்டத்தின் நிபந்தனைகளில் மாற்றம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

## 7.24 செயற்கை மீன் உறைவிடங்கள் (Artificial Reefs) அமைத்தல்

செயற்கை மீன் உறைவிடங்கள் கடல்வாழ் உயிரினங்களுக்கு வாழ்விடமாகவும் கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கத்தை அதிகரிக்கவும், குஞ்சுகள் பாதுகாப்பாக உயிர்வாழவும் வாய்ப்பளிப்பதால் மீன் உற்பத்தி அதிகரிக்கிறது. மேலும், செயற்கை மீன் உறைவிடங்கள், இழுவலைகளைப் பயன்படுத்த தடையாகவும் அமைகின்றன. அண்மைக்கடல் பகுதியில், மீன்வள பாதுகாப்பு நடவடிக்கையாக, செயற்கை மீன் உறைவிடங்களை அமைப்பதற்காக, அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, தமிழ்நாட்டின் அண்மைக் கடற்பகுதிகளில், இதுவரை

37 இடங்களில் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

2017-18ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**7.25 மேற்கு கடற்கரை பகுதிகளில் கணவாய் மீன்கள் பிடிக்க ஏதுவாக படகுகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட மானியம் அளித்தல்**

தமிழக கடற்கரை முழுவதும் இந்திய கணவாய் மீன்கள் (Squid) கிடைக்கப்பெற்றாலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்கு கடற்கரைபகுதியில் இவை மிகுதியாகப் பிடிக்கப்படுகின்றன. மீனவர்கள் மாற்று வழி மீன்பிடி முறையில், கணவாய் மீன்கள் பிடிக்கத் தேவையான உபகரணங்கள் வாங்கிட 50 விழுக்காடு மானியம் வழங்கும் திட்டத்தினை, 2012-13ஆம் ஆண்டு இந்த அரசு அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது.

2016-17ஆம் ஆண்டில் கணவாய் மீன்கள் பிடிக்கும் உபகரணங்கள் வாங்குவதற்கு தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.25 இலட்சம் மானியமாக கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த 100 மீனவர்களுக்கு வழங்கப்பட்டது.

2017-18ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

## 7.26 மத்திய மாநில அரசு நிதி பங்களிப்புடன் செயல்படுத்தும் திட்டங்கள்

### 7.26.1 குளச்சல் மீன்பிடி துறைமுகம் (மத்திய–மாநில அரசுகளின் 50:50 விகித பங்களிப்பு திட்டம்)

கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் மீன்பிடி துறைமுக கட்டுமானப்பணிக்கு மத்திய–மாநில அரசுகளின் சமவிகித நிதிபங்களிப்பு (50:50) திட்டத்தின்கீழ் 87.75 கோடி ரூபாய்க்கு மாநில அரசு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும், இப்பணிக்கு மாநில அரசு ரூ.96.72 கோடிக்கு இரண்டாவது திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கி கூடுதல் நிதியான ரூ.8.97 கோடியையும் மாநில அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. (இதுவரை மத்திய அரசு ரூ.24.57 கோடியும், மாநில அரசு ரூ.52.85 கோடியும் ஆக மொத்தம் ரூ.77.42 கோடி நிதியினை விடுவித்துள்ளது.) 250 விசைப்படகுகளும், 100 நாட்டுப்படகுகளும் நிறுத்துவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த குளச்சல் மீன்பிடி துறைமுகம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 21.09.2016 அன்று திறந்து வைக்கப்பட்டது.

### 7.26.2 தேங்காப்பட்டினம் மீன்பிடி துறைமுகம் (மத்திய–மாநில அரசுகளின் 50:50 விகித நிதி பங்களிப்புத் திட்டம்)

கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காப்பட்டினம் மீன்பிடி துறைமுக கட்டுமான பணிக்கு மத்திய–மாநில அரசுகளின் சமவிகித நிதிபங்களிப்புத் (50:50) திட்டத்தின் கீழ் ரூ.97.40 கோடிக்கு மாநில அரசு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. அதனடிப்படையில், இதுவரை ரூ.91.70 கோடி நிதி வழங்கியுள்ளது. (இதுவரை மத்திய அரசு ரூ.43 கோடியும், மாநில அரசு ரூ.48.70 கோடியும் விடுவித்துள்ளது.) இந்த மீன்பிடி துறைமுகத்தில் 750 விசைபடகுகளும், 300 கண்ணாடி நாரிழை படகுகளும், மற்றும் 400 நாட்டுப்படகுகளும் நிறுத்த ஏதுவாக நிலம் சார்ந்த கட்டமைப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது.

கடலரிப்பினை தடுப்பது தொடர்பாக 13வது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, தேங்காப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தின் கிழக்கு பகுதியில் உள்ள மீனவ கிராமங்களில் கடல் அரிப்பு தடுப்பு நடவடிக்கை பணிகளுக்காக ரூ.82.73 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனைத்து கடல் அரிப்பு தடுப்பு பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

### 7.26.3 பூம்புகார் மீன்பிடி துறைமுகம் (மத்திய – மாநில அரசுகளின் 75:25 மற்றும் 50:50 விகித நிதி பங்களிப்புத் திட்டம்)

நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில் மத்திய மாநில அரசின் நிதிபங்களிப்புத் (75:25) திட்டத்தின்கீழ் ரூ.78.50 கோடி மதிப்பில் மீன்பிடி துறைமுகம் அமைக்க மாநில அரசு நிர்வாக ஒப்புதல் அளித்தது. அதன் பின்னர், ரூ.148 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கியது. இதன்படி மத்திய–மாநில அரசு ரூ.78.50 கோடிக்கு 75:25 பங்களிப்பு விகிதத்திலும், மீதமுள்ள தொகையான ரூ.69.50 கோடிக்கு 50:50 விகித பங்களிப்புடன் செயல்படுத்திட ஒப்புதல் அளித்தன. இப்பணிக்காக, இதுவரை மத்திய அரசு ரூ.31.42 கோடியும், மாநில அரசு ரூ.54.38 கோடியும் ஆக மொத்தம் ரூ.85.80 கோடி நிதியினை விடுவித்துள்ளது. திருத்திய வடிவமைப்பின்படி, தெற்கு பிரதான அலை தடுப்பு சுவர் 880 மீ நீளத்திற்கும், வடக்கு துணை அலை தடுப்பு சுவர் 390 மீ நீளத்திற்கும் மற்றும் படகு அணையும் தளம் அமைக்கும் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன. கடற்கரை சார்ந்த கட்டமைப்புப் பணிகளும் துவக்கப்படவுள்ளன.

**7.26.4 சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகம் விரிவாக்கம் செய்தல் (மத்திய – மாநில அரசுகளின் 75:25 விகித நிதி பங்களிப்புத் திட்டம்):**

கன்னியாகுமரி மாவட்டம், சின்னமுட்டம் மீன்பிடி துறைமுக கட்டுமான பணிக்கு மத்திய–மாநில அரசுகளின் நிதி பங்களிப்புத் (75:25) திட்டத்தின்கீழ், ரூ.73.52 கோடி மதிப்பில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது மற்றும் இப்பணிக்கு கூடுதல் செலவாக ரூ.7.70 கோடியை மாநில அரசு ஏற்றுக் கொண்டு திருத்திய நிர்வாக அனுமதி ரூ.81.22 கோடிக்கு மாநில அரசு வழங்கியுள்ளது. இப்பணிக்காக, இதுவரை மத்திய அரசு 37.09 கோடி ரூபாயும், மாநில அரசு ரூ.26.08 கோடியும் ஆக மொத்தம் ரூ.63.17 கோடி நிதியினை விடுவித்துள்ளன. அனைத்துப்பணிகளும் முழுமையாக முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 21.09.2016 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**7.26.5 இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மூக்கையூர் மீன்பிடி துறைமுகம் மறு கட்டமைப்பு (மத்திய–மாநில அரசுகளின் 50:50 விகித நிதி பங்களிப்பு திட்டம்)**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சிகளின் பயனாக, இராமநாதபுரம் மாவட்டத்தின் பாக்

வளைகுடா பகுதியில் உள்ள மீன்பிடி விசைப்படகுகளின் நெரிசலை குறைக்கவும், மூக்கையூர் மற்றும் அதன் சுற்றுப்புற கிராம மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், மூக்கையூரில் அலை தடுப்பு சுவர், படகு அணையும் தளம், தடுப்புச்சுவர், ஏலக்கூடம், மீன் உலர்களம், வலை பின்னும் கூடம் மற்றும் இதர கட்டுமான வசதிகளுடன் கூடிய மீன்பிடி துறைமுகம் மறு கட்டுமானம் மத்திய மாநில அரசுகளின் நிதி பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்திற்கு, 50:50 விகித நிதி பங்களிப்புடன் மத்திய அரசால், ரூ.113.90 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, முதல் தவணையாக மத்திய அரசு ரூ.5 கோடியும், மாநில அரசு ரூ.5 கோடியும் ஆக மொத்தம் ரூ.10 கோடி விடுவித்துள்ளன. இத்திட்டப் பணிகளை செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

### 7.27 அரசு–தனியார் (Public – Private Partnership (PPP)) பங்களிப்பு முறையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மணக்குடியில் மீன்பிடி துறைமுகம் கட்டுதல்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மணக்குடி மீனவ கிராமத்தில், அரசு மற்றும் தனியார் பங்களிப்பில் Public-

Private Partnership (PPP) வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, இயக்குதல், மற்றும் மாற்றுதல் Design Build Finance Operate and Transfer (DBFOT) அடிப்படையில் மீன்பிடிதுறைமுகம் அமைக்க கொள்கை அளவில் இந்த அரசு அனுமதி வழங்கியுள்ளது

மணக்குடியில் ரூ.72.44 கோடி திட்ட மதிப்பீட்டில் மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கு தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் ஒப்புதல் வழங்கியுள்ளது. மணக்குடியில் மீன்பிடி துறைமுகம் நிறுவிட சலுகைதாரர் தேர்வு செய்திட, கருத்துரு சமர்ப்பிப்பதற்கான வேண்டுகோள் ஒப்பந்தப்புள்ளி Request for Proposal (RFP) பரிசீலிக்கப்பட்டு, தகுதி பெற்ற சலுகைதாரருக்கு ஆணைக்கடிதம் Letter of Award (LoA) வழங்கப்பட்டு, சலுகைதாரருடன் சலுகை ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

## 7.28 மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்கு தளங்கள் மற்றும் ஆற்று முகத்துவாரங்கள் தூர்வாருதல்

மீன்பிடி கலன்களை இலகுவாக செலுத்துவதற்கு ஏதுவாக தமிழ்நாட்டில் 6 இடங்களில் முகத்துவாரங்கள் தூர்வாரப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி எண்.110 இன் கீழ் அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

இந்த அறிவிப்பின்படி, நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகப்பட்டினம் மற்றும் பழையாறு மீன்பிடி துறைமுகங்கள், திருமுல்லைவாசல் மற்றும் நாகூர் மீன் இறங்கு தளங்கள், வெட்டாறு முகத்துவாரம் மற்றும் கடலூர் மாவட்டத்தில் கடலூர் மீன்பிடி துறைமுகம், வெள்ளாறு முகத்துவாரம் ஆகியவற்றினை தூர்வாருவதற்காக அரசு ரூ.17.80 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. அனைத்து பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளிகள் இறுதியாக்கம் செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

### 7.29 நபார்டு திட்டங்கள்

### 7.29.1 RIDF XXII- (2016-17)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி எண்.110 இன் கீழ், திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு, திருவாரூர் மாவட்டம் ஜாம்பவானோடை, தஞ்சாவூர் மாவட்டம் கரையூர்தெரு மற்றும் ஏரிப்புரக்கரை, தூத்துக்குடி மாவட்டம் கொம்புதுறை, இராமநாதபுரம் மாவட்டம் மோர்பணை, கன்னியாகுமரி மாவட்டம் சின்னத்துறை மற்றும் இரவிபுத்தன்துறை ஆகிய இடங்களில் மீன்பிடி இறங்குதளங்கள் மேம்படுத்தும் பணிகள் மற்றும் ஈரோடு மாவட்டம் பவானிசாகர், தஞ்சாவூர் மாவட்டம் அகரப்பேட்டை,

திருமங்கலக்கோட்டை மற்றும் திருவாரூர் மாவட்டம் நல்லிக்கோட்டை, தேனி மாவட்டம் மஞ்சளாறு அணை மற்றும் திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு ஆகிய இடங்களில் மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகள் மேம்படுத்தும் பணிகள் ரூ.33.42 கோடி செலவில் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தார்கள்.

இந்த 7 மீன்பிடி இறங்கு தளங்களையும், 6 மீன்குஞ்சு வளர்ப்புப் பண்ணைகளையும் நபார்டு XXII –நிதியுதவியுடன் மேம்படுத்துவதற்கு ரூ.33.42 கோடிக்கு, அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு அனைத்து பணிகளும் துவங்கப்பட்டுள்ளன.

### 7.29.2 RIDF XXIII- (2017-18)

கடல் அரிப்பினால், கடலோர கிராமங்கள் வெகுவாக பாதிக்கப்படுகின்றன. கடலோரப் பாதுகாப்பிற்காக, மணல் நிரப்பப்பட்ட புவிசார் செயற்கை குழாய்களால் தயாரிக்கப்பட்ட நீரடி நீர்க்கால்களை, சுற்றுச்சூழலுக்கு உகந்தவாறு மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ‘தேசிய கடல்சார் தொழில்நுட்ப மையம் (NIOT) வடிவமைத்துள்ளது. இத்தொழில்நுட்பத்தை, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள

கடலூர் –பெரியகுப்பம் கிராமத்தில், முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்தொழில்நுட்பம், கடல் அலைகளிலிருந்து கடலோரப் பகுதியைப் பாதுகாப்பதுடன், மீன்வளத்தையும் அதிகரிக்கிறது.

2017-18 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின்படி, 'நபார்டு' வங்கி நிதியுதவியுடன் அதிக கடல் அரிப்பு ஆபத்துள்ள பகுதிகளில் இத்தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, 2017-18 ஆம் ஆண்டில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

'தேசிய கடல்சார் தொழில்நுட்ப மையம் (NIOT) மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

## 7.30 உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் கடலோர பேரிடர் அபாயம் குறைப்பு திட்டப் பணிகள் (Coastal Disaster Risk Reduction Project)

மீன்பிடி தொழிலும் மீனவர் சமுதாயமும் இயற்கை இடர்பாடுகள், பருவகால மாற்றம் மற்றும் அழிந்துவரும் கடல் சுற்றுப்புற சூழல் ஆகியவற்றால் அதிக பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. கடல் மீன்வளத்தை மேம்படுத்தவும், மீனவர்கள் பாதுகாப்பை உறுதி செய்யவும், உலக வங்கி நிதி

உதவியுடன், “கடலோர பேரிடர் அபாயம் குறைப்புத் திட்டத்தின் (CDRRP)” கீழ் பின்வரும் திட்டங்களை செயல்படுத்திட, அரசு ரூ.321.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதன் விவரம் கீழ்க்கண்ட அட்டவணை 12ல் கொடுக்கப் பட்டுள்ளது.

**அட்டவணை: 12**

**உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் கடலோர பேரிடர் அபாயம் குறைப்பு திட்டப்பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி விவரம்**

| **I.** | **மீன்வள உட்கட்டமைப்பு:** | **தொகை (ரூ. கோடியில்)** |
|---|---|---|
| அ) | அவசர கால சுனாமி மறுசீரமைப்பு திட்ட பணிகள் | 132.30 |
| ஆ) | புதிய பணிகள் (2 திட்டங்கள்) | 78.00 |
| இ) | புதிய திட்டங்களுக்கான ஆய்வு | 10.00 |
| | **மொத்தம்** | **220.30** |
| **II.** | **நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டம் (FIMSUL)** | 38.86 |
| **III.** | கம்பியில்லா தொலை தொடர்பு வசதிகள் வழங்குதல் | 62.14 |
| | **நிகர மொத்தம்** | **321.30** |

## 7.30.1 மீன்பிடி உட்கட்டமைப்பு வசதிகள் (ரூ.220.30 கோடி)

இத்திட்டத்தில், முன்னதாக அவசர கால ‘சுனாமி’ மறுகட்டமைப்பு திட்டத்தில் எஞ்சிய கட்டுமானப் பணிகளை முடித்திடும் வகையில், இந்த நிதியுதவி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. ஒப்பளிக்கப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு.

## அட்டவணை:13

## சுனாமி மறுகட்டமைப்பு திட்டத்தின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட பணிகள் விவரம்

| வ. எண். | பணிகளின் விவரம் | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | நிறைவேற்றப்பட்ட முக்கியமான உட்கட்டமைப்பு வசதிகள் |
|---|---|---|---|
| **I) மீன்பிடி துறைமுகங்கள்விரிவாக்குதல்** | | | |
| 1. | நாகப்பட்டினம் | 45.21 | அனைத்துப் பணிகளும் முடிவுற்று. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21.09.2016 அன்று திறந்து வைக்கப்பட்டது. |
| 2. | பழையார் | 32.22 | அனைத்துப் பணிகளும் முடிவுற்று பயன்பாட்டிலுள்ளன. |
| **II) ஆற்று முகத்துவாரங்களை நிரந்தரமாக நிலைப்படுத்துதல்** | | | |
| 1. | உப்பனாறு | 8.03 | அனைத்துப் பணிகளும் முடிவுற்று பயன்பாட்டிலுள்ளன. |
| 2. | வெள்ளாறு | 14.45 | அனைத்துப் பணிகளும் முடிவுற்று, பயன்பாட்டிலுள்ளன. |
| **III) மீன்இறங்குதளங்கள் கட்டுதல்** | | | |
| 1. | நாகூர் | 12.99 | அனைத்துப் பணிகளும் முடிவுற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15.07.2015 அன்று திறந்து வைக்கப்பட்டது. |
| 2. | பரங்கிபேட்டை–அன்னங்கோயில் | 18.91 | அனைத்துப் பணிகளும் முடிவுற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 27.06.2014அன்று திறந்து வைக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| **IV)** | **குழாய் பனிக்கட்டி நிலையம் கட்டுதல்** | | |
| 1. | சின்னமுட்டம் | 0.50 | அனைத்துப் பணிகளும் முடிவுற்று பயன்பாட்டிலுள்ளன, |
| **புது திட்டங்கள்** | | | |
| **V)** | தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தை நவீனப்படுத்துதல் | 60.00 | இத்திட்டத்தில் “L” வடிவ பாலம் அமைத்தல், படகு அணையும் சுவர் கட்டுதல், வலை பின்னும் கூடம் மற்றும் மீன் ஏலக்கூடம் கட்டுதல், மண் தூர்வாருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இத்திட்டத்திற்கு, உலக வங்கியின் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்து பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| **VI)** | தூத்துக்குடி மாவட்டம் புன்னக்காயலில் தாமிரபரணி ஆற்றுமுகத் துவாரத்தை நிலைப்படுத்துதல் | 18.00 | இத்திட்டத்தின் கீழ், கல் சுவர் அமைத்தல், மண் தூர்வாருதல், படகு அணையும் சுவர் கட்டுதல், அணுகு சாலை அமைத்தல் மற்றும் இதர கட்டிடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கு உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு, மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களால் **21.09.2016** அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. |

### 7.30.2 நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டம் – II (Fisheries Management for Sustainable Livelihood (FIMSUL-II)) (ரூ.101 கோடி)

கடலோர மீனவ சமுதாயம் இயற்கை சீற்றங்களினால் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படக்கூடியதாகவும் சில சமயங்களில் அவர்களது உயிருக்கே ஆபத்து ஏற்படும் சூழ்நிலையும் உருவாகிறது.

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் கடலோர பேரிடர் அபாயம் குறைப்புத் திட்டம் (CDRRP) - நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டத்தின் கீழ் (FIMSUL-II) கீழ்க்காணும் உப திட்டங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

அ. கடல் மீன்வள கூட்டு மேலாண்மை (ரூ.23.03 கோடி)

ஆ. அறிவுசார் மேலாண்மை திறன் மேம்படுத்துதல் (ரூ.5 கோடி)

இ. மீன்வள வாழ்வாதாரத்திற்கு உதவியளித்தல் (ரூ.6.85 கோடி)

ஈ. திட்ட மேலாண்மை உதவி (ரூ.3.98 கோடி)

உ. கடல் மீன்பிடிப்பில் மீனவர்களது பாதுகாப்பினை உறுதி செய்திட கம்பியில்லா தொலைதொடர்பு வசதியளித்தல் (ரூ.62.14 கோடி)

**அ) கடல் மீன்வள கூட்டு மேலாண்மை (Marine Fisheries Co-Manangement) (ரூ.23.03 கோடி)**

இந்த உபதிட்டத்தின் கீழ் பின்வரும் பல்வேறு நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுகின்றன.

- கடல் மீன்வளத்தினை சார்ந்து வாழும் பல்வேறு பங்கு உரிமையாளர்களுக்கு (Stake Holders) நியாயமான மீன்வள பங்கீடு கிடைப்பதை உறுதி செய்வதற்கும், சிறந்த முறையில் கடல் மீன்வளத்தை மேலாண்மை செய்வதற்கும், தமிழ்நாட்டில் 13 கடலோர மாவட்டங்களில் கிராம, மாவட்ட மற்றும் மண்டல அளவிலான கூட்டு மேலாண்மை குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மாநில அளவிலான கூட்டு மேலாண்மை குழு அமைக்கப்படும்.

- மீன்வள மேலாண்மை குழுக்கள் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றைத் திறம்பட செயல்படுத்திட வழிகாட்டுவதற்காக மத்திய மீன்வள ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் தமிழ்நாடு மீன்வள பல்கலை கழகத்தில் உள்ள வல்லுநர்களைக் கொண்ட ஒரு மாநில அளவிலான தொழில்நுட்பக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களில் தனியாக மீன்வளப் பங்கு உரிமையாளர்களைக் (Stake Holders) கொண்ட மேலாண்மை குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்களுக்கு சுகாதாரமான முறையில் மீன்பிடி துறைமுக / மீன்பிடி இறங்குதள வளாகங்களை பராமரித்திட சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. இக்குழுவானது, சம்பந்தப்பட்ட மீன்பிடி துறைமுகம் / மீன்பிடி இறங்குதள உட்கட்டமைப்புகளை அன்றாடம் சுகாதாரமான முறையில் பராமரிக்கத் தேவையான நிதி ஆதாரங்களைப் பெருக்கி, அந்த நிதியிலிருந்து சிறப்பாக இக்கட்டமைப்பு வசதிகளைப் பராமரிக்கவும் பல்வேறு வழிமுறைகளை கையாளுதல் மூலம் சுகாதாரத்தை மேம்படுத்திடவும், மீனின் தரத்தினை உறுதி செய்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- “மீன்வள தகவல் மற்றும் சேவை மையங்கள்” சென்னை, கடலூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய

6 மாவட்டங்களில் ரூ.1.20 கோடி செலவில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இம்மையங்களில் ஒற்றைச்சாளர தகவல் மையமாக செயல்படுவதன் மூலமாக மீன்பிடிப்பு தொடர்பான தகவல்கள் திரட்டுதல், மீன்வளம் நிறைந்த பகுதி குறித்தான தகவல் அளித்தல், அரசின் நலத்திட்டங்கள் மற்றும் வானிலை எச்சரிக்கையை மீனவர்களுக்கு தெரிவித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

- பாரம்பரிய மீன்பிடி கலன்களில் மீனவர்கள், கடலில் மீன்பிடிப்பில் ஈடுபடும்போது, இயற்கையின் ஆபத்துக்களை சந்திக்க நேரிடும் நிகழ்வுகளில், மீனவர்களின் பாதுகாப்பினை உறுதிசெய்திட கடலோர மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு இயந்திரம் பொருத்தப்பட்ட பாரம்பரிய மீன்பிடிகலனுக்கும், தலா 2 உயிர் காப்பு மிதவைகள் வீதம் முதற்கட்டமாக 2015-16 ஆம் ஆண்டு 11,500 விலையில்லா உயிர்காப்பு மிதவைகள் (Life buoys) நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த பாரம்பரிய மீனவர்களுக்கு ரூ.1.62 கோடி செலவில் வழங்கப்பட்டன. மேலும்

இரண்டாம் கட்டமாக, 2016-17 ஆம் ஆண்டில் 38,000 விலையில்லா உயிர்காப்பு மிதவைகள் (Life buoys) மீதமுள்ள மாவட்டங்களில் உள்ள பாரம்பரிய மீன்பிடி படகுகளுக்கு ரூ.5.36 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

- ஒவ்வொரு கடலோர மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்படும் கூட்டு மேலாண்மை குழுவினர் மீன்வளம் சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கும், அரசின் திட்டங்களை உருவாக்குவதற்கும் ஏதுவாக, மீன்பிடிப்பு மற்றும் மீன்வளப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்படுகிறது. இப்பணிக்காக புள்ளி விபர உதவியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு புள்ளி விவரசேகரிப்பு பணி நடைபெற்று வருகிறது. இப்பணிக்கு, மொத்தம் ரூ.51.84 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் கடல் மீன் உற்பத்தியினை மதிப்பீடு செய்ய கொச்சியிலுள்ள மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, முதல் தவணைத்தொகையாக ரூ.**66.50** இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. மீன்துறை

களப்பணியாளர்கள் மற்றும் புள்ளி விவர உதவியாளர்களுக்கு மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் மீன் வகைகளின் இனம் அறிதல், மீன்பிடிப்பு புள்ளி விவரங்கள் சேகரித்தல், தொகுத்தல் மற்றும் அறிக்கை தயாரித்தல் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- கடல் மீன்வள மேலாண்மையை மேம்படுத்திடவும் கடலோர மீனவர்களின் நலனுக்காகவும் மீன்வளம் சார்ந்த பிரத்யேக ஆய்வுகள் ரூ.10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தமிழ்நாட்டிலுள்ள மீன்பிடி துறைமுகங்கள் / மீன்பிடி இறங்குதளங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மேலாண்மை குழு உறுப்பினர்கள் மற்றும் இறங்குதளம் சார்ந்த பங்கு உரிமையாளர்களுக்கு, மீன்பிடி துறைமுக/இறங்குதள மேலாண்மை, சுகாதாரமான முறையில் பராமரிப்பது, சுகாதாரமான முறையில் மீன்களை கையாளுதல், கடலில் பாதுகாப்பு முறைகள், கூண்டுகளில் மீன்வளர்த்தல், கடற்பாசி வளர்த்தல், கூட்டுறவு நிர்வாகம், மேலாண்மை,

தொழில்முனைவோர் மற்றும் முதலுதவி அளிக்கும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் பயிற்சிகள் வழங்கிட ரூ.75 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

- மீன்பிடி துறைமுகங்கள் / மீன்பிடி இறங்குதளங்கள் ஆகியவற்றின் அன்றாட செயல்பாடு மற்றும் தொடர்ந்து சுத்தமாக வைத்திருக்கவும், பராமரிப்பினை மேற்கொண்டு ஊக்குவிக்கும் விதமாக அவற்றினை நிர்வகிக்கும் மேலாண்மை குழுக்களுக்கு முதலாம் ஆண்டு செலவினத்தில் 75 விழுக்காடு, இரண்டாம் ஆண்டு செலவினத்தில் 60 விழுக்காடு ஈடு செய்வதற்காக உலக வங்கி ரூ.2.89 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.
- சிறிய மீன்பிடி கலன்களுக்கு 8 குதிரைத் திறனுக்கு குறைவான வெளிப் பொருத்தும் இயந்திரத்தை 50 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக ரூ.30,000/- மானியத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, வெளி பொருத்தும் இயந்திரங்கள் வழங்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**ஆ. அறிவுசார் மேலாண்மை திறனை மேம்படுத்துதல் (ரூ.5 கோடி)**

இத்திட்டத்தின் கீழ், பயிற்சிகள் மற்றும் திறன்மேம்பாடு மூலம் மீன்வளத்துறை அலுவலர்களுக்கு மீன்வள வாழ்வாதார திட்டங்கள் மற்றும் கூட்டுமேலாண்மை ஆகியவற்றில் உரிய பயிற்சிகள் பெற இரண்டு அலுவலர் குழுக்கள் வியட்நாம் (15 அலுவலர்கள்) மற்றும் ஆஸ்திரேலியா (4 அலுவலர்கள்) ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டு பயிற்சிகள் பெற்றுள்ளனர். மீன்வளத்துறை இயக்குநர் அலுவலகத்தில் புதிய மைய நூலகம் அமைக்க பொதுப்பணித்துறை மூலம் ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**இ) மீன்வள வாழ்வாதாரத்திற்கு உதவியளித்தல் (ரூ.6.85 கோடி)**

மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மீன்வளம் சார்ந்த மற்றும் மீன்வளம் சாராத வாழ்வாதாரத்தை உயர்த்தும் உதவிகளை செய்தல் இப்பிரிவின் முக்கிய நோக்கமாகும். 2015-16 ஆம் ஆண்டில், மீனவர்களுக்கு குறிப்பிட்ட வாழ்வாதார திட்டங்களில் திறன் வளர்த்தல், கூண்டுகளில் மீன்வளர்ப்பு, கடற்பாசி வளர்த்தல், மதிப்புகூட்டப்பட்ட

மீன்உணவு தயாரித்தல் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் கடலோர பகுதிகளில் 10 இடங்களில் 100 விழுக்காடு மானியத்துடன் கடலில் மிதவை கூண்டுகளில் மீன்வளர்ப்பு மீனவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து 2016-17ஆம் ஆண்டில், இரண்டாம் கட்டமாக 35 மிதவை கூண்டுகள் அமைக்கப்பட்டு, பயனாளிகளால் கூண்டுகளில் மீன் வளர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவ விதவை பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உதவி செய்யும் வகையில் 12 நவீன மீன் விற்பனை நிலையங்கள் ரூ.56.40 இலட்சம் செலவில் காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டு மீனவ விதவை பெண்களால் நல்ல முறையில் நடத்தப்பட்டு வருகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்திற்குட்பட்ட மண்டபம் மற்றும் இராமேசுவரம் பகுதி மீனவ மகளிருக்கு கடற்பாசி வளர்ப்பு மிதவைகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டு, அதற்கான

பயிற்சிகள் மண்டபத்திலுள்ள மத்திய அரசின் Central Salt & Marine Chemicals Research Institute (CMSCRI) நிறுவனம் மூலம் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் 1500 கடற்பாசி வளர்ப்பு மிதவைகள் மற்றும் உபகரணங்கள், 50 மீனவ மகளிர்குழுக்களுக்கு வழங்கப்பட்டு கடற்பாசி வளர்க்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 200 மீனவ மகளிர் பயனாளிகள் பயனடைந்துள்ளனர். மேலும், 2017-18 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் 40 மீனவ மகளிர் குழுக்களுக்கும் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் 10 மீனவ மகளிர் குழுக்களுக்கும் ஆக மொத்தம் 50 மீனவ மகளிர் குழுக்களுக்கு கடற்பாசி வளர்ப்பு பயிற்சி மற்றும் மிதவைகள் வழங்கப்பட்டு கடற்பாசி வளர்ப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

2016 - 17 ஆம் ஆண்டில் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டசபையில், சிறப்பாக செயல்படும் மீன்பிடி துறைமுகம் / மீன் இறங்குதளம் மேலாண்மை குழுக்களுக்கு ஊக்கம் அளித்திடும் வகையில் மீன்கள், பனிக்கட்டி, உப்பு போன்ற அத்தியாவசிய பொருட்களை ஏற்றிச் செல்ல வசதியாக, 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 25 விரைவு சரக்கு வாகனங்கள்

வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி 25 சிறிய இரக விரைவு சரக்கு வாகனங்கள் உலக வங்கி நிதி உதவியுடன் நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டத்தின் கீழ் ரூ.1.38 கோடி செலவில் வாங்கப்பட்டு மீன்பிடி துறைமுகம் / மீன்பிடி இறங்குதள மேலாண்மை குழுக்கள் வசம் ஒப்படைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**ஈ. மேலாண்மை உதவி (ரூ.3.98 கோடி)**

திட்டங்களை செவ்வனே செயல்படுத்திடவும், அதன் முன்னேற்றத்தினை கண்காணிக்கும் பொருட்டும் தனியாக ஒரு திட்ட செயல்பாட்டு குழு அமைக்க அரசு இந்த உபதிட்டத்தின்கீழ் ரூ.3.98 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கி தற்போது செயல்பாட்டில் உள்ளது.

**உ. கடல் மீனவர்களது பாதுகாப்பிற்கு கம்பியில்லா தொலைதொடர்பு வசதியளித்தல் (ரூ.62.14 கோடி)**

கடலில் மீன்பிடிப்பு மேற்கொள்ளும் மீனவர்களின் பாதுகாப்பினை தொடர்ந்து உறுதிபடுத்தவும், வானிலை அறிக்கை மற்றும் மீன்வள ஆதார இடங்களைத் தொடர்ந்து தெரிந்து கொள்ளவும், தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்டு இயக்கப்படும் அனைத்து மீன்பிடி கலன்களுக்கும் கம்பியில்லா

தொலைதொடர்பு கருவிகள் (VHF Sets) வழங்கிட ரூ.62.14 கோடிக்கு உலக வங்கி நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கம்பியில்லா தொலைதொடர்பு அமைப்பினை ஏற்படுத்திட, 7 இடங்களில் புதிய தொலைதொடர்பு கோபுரங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது மற்றும் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள BSNL தொலைதொடர்பு நிறுவனத்திற்குச் சொந்தமான 8 தொலைதொடர்பு கோபுரங்களை குத்தகை அடிப்படையில் மீன்வளத்துறைக்கு பெற்றிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீனவர்களுக்கான கம்பியில்லா தொலைத்தொடர்பு திட்டத்தினை மேலாண்மை செய்திட கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் தொலைத்தொடர்பு கருவிகள் (VHF Sets) உலக வங்கி வழிகாட்டுதல்களின்படி கொள்முதல் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. தொலைத்தொடர்பு கருவிகள் வரும் செப்டம்பர், 2017க்குள் வழங்கப்படும்.

### 7.31 சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தில் மீன் இறங்குதளங்கள் கட்டுதல் (TRP)

தமிழகத்தில் பல்வேறு கடலோர கிராமங்களில் பத்து புதிய மீன் இறங்குதளங்கள் கட்ட, அரசு ரூ.49.97 கோடி ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றில், அண்ணாமலைச்சேரி மற்றும் பெரியமாங்கோடு தவிர, அனைத்து இடங்களிலும் மீன் இறங்குதளங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. அண்ணாமலைச்சேரி மற்றும் பெரியமாங்கோடு மீன் இறங்கு தளங்கள் கட்டுவதற்கு தேசிய வன உயிரின வாரியத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வன உயிரின காப்பாளரால் வனத்துறையின் அனுமதி வழங்கப்பட்டதும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 7.32 இதர திட்டங்கள்

#### 7.32.1 திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு ஏரி முகத்துவாரத்தை கல் சுவர் அமைத்து நிரந்தரமாக நிலைப்படுத்த ஆய்வு மேற்கொள்ளுதல்.

திருவள்ளூர் மாவட்டத்தில், பழவேற்காடு ஏரி முகத்துவாரத்தை கல் சுவர் அமைத்து நிரந்தரமாக நிலைப்படுத்தும் தொழில் நுட்ப–பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கவும், மாதிரி ஆய்வினை மேற்கொள்ளவும்,

அரசு ரூ.40 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதலும், நிதி ஒப்பளிப்பும் வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை சென்னை, இந்திய தொழில்நுட்ப நிலையத்தால் (IIT, Madras) தயாரிக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்தான அறிக்கை தயாரிப்பதற்கு கலந்தாலோசனை நிறுவனம் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

### 7.32.2 எண்ணூர் மற்றும் வெள்ளப்பள்ளத்தில் புதிய மீன்பிடி துறைமுகம் கட்டுதல் மற்றும் கடலூர் முதுநகரில் (Cuddalore Old Town) உள்ள மீன்பிடி துறைமுகத்தை சீரமைக்கும் பணிகளுக்கு ரூ.4 கோடி செலவில் ஆய்வுப்பணி மேற்கொள்ளுதல்

திருவள்ளூர் மாவட்டம் எண்ணூரில் சூரை மீன்பிடிப்பதற்கான மீன்பிடி துறைமுகம் அமைக்கவும், நாகப்பட்டினம் மாவட்டம் வெள்ளப்பள்ளத்தில் மீன்பிடி துறைமுகம் அமைக்கவும் மற்றும் கடலூர் மாவட்டம் கடலூர் முதுநகரில் (Cuddalore Old Town) தற்போதுள்ள மீன்பிடி துறைமுகத்தை சீரமைக்கவும் ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரைவு விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டுள்ளது. இந்த திட்டங்களுக்கான ஆய்வுகள் முடிவுற்று, கடலோர ஒழுங்கு முறை குழுமத்தின் (CRZ) அனுமதியினைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 7.33 கூடங்குளம் அணுமின் நிலையம் அருகாமையிலுள்ள கிராமங்களின் அபிவிருத்தி திட்டம்

கூடங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள அணுமின் நிலைய திட்டத்தின் ஒரு பகுதியாக, அதற்கு அருகாமையிலுள்ள கிராமங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக, ரூ.500 கோடி செலவில் செயல்படுத்தப்படும் திட்டத்தில் மீனவர்கள் பயனுறும் வகையில் கடலோர உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளுக்காக ரூ.92 கோடி நிதியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டங்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- உவரியில் ரூ.5 கோடி செலவில் குளிர்சாதன அறை மற்றும் நவீன மீன் விற்பனை நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- உவரி மீனவர் கிராமத்தில் மீன் இறங்கு தளம் கட்டும் பணி ரூ.66.70 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
- கூத்தங்குழி மற்றும் பெருமணல் ஆகிய இரண்டு கிராமங்களிலும் தலா ரூ.10 கோடி வீதம் மொத்தம் ரூ.20 கோடி மதிப்பீட்டில் தூண்டில் வளைவுகள் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன.

- கூட்டப்பனை கிராமத்தில், ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் வலைபின்னும் கூடம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

## 7.34 தமிழ்நாட்டில் மீன்பதனிடும் பூங்காக்கள் அமைத்தல்

தமிழகத்தின் 13 கடலோர நகரங்களில் மீன்பதனிடும் பூங்காக்கள் அமைக்கப்படும் என்ற அரசு அறிவிப்பினைத் தொடர்ந்து, முதற்கட்டமாக கடலூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், அதற்கான தகுதிவாய்ந்த இடங்கள் தேர்வு செய்யப்பட்டன. இம்மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களில் மீன்பதனிடும் பூங்காங்கள் அமைத்திட ஏதுவாக, தனியார் பங்களிப்பாளர்களுக்கு நீண்ட கால குத்தகை முறையில் இடம் ஒதுக்கீடு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில், கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன்பதனிடும் பூங்கா அமைத்திட நிலம் ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. கடலூர், நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் இட ஒதுக்கீடு செய்ய மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான ஆணையினை அரசு வழங்கியதை தொடர்ந்து விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது.

திருவள்ளூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் மீன் பதனிடும் பூங்காக்கள் அமைத்திட, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தால் (SIPCOT) தனியார் பங்களிப்பாளர்களுக்கு நில ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்பட்டு, அவற்றிற்கு பல்வேறு துறைகளிடம் இருந்து ஒப்புதல் பெறும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 7.35 மாமல்லபுரத்தில் உலகத்தரம் வாய்ந்த கடற்காட்சியகம் (Oceanarium) நிறுவுதல்

சென்னைக்கு அருகே மாமல்லபுரத்தில் ரூ.258 கோடி செலவில் உலகத்தரம் வாய்ந்த கடற்காட்சியகம் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் நிறுவிட, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்திற்குச் சொந்தமான 13.07 ஏக்கர் பரப்பிலான தகுதியான இடம் தேர்வு செய்யப்பட்டு, செய்யத்தக்கமைக்கான ஆய்வினை (Feasibility Study) மேற்கொள்ளவும், பரிவர்த்தனை ஆலோசனை சேவையை (Transaction Advisory Services) வழங்கிடவும் "திருவாளர்கள் தாராசா லிமிடெட், மும்பை " (M/s Darashaw Private Limited, Mumbai) என்ற நிறுவனம் கலந்தாலோசகராக நியமனம் செய்யப்பட்டு, பல்வேறு ஆராய்வுகளுக்குப் பின் விரிவான கோட்பாடு (Detailed

Concept) மற்றும் தொடர்புடைய பொழுது போக்கு வசதிகள் போன்றவைகள் இறுதி செய்யப்பட்டன. இரண்டு முறை உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டபோதும், ஒப்பந்தம் கோரியவர்கள் ஒப்பந்த புள்ளிகளுக்கான நிபந்தனைகளில் தகுதி பெறவில்லை. எனவே, மறு ஒப்பந்தபுள்ளி கோருவதற்காக, தேர்ந்தெடுக்கப்படக்கூடிய வாய்ப்புடைய தனியர் பங்களிப்பாளர்கள் கருத்துக்களின் அடிப்படையில் தகுதி பெறுவதற்கான வேண்டுகோள் (Request for Qualification (RFQ) ) ஆவணத்தில் மாற்றம் செய்யப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

### 7.36 சென்னை, சேத்துப்பட்டு பசுமை பூங்காவில் வண்ணமீன் காட்சியகத்துடன் கூடிய நீர்வாழ் உயிரின மெய்நிகர் காட்சியகம் (Aquarium cum Aquatic Virtual Reality Centre) அமைத்தல்

சென்னை சேத்துப்பட்டு ஏரியில், உருவாக்கப்பட்ட "பொழுதுபோக்கு தூண்டில் மீன்பிடிப்பு மற்றும் பசுமை பூங்கா" 27.02.2016 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இப்பசுமை பூங்காவில், படகு குழாம், தூண்டில் மேடை, பல அடுக்கு வாகன நிறுத்தம், பூங்கா, பொழுது போக்கு மையம், உணவகம், நடை மற்றும் தொடர் ஓட்டப்பாதை, சிறுவர் விளையாட்டு

பகுதி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் போன்ற வசதிகள் ரூ.42 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சென்னை மாநகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள இந்த பசுமை பூங்கா பொதுமக்களின் ஏகோபித்த வரவேற்பினைப் பெற்றுள்ளதோடு, மழை நீரை சேகரித்து அந்தப் பகுதியின் நிலத்தடி நீரினை செறிவூட்டவும் உதவுகிறது. ‘மே’ **2017** வரை, **2,87,247** எண்ணிக்கையிலான பார்வையாளர்கள் இப்பசுமைப் பூங்காவினை பார்வையிட்டுள்ளனர். எனவே, இப்பூங்காவிற்கு மேலும் சிறப்பு சேர்க்கும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இப்பூங்காவில் வண்ணமீன் காட்சியகத்துடன் கூடிய நீர்வாழ் உயிரின மெய்நிகர் காட்சியகம் (Aquarium cum Aquatic Virtual Reality Centre) அமைக்கப்படும் என சட்டப்பேரவை விதி எண்.110 இன் கீழ் அறிவித்தார்கள். இத்தனித்தன்மை வாய்ந்த வசதி, ரூ.6 கோடி திட்ட மதிப்பீட்டில் உருவாக்கப்படவுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் இத்திட்டத்தினை செயல்படுத்தும் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

## 7.37 மீன்விற்பனை சந்தைகளை நவீனப் படுத்துதல்

சுகாதாரமான மற்றும் நல்ல தரமான மீன்களை நுகர்வோருக்கு வழங்குவதில், மீன்விற்பனை சந்தைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில் பெரும்பாலான மீன்விற்பனை சந்தைகள் உள்ளாட்சி அமைப்புகள் / மீனவர் கூட்டுறவு சங்கங்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்த மீன்விற்பனை சந்தைகளை, குளிர்காப்பு மற்றும் நவீன வசதிகளுடன் மேம்படுத்துவதன் மூலம், மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களுக்கு நல்ல விலையைப் பெற்றிடவும், பொது மக்களுக்கு தரமான மீன்களை வழங்கிடவும் வாய்ப்பாக அமையும்.

தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் 21 மீன்சந்தைகளை நவீனப்படுத்த, ரூ.14.25 கோடிக்கு (20 மீன் சந்தைகளுக்கு திட்ட மதிப்பீட்டில் 40 விழுக்காடு நிதியுதவியும், ஒரு மீன்சந்தைக்கு 50 விழுக்காடு நிதியுதவியும்) நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

நீலாங்கரை மற்றும் பெசன்ட் நகரில் மீன் விற்பனை சந்தை கட்டுமானப்பணிகள் அனைத்தும் முடிவுற்று பயன்பாட்டிலுள்ளது. மீதமுள்ள 19 இடங்களிலும் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

உள்ளாட்சி அமைப்புகள்/ மீனவர் கூட்டுறவு சங்கங்களின் நிதி நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காகத் தேவைப்படும் மீதமுள்ள 60 விழுக்காட்டு தொகையில், 50 விழுக்காடு தொகையை, நிதி உதவியாக அரசு வழங்குகிறது. மீதமுள்ள 10 விழுக்காடு தொகையை மட்டும் அந்தந்த நகராட்சிகள் / மீனவர் கூட்டுறவு சங்கங்கள் அவர்களது சொந்த நிதியிலிருந்து செலவிட வேண்டும். 2016-17ஆம் ஆண்டிற்கு தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் அதனுடைய பங்குத்தொகையை திட்டமதிப்பீட்டில் 50 விழுக்காடாக உயர்த்தியுள்ளது.

தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் அதனது பங்குத் தொகையில் முதல் தவணை நிதியாக ரூ.83.95 இலட்சமும், தமிழ்நாடு அரசு, தனது பங்குத் தொகையில் முதல் தவணை நிதியாக ரூ.84.24 இலட்சமும் விடுவித்துள்ளது. இத்தொகைகள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு, அந்த நிதி விடுவிக்கப்பட்டு மீன்சந்தை கட்டுதல்/ நவீனப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சட்டபேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி எண் 110 இன் கீழ் அறிவித்த அறிவிப்பினைத் தொடர்ந்து, சென்னை நடுக்குப்பத்தில் சேதமடைந்த மீன் விற்பனை சந்தையினை, மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திடும் பொருட்டு போர்க்கால அடிப்படையில், ரூ.14.43 இலட்சம் செலவில் அரசால் சீரமைக்கப்பட்டது. நிரந்தரமான மீன்விற்பனை சந்தை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 7.38 மீனவர் இலவச வீட்டு வசதி திட்டம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் 'மாண்புமிகு முதலமைச்சரின் சூரியசக்தி பசுமை வீடுகள்' வழங்கும் திட்டத்தின் கீழ் மீன்வளத்துறைக்கு 2016-17 ஆம் ஆண்டில், கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு 500 வீடுகள் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், மத்திய மாநில அரசுகளின் நிதி பங்களிப்பு திட்டமான 'நீலப்புரட்சி' திட்டத்தில், 'இந்திரா ஆவாஸ் யோஜனா' திட்டத்தினை செயல்படுத்துவதுபோல், மீனவர்களுக்கு

பிரத்தியேகமாக 5,000 வீடுகள் ஒதுக்கீடு செய்து, அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும்.

## 8. உள்நாட்டு மீன்வளம்

மீன் பிடிக்கும் ஆதாரங்களிலிருந்து பெறப்படும் மீன் உற்பத்தி உலகளவில் நிலையான அளவிலேயே உள்ளது. இந்த ஆதாரங்களிலிருந்து மீன் உற்பத்தி மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்க வாய்ப்பில்லை என வல்லுனர்கள் தெரிவிக்கிறார்கள். பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப தேவைப்படும் சத்தான உணவுப் பாதுகாப்பினை உறுதிசெய்யும் மற்றும் நம்பிக்கையூட்டும் பிரிவுகளில் நீர்வாழ் உயிரின வளர்ப்பும் ஒன்றாகும். கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குவதிலும் மற்றும் புரதம் நிறைந்த உணவினை அளிப்பதிலும், உள்நாட்டு மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு முக்கியப்பங்கினை வகிக்கிறது.

தமிழ்நாட்டின் உள்நாட்டு மீன்வள மேம்பாட்டிற்கு 3.83 இலட்சம் ஹெக்டேர் நீர்பரப்பு உகந்த அளவில் இருந்தாலும், இந்த நீர் நிலைகள் பருவ மழையினை மட்டும் நம்பியிருப்பதால் பெரும்பாலான நீர் நிலைகளில் குறைந்த

காலமே நீர் தேங்கியிருக்கும் நிலையில் உள்ளது. பருவம் தவறிய மற்றும் குறைவான மழை பொழிவால் நீர்நிலைகளில் குறுகிய கால நீர் இருப்பு, போதிய நீர் இல்லாமை, சினை மீன்கள் இனப்பெருக்க காலங்களில் தரமான மீன்குஞ்சு உற்பத்திக்கு தயாராகாமல் இருப்பது மற்றும் குறைந்த விலையில் தரமான மீன் தீவனம் கிடைக்காமை போன்றவை உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெரிதும் பாதிக்கக்கூடிய காரணிகளாக உள்ளன.

இத்தகைய இயற்கை இடர்பாடுகளை களைந்து மீன் உற்பத்தியினை அதிகரிக்க, மீள்வளத்துறை கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

- சுற்றுச்சூழலுக்குகந்த வளங்குன்றா மீன் வளர்ப்பு / இறால் வளர்ப்பினை மேற்கொள்ளுதல்.
- நீர்நிலைகளில் மிதவை கூண்டுகளில் மீன்குஞ்சுகள் வளர்த்தெடுக்கும் முறையை அறிமுகப்படுத்துதல்.
- நீர்த்தேக்கங்களில் தீவிர முறையில் கூண்டுகளில் மீன்வளர்ப்பினை மேற்கொள்ளுதல்.

- ஆண்டு முழுவதும் மீன்குஞ்சுகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் மீன்விதை வங்கிகளை உருவாக்குதல்.
- பாசன குளங்களில் தீவிர மீன்வளர்ப்பினை மேற்கொள்ளுதல்.
- பண்ணைக்குட்டைகள் / பல்நோக்கு பண்ணைக் குட்டைகளில் வேளாண்மையுடன் மீன்வளர்ப்பினை ஒருங்கிணைத்து, அதன் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் ஈட்ட வழிவகை செய்தல்.
- வேகமாக வளரும் மீன் இனங்களான, அமூர் கெண்டை, ஜெயந்தி ரோகு, மரபுவழி மேம்படுத்தப்பட்ட பண்ணை திலேப்பியா (Genetically Improved Farmed Tilapia (GIFT)) மற்றும் “பங்கேஸியஸ்” (Pangassius) போன்ற மீன் இனங்களை அறிமுகப்படுத்தி அதனை வளர்க்கும் தொழில்நுட்பத்தை பரவலாக்குதல் மற்றும் இவ்வகை மீன் இனங்களுக்கான மீன்குஞ்சு பொரிப்பகங்கள் அமைத்து மீன் குஞ்சுகள் உற்பத்தியினை அதிகரிக்க செய்தல்.

- மீன் / இறால் குஞ்சு பொரிப்பகங்கள், மீன்வளர்ப்பு, மீன் தீவன உற்பத்தி நிலையம் மற்றும் சுகாதாரமான மீன்விற்பனை நிலையம் ஆகியவற்றிற்கான உட்கட்டமைப்புகளை அமைக்க மீன் வளர்ப்போர் மற்றும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கி ஊக்குவித்தல்.
- உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடித் திறனை மேம்படுத்துதல்.
- வண்ணமீன் வளர்ப்பினை ஊக்குவித்து, அதன் மூலம் மகளிர் மற்றும் இளைஞர்களுக்கு ஊரக வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.

## 8.1 நீர்த்தேக்க மீன்வளம்

தமிழ்நாட்டில் பெரிய, நடுத்தர மற்றும் சிறிய என மொத்தம் 61 நீர்த்தேக்கங்களில் உள்ள மீன்வள மேலாண்மை மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ளன. அவற்றில், உள்நாட்டு மீன்வளத்தினைப் பெருக்கிட, 53 நீர்த்தேக்கங்கள் மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டிலும், 8 நீர்த்தேக்கங்கள் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டிலும் உள்ளன.

- மீன் உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்கில் நீர்த்தேக்கங்களின் மீன்வளத்தினை தங்களது

வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள உள்நாட்டு மீனவர்களின் வருவாயினைப் பெருக்குவதுடன், நீர்த்தேக்க மீன் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கோடு, மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 53 நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமம் குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றன.

- இந்த நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமம் பல்வேறு கட்டங்களில் குத்தகைக்கு விடப்பட்டு வருகிறது. குத்தகைதாரர் இந்நீர்த்தேக்கங்களைச் சார்ந்த பாரம்பரிய மற்றும் பங்கு மீன்பிடிப்பு செய்யும் மீனவர்களைக் கொண்டே மீன்பிடித்திட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமம் 5 வருடத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டு குத்தகைத் தொகையில் ஆண்டுதோறும் 10 விழுக்காடு தொகை உயர்த்தி குத்தகைக்கு விடப்பட்டு வருகிறது.
- இதுவரை 35 நீர்த்தேக்கங்கள் குத்தகைக்கு விடப்பட்டு ரூ.30.75 கோடி அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. தொடர்ந்து மீதமுள்ள நீர்த்தேக்கங்களை குத்தகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 8.2 மீன் குஞ்சு உற்பத்தி / மீன் குஞ்சு வளர்ப்பு மையங்கள்

- மீன்வளத்துறை கட்டுப்பாட்டில் 7 இடங்களில் மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கீழ் ஒரு மீன்குஞ்சு உற்பத்தி நிலையமும் செயல்பட்டு வருகிறது. 2016-17ம் ஆண்டு 43.96 கோடி நுண்மீன்குஞ்சுகள் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
- மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் 34 மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்களும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கீழ் 5 மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. 2016-17ஆம் ஆண்டில் 506.92 இலட்சம் விரலிகள் மீன்வளத்துறையின் மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்களிலிருந்து வளர்த்தெடுக்கப்பட்டு, அரசு மற்றும் தனியார் நீர்நிலைகளில் இருப்பு செய்ய விநியோகிக்கப்பட்டுள்ளது.
- மாநிலத்தின் மொத்த மீன் விரலிகளின் தேவை, ஆண்டு ஒன்றிற்கு 70 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், 2016-17 ஆம் ஆண்டில் 64 கோடி மீன்விரலிகள் துறை மற்றும் தனியார் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 2016-17 ஆம் ஆண்டில் மீன்குஞ்சுகள் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையேயான இடைவெளி 8.73 கோடியிலிருந்து 6 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது.

- தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம், தேசிய புரதச் சத்து மேம்பாட்டு இணை உணவு இயக்கம், தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம், தேசிய வேளாண் ஊரக வளர்ச்சி வங்கி போன்ற திட்டங்களின் மூலம் கூடுதலாக 34.8 ஹெக்டேரில் அரசு மற்றும் தனியார் மீன்பண்ணைகள் மேம்படுத்தப்பட்டு / புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

### 8.3 நீலப்புரட்சி – ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் மீன்வள மேலாண்மை

மத்திய அரசின் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் மீன்வள மேலாண்மை – நீலப்புரட்சி திட்டத்திற்கு, 2016-17 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட ரூ.19.85 கோடிக்கு மத்திய அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

அதில் மத்திய அரசின் 50 விழுக்காடு பங்காக ரூ.9.925 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட இனவாரியான விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை :14**
**நீலப்புரட்சி – ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் மீன்வள மேலாண்மை**

***(ரூபாய் இலட்சத்தில்)***

| வ. எண் | இனங்கள் | இலக்கு | மொத்த திட்ட தொகை | மத்திய அரசு பங்கு | பயனாளி பங்கு |
|---|---|---|---|---|---|
| I | **நன்னீரில் மீன்வளர்ப்பு** | | | | |
| 1 | நீர்மடை, காற்று புகுத்திகள், மீன்தீவன அறை மற்றும் இதர வசதிகளுடன் கூடிய புதிய மீன்வளர்ப்பு குளங்கள் மற்றும் குட்டைகள் (நன்னீர்) அமைத்தல் | 60 ஹெக் | 420.00 | 210.00 | 210.00 |
| 2 | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி (MGNERGA) திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட குளங்கள் / குட்டைகள் புனரமைத்தல்(நன்னீர்) | 30 ஹெக். | 105.00 | 52.50 | 52.50 |
| 3 | ஏற்கனவே உள்ள குளங்கள் / குட்டைகள் புனரமைத்தல் | 10 ஹெக். | 35.00 | 17.50 | 17.50 |
| 4 | நன்னீர் மீன் வளர்ப்பிற்கு உள்ளீட்டு மானியம் (புதிய மற்றும் புனரமைக்கப்பட்ட குளங்களுக்கு) | 100 ஹெக். | 150.00 | 75.00 | 75.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | மின் மற்றும் இதர எரிசக்தி சாதனங்களுக்கு பதிலாக சூரிய ஒளி சக்தி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்வளர்ப்பினை மேற்கொள்ளுதல் | 4 அலகுகள் | 60.00 | 30.00 | 30.00 |
| | **கூடுதல் (அ)** | | **770.00** | **385.00** | **385.00** |
| **II** | **உவர்நீர் மீன்வளர்ப்பு** | | | | |
| 6 | நீர்மடை, காற்று புகுத்திகள், மீன்தீவன அறை மற்றும் இதர வசதிகளுடன் கூடிய புதிய மீன்வளர்ப்பு குளங்கள் மற்றும் குட்டைகள் (உவர் நீர்) அமைத்தல் | 40 ஹெக். | 280.00 | 140.00 | 140.00 |
| 7 | ஏற்கனவே உள்ள குளங்கள்/ குட்டைகள் புனரமைத்தல் (உவர் நீரில் ) | 60 ஹெக். | 210.00 | 105.00 | 105.00 |
| 8 | உவர்நீர் இறால் வளர்ப்பிற்கு உள்ளீட்டு மானியம் (புதிய மற்றும் புனரமைக்கப்பட்ட குளங்களுக்கு) | 100 ஹெக். | 300.00 | 150.00 | 150.00 |
| | **கூடுதல் (ஆ)** | | **790.00** | **395.00** | **395.00** |
| **III** | கடல் மீன்வளம் | | | | |
| 9 | கட்டுமரங்களை கண்ணாடி நாரிழைப் படகுகளாக மாற்ற பாரம்பரிய மீனவர்களுக்கு உதவி வழங்குதல். | 100 எண்ணாங்கள் | 425.00 | 212.50 | 212.50 |
| | **கூடுதல் (இ)** | | **425.00** | **212.50** | **212.50** |
| | **மொத்த கூடுதல் (அ + ஆ + இ)** | | **1985.00** | **992.50** | **992.50** |

மேலும், மத்திய அரசு 'நீலப்புரட்சி' திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் மீன்வள மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்த, 2016-17 ஆம் ஆண்டில் அரசு ரூ.9.925 கோடி ( பொது பிரிவினர் ரூ.8.275 கோடி மற்றும் தாழ்த்தப்பட்டோர் ரூ.1.65 கோடி) விடுவித்துள்ளது.

## 8.4 மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்

- தமிழ்நாட்டில் மீன்வளர்ப்பினை பிரபலப்படுத்தவும் மற்றும் கிராமப்புற பகுதிகளில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும், சென்னை தவிர 31 மாவட்டங்களில் இருந்த மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை (FFDA) மற்றும் உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளை (BFDA) ஒருங்கிணைத்து மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளாக (DFFDA) செயல்பட்டு வருகின்றன.
- விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சியளிப்பதுடன், மீன்வளர்ப்பிற்குத் தேவையான மானியங்களை அளித்து மீன்வளர்ப்பினை ஊக்குவித்தல் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் விரிவாக்க உதவி அளித்தல் இம்முகமைகளின் முக்கிய

செயல்பாடுகளாகும். இந்த மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அந்தந்த மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

- மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை திட்டத்தின் (District Fish Farmers Development Agency (DFFDA)) கீழ், சுமார் 7,700 ஹெக்டேர் பரப்பு மீன்வளர்ப்பிற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், 24,600 ஹெக்டேர் பரப்புள்ள நீர்ப்பாசன ஏரிகள் மற்றும் குளங்கள் மீன்வளர்ப்பிற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
- சுற்றுச்சூழலுக்குகந்த நிலைத்த வளம் குன்றா உவர்நீர் மீன்வளர்ப்பு முறையினை மேம்படுத்தும் பொருட்டு, தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் செயல்பட்டு வரும் அனைத்து மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளும் (DFFDA), உவர்நீர் மீன்வளர்ப்பினை மேம்படுத்தவும், கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணைய சட்டம் 2005–ன்படி ஒழுங்குபடுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் இதுவரை 1,739 இறால் பண்ணைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## 8.5 குளிர்நீர் மீன்வளத்தை (Cold Water Fisheries) மேம்படுத்துதல்

தமிழ்நாட்டில் பொழுதுபோக்கு மீன்பிடிப்பிற்கு உகந்த உயர்மட்ட / குளிர்நீர் நீரோடைகள் நீலகிரி மற்றும் மேற்கு தொடர்ச்சி மலையின் சில பகுதிகளில் அமைந்துள்ளன. உதகமண்டலம் அவலாஞ்சியில் உள்ள 'ட்ரௌட்' (Trout) மீன்குஞ்சு பொரிப்பகம் தென்னிந்தியாவிலேயே முதன்முதலாக 1906 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, செயல்பட்டு வருவது இத்துறையின் பெருமையாகும். நீலகிரி மாவட்டத்திலுள்ள 'ட்ரௌட்' (Trout) நீரோடைகளில் மீன்களின் இருப்பினை அதிகரித்திட ஆண்டுதோறும் 'ட்ரௌட்' (Trout) மீன்விரலிகள் இந்த பொரிப்பகத்தில் உற்பத்தி செய்யப்பட்டு இருப்பு செய்யப்படுகின்றன.

## 8.6 மீன்நோய் கண்டறியும் ஆய்வகக் கூடம்

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் (NADP) நிதியுதவியுடன் ரூ.1.25 கோடி செலவில் சென்னை சேத்துப்பட்டில் நவீன உபகரணங்களுடன் கூடிய மீன் நோய் பகுப்பாய்வுகூடம் மற்றும் நடமாடும் ஆய்வகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வகம், மாநிலத்தின் மீன்வளர்ப்போர் மற்றும் வண்ண மீன் வளர்ப்போரின்

தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது. மேலும், தள அளவிலேயே மண் பகுப்பாய்வு, நீரின் தரம் ஆகியவைகளைக் கண்டறியும் அனைத்து உபகரணங்களுடன் கூடிய நடமாடும் ஆய்வகத்தையும் கொண்டுள்ளது.

## 9 விரிவாக்கம் மற்றும் பயிற்சி

### 9.1 மீனவ இளைஞர்களுக்கு கடற்சார் கல்வி

மீனவ இளைஞர்களின் திறனை மேம்படுத்தவும், வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும், அரசால் அறிவிக்கப்பட்ட குறிப்பிட்ட 6 கடற்சார் கல்வி பாடப்பிரிவுகளைப் பயின்றிட, மீனவ குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு, நபர் ஒருவருக்கு ரூ.50,000/- என்ற வீதத்தில் அரசு நிதியுதவி வழங்குகிறது. 2016-17ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த, அரசு ரூ.50 இலட்சம் நிதி ஒப்பளித்துள்ளது. 2014-15 ஆம் ஆண்டு முதல் 2016-17ஆம் ஆண்டு வரை, 127 மீனவ இளைஞர்களுக்கு ரூ.42.50 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

2017-18 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 9.2 மீனவ இளைஞர்கள் இந்திய கடற்படை மற்றும் இந்திய கடலோர காவல் படையில் வேலை வாய்ப்பினை பெறுவதற்கு உதவிடும் வகையில் சிறப்புப் பயிற்சி அளித்தல்.

மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள, பன்னிரெண்டாவது வகுப்பு தேர்ச்சி பெற்ற மீனவ இளைஞர்களுக்கு மாற்று வாழ்வாதாரமாக இந்திய கடற்படை மற்றும் இந்திய கடலோர காவற்படையில் வேலை வாய்ப்பினை பெற்றிட தேவைப்படும் சிறப்புப் பயிற்சி வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விதி எண்.110 இன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை தொடர்ந்து, அரசு ரூ.1.04 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கடலோர காவல் குழுமத்தின் உதவியுடன், ஒரு வருட காலத்தில் மொத்தம் **300** மீனவ இளைஞர்கள் **6** தொகுதிகளாக பயிற்சி அளிக்கப்படுவார்கள். இப்பயிற்சிக்கு தகுதியான 300 மீனவ இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விரைவில் பயிற்சிகள் துவங்கப்படவுள்ளன.

## 9.3 விரிவாக்கப்பணிகள்

மீன்வளத்துறையில், மீனவர்கள், மீன்வளர்ப்போர் மற்றும் பயனீட்டாளர்கள் நலத்திட்டங்களை அறிந்துகொள்ளும்

நோக்குடன் விரிவாக்கம் மற்றும் பயிற்சி பிரிவு செயல்பட்டு வருகிறது.

- கடலோர மற்றும் உள்நாட்டு மீனவ கிராமங்களிலுள்ள மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போர்க்கு அரசின் நலத்திட்டங்கள் தொடர்பான விவரங்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்திட, விரிவாக்க பணிக்கான கருவிகளுடன் ஐந்து பிரச்சார ஊர்திகள் வடிவமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
- மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போர் பல்வேறு தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளும் வகையில் மீன்வளத்துறை கண்காட்சி மற்றும் வர்த்தக பொருட்காட்சி போன்றவற்றில் பங்கேற்கிறது.
- தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் (NADP), தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (NFDB) மற்றும் மத்திய அரசின் நிதி உதவியுடன், பல்வேறு பயிற்சிகள் மீன்வளர்ப்போர் மற்றும் மீன்பிடி தொழில் சார்ந்த அனைவருக்கும் தேவைக்கேற்ப நடத்தப்பட்டு வருகின்றன.

## 9.4 மீன்வள புள்ளியியல்

மீன்வளம் தொடர்பான புள்ளி விவரங்கள் மற்றும் துறையின் மூலம் எய்தப்பட்ட சாதனைகள் குறித்த விவரங்கள் ஒவ்வொரு வருடமும் வெளியிடப்பட்டு வருகின்றன. இப்புத்தகம் திட்டமிடுபவர்கள், ஆராய்ச்சியாளர்கள், கொள்கை வகுப்போர்களுக்கும் மற்றும் மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்து வளங்குன்றா வகையில் பயன்படுத்துவதற்கான திட்ட வகுத்தலுக்கும் உபயோகமாக உள்ளது.

# 10. சிறப்புத் திட்டங்கள்

## 10.1 தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் (NADP) – 2016-17

2016-17ஆம் ஆண்டு தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.14.17 கோடி செலவில் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

## அட்டவணை:15

## தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் ( 2016-17)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ. இலட்சத்தில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாட்டில் நீர்களைகள் நிரம்பியுள்ள நீர் நிலைகளை உயிரியல் முறை மூலம் கட்டுப்படுத்த புல் கெண்டை மீன் இனங்களை இருப்பு செய்தல். | 101.25 | இத்திட்டத்தின் கீழ், 5659 ஹெக்டேர் நீர் பரப்பளவில் 28.29 இலட்சம் புல் கெண்டை மீன்குஞ்சுகள் இருப்பு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதனில், 3209.50 ஹெக்டேர் பரப்பில் 16.05 இலட்சம் புல்கெண்டை மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள பரப்பில் இருப்பு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. |
| 2 | தமிழ்நாட்டில் மீன் வளர்ப்பு பகுதிகளை விரிவுபடுத்திட மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்களை ஊக்குவித்தல். | 53.00 | மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ள பயனாளிகள், மீன் குளம் அமைப்பதற்கும் மற்றும் மீன் குஞ்சுகள் கொள்முதல் செய்வதற்கும் ஒரு ஹெக்டேருக்கு ரூ.2.10 இலட்சம் மானியத் தொகை வழுங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் 24.76 ஹெக்டேர் பரப்பளவில் மீன்வளர்ப்பு குளங்கள் அமைக்கப்பட்டு மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 3 | தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள சிப்பி குளம் மற்றும் கீழவைப்பார் கடற்கரை கிராமங்களில், கூண்டுகளில் கடல் விரால் மற்றும் சிங்கி இறால் வளர்ப்பு மேற்கொள்ளுதல். | 53.63 | இத்திட்டத்தின் கீழ் 10 கூண்டுகள் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள சிப்பிகுளம் மற்றும் கீழவைப்பார் கடற்கரை கிராமங்களில் நிறுவப்படும். ஒவ்வொரு கூண்டும் 4 மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும். 10 மிதவைக்கூடுகள் கட்டி முடிக்கப்பட்டு நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>இத்திட்டத்தின் மூலம் **40** மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் பயன்பெற உள்ளனர். |
| 4 | மணிமுத்தாறு அரசு மீன் பண்ணையில் வளர்ச்சி ஒடுக்கப்பட்ட மீன் விரலிகள் உற்பத்தி நிலையம் நிறுவுதல் மற்றும் நாற்றங்கால்கள் புனரமைத்தல். | 80.37 | மணிமுத்தாறு அரசு மீன்பண்ணையின் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு, வளர்ச்சி ஒடுக்கப்பட்ட மீன் விரலிகளை வருடம் முழுவதும் உற்பத்தி செய்வதன் மூலம் மீன்குஞ்சு தேவையை பூர்த்தி செய்யலாம். இத்திட்டத்தின் மூலம் 3400 ச.மீ. பரப்பளவுள்ள புதிய சினைமீன்குளங்கள் மற்றும் 9 நாற்றங்கால்கள் புனரமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 5 | கிருஷ்ணகிரி அரசு மீன் பண்ணையில் உள்ள திலேப்பியா பொரிப்பகம் மற்றும் மீன் குஞ்சு வளர்ப்பு நிலையத்தை மேம்படுத்துதல். | 200.00 | கிருஷ்ணகிரி அரசு மீன்பண்ணையில் கிப்ட்(GIFT) திலேப்பியா மீன்குஞ்சு உற்பத்தியினை அதிகரிக்க, கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 6 | கடலூர் மாவட்டம், லால்பேட்டை அரசு மீன் பண்ணையில் நன்மை பயக்கும் நுண்ணுயிரிகள், காற்று புகுத்தி மூலம் நீரின் தன்மையினை நிலைப்படுத்தி தீவிர மீன் குஞ்சு உற்பத்தி மேற்கொள்ளுதல். | 5.47 | லால்பேட்டை அரசு மீன்பண்ணையில் காற்று புகுத்திகள் மற்றும் நன்மை செய்யும் பாக்டீரியாக்களை பயன்படுத்தி சிறந்த முறையில் நீர் மேலாண்மை செய்வதன் மூலம் மீன்குஞ்சுகளின் பிழைப்புத்திறன் அதிகரித்து மீன்குஞ்சு உற்பத்தி அதிகரிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இளமீன்குஞ்கள் வளர்க்கும் பணி நடைபெற்று வருகிறது |
| 7 | சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் அரசு மீன்பண்ணையில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | 168.50 | சேலம் மாவட்டம் மேட்டூர் அரசு மீன் பண்ணையில் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மூலம், தரமான மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்து வழங்கிட இயலும். பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| 8 | தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சாத்தனூர் மீன் பண்ணையினை பழுது மற்றும் புணரமைத்தல். | 240.00 | பணியாணை வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 9 | தமிழக மேற்கு கடற்கரை பகுதியில் தூண்டில் மூலம் கணவாய் மீன்பிடிப்பு மேற்கொள்ளும் படகுகளுக்கு மானியம் நீட்டித்தல். | 25.50 | மாற்று முறை மீன்பிடிப்பிற்காக இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு கணவாய் மீன்பிடித்திட தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்திட மானிய உதவி வழங்கப்பட்டு வருகிறது.<br><br>கன்னியாகுமரி மாவட்டத்தில் 46 பயனாளிகளுக்கு மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது. |
| 10 | தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் மூலம் நவீன நடமாடும் கடல் மீன் உணவகம் அமைத்தல். | 57.50 | நடமாடும் நவீன கடல் மீன் உணவகத்திற்கான வடிவமைப்பு இறுதி செய்யப்பட்டு ஊர்தி கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 11 | தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக கட்டுபாட்டிலுள்ள ஆழியார், அமராவதி மற்றும் திருமூர்த்தி மீன் பண்ணைகளில் பறவை தடுப்பு வேலி அமைத்தல். | 77.25 | மீன்குஞ்சுளின் பிழைப்பு விகிதத்தினை அதிகரிக்க, பறவைகளிடமிருந்து மீன்குஞ்சுகளை பாதுகாக்க, மீன்குஞ்சு வளர்ப்பு குளங்களின் மீது பறவை தடுப்பு வலைகள் அமைக்கப்படும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| 12 | தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தால் உடனடியாக உண்பதற்கேற்ப கடல் உணவு உற்பத்தி மற்றும் விற்பனை நிலையம் அமைத்தல் | 58.25 | சுகாதாரமான உடனடியாக உண்பதற்கேற்ற மீன் உணவு பொருட்கள் தயாரிப்பு மற்றும் விற்பனை நிலையம் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 13 | தமிழ்நாட்டில் 5 இடங்களில் நவீன சுகாதார முறையில் சில்லரை மீன்விற்பனை நிலையங்கள் அமைத்தல். (தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம்) | 50.00 | உடனடியாக சமைக்க ஏதுவாக தயாரிக்கப்பட்ட மீன்உணவு பொருட்கள், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்ய நவீன சுகாதாரமான சில்லறை மீன்விற்பனை அங்காடிகள் அமைக்கும் பணிகள் நெய்வேலி, பரமக்குடி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் முடிவடைந்துள்ளன. |
| 14 | தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தால் சென்னை மாநகரில் சுய உதவிக் குழுக்களுக்கு கடல் உணவு பொருட்கள் தயாரிக்க பயிற்சி நிலையம் அமைத்தல். | 246.19 | மதிப்பு கூட்டப்பட்ட மீன்உணவு பொருட்களை தயார் செய்ய நவீன வசதிகளுடன் மைய சமையலறை கூடம் அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| | **மொத்தம்** | **1416.911** | |

## 10.2 தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டம் (TN IAMP)

விவசாய நீர்ப்பாசனத்தை நவீனமாக்கவும், மேம்படுத்தப்பட்ட நீர் மேலாண்மை அடையவும், பருவகால மாற்றங்களை எதிர்கொண்டு உற்பத்தியை அதிகரித்திடவும், மேம்படுத்தப்பட்ட மாற்று விவசாய முறைகளையும், மாற்று வாழ்வாதாரங்களான கால்நடை வளர்ப்பு மற்றும் உள்நாட்டு நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆகியவற்றின் மூலம் பல்வேறு துணைபடுகைகளின் உற்பத்தி திறனை அதிகரித்திடும் வகையில் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் செயல்படுத்தப்படும். தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் 66 துணை படுகைகளுக்கு ரூ.39.50 கோடி செலவில் திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்படும்.

முதற்கட்டமாக 2017-18 ஆம் ஆண்டு, 18 துணை படுகைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின்கீழ் ரூ.27.83 கோடிக்கு திருத்திய திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு உலக வங்கியின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 11. மீனவ கூட்டுறவு சங்கங்கள்

தமிழக மீனவர் மற்றும் மீனவ மகளிரது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதில் மீனவ கூட்டுறவு சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மீன்வளத்துறையானது மீனவர் / மீனவ மகளிருக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அரசின் பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 1,431 தொடக்க மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் / மாவட்ட கூட்டுறவு இணையங்கள் / மாநிலத் தலைமை கூட்டுறவு இணையம் ஆகியவற்றில் 7.21 இலட்சம் மீனவர் / மீனவ மகளிர் அங்கத்தினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். மீனவர் கூட்டுறவு சங்கங்கள் 51 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 15 பகுதி நேர நியாய விலைக்கடைகளையும் நடத்தி வருகின்றன.

மீன்துறை ஆணையர் / இயக்குநர் கட்டுப்பாட்டில் செயல்படும் 1,431 மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கும் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்பட்டு, **10,091** நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அச்சங்கங்களில் பொறுப்பேற்றுள்ளனர். தற்போது அனைத்து மீனவர் கூட்டுறவு சங்கங்களும்

முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகின்றன.

மீனவர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் உறுப்பினர்கள் விவரம் கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை:16**

**மீனவ கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் விவரம்**

| சங்கத்தின் வகை | சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **தொடக்க கூட்டுறவு சங்கங்கள்** | | |
| கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் | 559 | 3,66,357 |
| கடல் மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் | 460 | 2,50,276 |
| உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள் | 303 | 87,399 |
| உள்நாட்டு மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் | 71 | 8,009 |
| இதர வகைச் சங்கங்கள் | 26 | 7,283 |
| **மொத்த கூட்டுறவு சங்கம் மற்றும் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள்** | **1,419** | **7,19,324** |
| மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையம் | 11 | 975 |
| தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் | 1 | 785 |
| **கூடுதல்** | **1,431** | **7,21,084** |

## 12. தமிழ்நாடு மீனவர் நல வாரியம் (TNFWB)

தமிழகத்தில் மீன்பிடி மற்றும் அதனைச் சார்ந்த தொழிலினை மேற்கொள்ளும் அனைத்து தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பிற்கும், அவர்களது நலத்தினை உறுதி செய்வதற்காகவும், தமிழ்நாடு மீனவர் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு மீனவர் நல வாரிய தலைமை அலுவலகம், சென்னை, நீலாங்கரையில் இயங்கி வருகிறது. 4.47 இலட்சம் மீனவர் / மீனவ மகளிர் தொழிலாளர்கள் இந்த வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர். தமிழ்நாடு மீனவர் நல வாரிய சட்டத்தின்படி இதுவரை பல்வேறு முகமைகளிடம் இருந்து ரூ.17.24 கோடி நிதி வசூலிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் பின்வருமாறு:

## அட்டவணை: 17

## தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள்

| வ. எண் | நிவாரணம் அல்லது உதவி | ஒரு நபருக்கான தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | விபத்து நிவாரணம் | |
| (அ) | விபத்தினால் மரணம் | 1,00,000 |
| (ஆ) | இரண்டு கைகள் இழப்பு | 1,00,000 |
| (இ) | இரண்டு கால்கள் இழப்பு | 1,00,000 |
| (ஈ) | ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு | 1,00,000 |
| (உ) | இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழப்பு | 1,00,000 |
| (ஊ) | ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு | 50,000 |
| (எ) | மேலே கண்ட இனங்களில் குறிப்பிடாத வேறு கடுமையான காயம் ஏற்பட்டு உடல் உறுப்பு இழப்பு | 20,000 |
| 2. | விபத்தின் காரணமாக அல்லாமல் மீன்பிடிக்கையில் அல்லது அதற்குப் பின் உடனடியாக இறத்தல் | 1,00,000 |
| 3. | மீன்பிடிக்கையில் காணாமற்போன மீனவர் | 1,00,000 |
| 4. | இயற்கை மரணம் | 15,000 |
| 5. | ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை | 2,500 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | **உறுப்பினர்களின் மகன் மற்றும் மகள் கல்வி உதவித் தொகை** | **விடுதியில் தங்காதோர்** | | **விடுதியில் தங்கி படிப்பவர்கள்** | |
| | | மாணவர் | மாணவியர் | மாணவர் | மாணவியர் |
| | அ) பத்தாம் வகுப்பு தேர்ச்சி | 1,250 | 1,500 | -- | -- |
| | ஆ) பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி | 1,750 | 2,000 | -- | -- |
| | இ)தொழிற்பயிற்சி (I.T.I) மற்றும் பல்தொழிற் நுட்ப பயிற்சி (Polytechnic) | 1,250 | 1,750 | 1,450 | 1,950 |
| | உ) இளங்கலை பட்டப்படிப்பு | 1,750 | 2,250 | 2,000 | 2,500 |
| | ஊ) முதுகலை பட்டப்படிப்பு | 2,250 | 2,750 | 3,250 | 3,750 |
| | எ) சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற் கல்விகள் இளங்கலை | 2,250 | 2,750 | 4,250 | 4,750 |
| | ஏ) முதுகலை தொழிற் கல்விகள் | 4,250 | 4,750 | 6,250 | 6,750 |
| 7. | திருமண உதவி | | | ஆண் | பெண் |
| | அ) உறுப்பினரின் திருமண உதவி<br>ஆ) உறுப்பினரின் மகன் அல்லது மகள் திருமணம் | | | 3,000<br>3,000 | 5,000<br>5,000 |
| 8. | மகப்பேறு / கருச்சிதைவு / கருக்கலைப்பு உதவித் தொகை | | | | |
| | i) மகப்பேறு (மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/– வீதம் ஆறு மாதங்கள்) | | | 6,000 | |
| | ii) கருச்சிதைவு | | | 3,000 | |
| | iii) கருக்கலைப்பு | | | 3,000 | |

- 2016-17 ஆம் ஆண்டில் 5,462 கேட்பு விண்ணப்பங்களுக்கு உதவித் தொகை மற்றும் நிவாரணத் தொகையாக ரூ.2.90 கோடி பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.
- பயனாளிகளுக்கு நிவாரணம் / உதவித் தொகை, வழங்குவதில் வெளிப்படையான தன்மையை உறுதி செய்வதற்காகவும், மிக விரைவாக நிவாரணம் உடனே பயனாளிகளுக்கு சென்றடைவதற்காகவும் தேசிய மின்னணு பணப்பரிவர்த்தனை (NEFT) மூலமாக நிவாரண உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.


**13. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் (வரையறுக்கப்பட்டது) (Tamil Nadu State Apex Fisheries Co-operative Federation Limited (TAFCOFED)).**

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் லிமிடெட், தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், **1983**ன் கீழ் பதிவு செய்யப்பட்டு கடந்த **19.10.1992** முதல் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தற்பொழுது இணையத்தில் **483** கடல் மீனவர்

கூட்டுறவு சங்கங்கள், 151 உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள், 171 மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 9 மாவட்ட மீனவ கூட்டுறவு இணையங்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளன. இவ்வுறுப்பினர் சங்கங்கள், இணையத்திற்கு ரூ.91.725 இலட்சம் பங்குத் தொகையாக செலுத்தியுள்ளன.

படம்:2

**தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் நிர்வாக அமைப்பு**



தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தால் செயல்படுத்தப்பட்டுவரும் முக்கிய திட்டங்கள் பின்வருமாறு:

**13.1 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு மானிய விலையில் விற்பனை வரிவிலக்களிக்கப்பட்ட தொழிலக மண்ணெண்ணெய் வழங்குதல்.**

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களை சேர்ந்த இயந்திரம் பொருத்திய நாட்டுப்படகுகளுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட மானியத்துடன் கூடிய தொழிலக மண்ணெண்ணெயினை 13 தொடக்க மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் 2016-17 ஆம் ஆண்டில், 3,968 கிலோ லிட்டரும், 2017-18 ஆம் ஆண்டில் (ஜுன் 2017 வரை) 812 கிலோலிட்டரும் விநியோகிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ. 29.59 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**13.2 மீன்பிடி கலன்களுக்கு விற்பனைவரி விலக்களிக்கப்பட்ட டீசல் வழங்குதல்.**

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மூலம் நிறுவப்பட்டுள்ள 13 டீசல் விற்பனை நிலையங்கள் மூலம் 2016-17ஆம் ஆண்டில், 17,605 கிலோ லிட்டரும், 2017-18 ஆம் ஆண்டில் (ஜுன் 2017 வரை) 1,902

கிலோ லிட்டரும் விற்பனை வரிவிலக்களிக்கப்பட்ட டீசல், இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகு மற்றும் விசைப் படகுகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ. 3.27 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 13.3 நவீன மீன் விற்பனை நிலையங்கள்.

**13.3.1** தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம், பொது மக்களுக்கு தரமான மீன்களை நியாயமான விலையில் வழங்கிடும் வகையில் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் இராமநாதபுரத்தில் நவீன மீன் விற்பனை நிலையம் நிறுவி செயல்படுத்தி வருகிறது. சென்னையில் மற்றொரு மீன் விற்பனை நிலையம் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**13.3.2** தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் மூலம் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.50 இலட்சம் மொத்த மதிப்பீட்டில் தமிழ்நாட்டின் 5 நகரங்களில் 5 நவீன மீன் விற்பனை நிலையங்கள் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

## 13.4 மீன் ஏற்றிச்செல்லும் வாகனங்கள் வழங்குதல்

மீனவர்கள் உரிய நேரத்தில் எளிதாக மீன்களை சந்தைக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்து நல்ல விலையினைப் பெற்றிட, தமிழ்நாட்டில் பின்தங்கிய ஒன்றியங்களில் உள்ள 10 கடல் மற்றும் உள்நாட்டு மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.71 இலட்சம் மதிப்பீட்டில் 10 மீன்ஏற்றிச் செல்லும் நான்கு சக்கர வாகனங்கள் மாநில திட்டக்குழு – மாநில சமச்சீர் வளர்ச்சி (SBGF) நிதியுதவியுடன் வழங்கப்பட்டுள்ளன.

## 13.5 கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்தின் நிதியுதவியுடன் குளிர்காப்பு பெட்டிகள் வழங்குதல்.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் மூலம், தமிழக மீனவர்களுக்கு கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்தின் (Marine Products Export Development Authority (MPEDA)) 25 விழுக்காடு மானியத்துடன், 2017-18 ஆம் ஆண்டில், 105 குளிர்காப்பு பெட்டிகள் ரூ.1.44 இலட்சம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

## 13.6 பயிற்சித் திட்டங்கள்

**13.6.1** 2016-2017 ஆம் ஆண்டில் ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள **412** தமிழக மீனவர்களுக்கு "கடல்சார் மேலாண்மை, தொலைத்தொடர்பு சாதனங்கள் பழுது பார்த்தல், மற்றும் இயந்திர பராமரிப்பு" தொடர்புடைய பயிற்சி, மத்திய மீன்வள தொழில்நுட்பம் மற்றும் கடல்சார் நிறுவனம் (Central Institute of Fisheries Nautical Engineering and Training) மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் (National Fisheries Development Board) நிதியுதவியுடன் வழங்கப்பட்டுள்ளது.

**13.6.2** கடலோர மாவட்டங்களில் உள்ள 1,593 மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு "மதிப்பூட்டப்பட்ட மீன்பொருட்கள் தயாரிக்கும்" பயிற்சி தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் (National Fisheries Development Board) நிதியுதவியுடன் வழங்கப்பட்டுள்ளது.

### 13.7.1 சென்னை பழைய மகாபலிபுரம் சாலையில் புதிய பெட்ரோல் மற்றும் டீசல் சில்லரை விற்பனை நிலையம் நிறுவுதல்.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் வருவாயினை அதிகரிக்கும் பொருட்டு,

சென்னை பழைய மகாபலிபுரம் சாலையில் வாணியஞ்சாவடியில் பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையம் ரூ.80 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**13.7.2 நவீன மீன் உணவகம் நிறுவுதல்.**

காஞ்சிபுரம் மாவட்டம் வாணியஞ்சாவடியில் ரூ. 2 கோடி திட்ட மதிப்பீட்டில் நவீன மீன் உணவகம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனில் ரூ.89 இலட்சம் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் நிதியுதவியுடனும், மீதித்தொகை ரூ.1.11 கோடி இணையத்தின் சொந்த நிதியிலிருந்தும் செலவிடப்படும். கட்டுமானப்பணி முன்னேற்றத்தில் உள்ளது.


**14. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் (வரையறுக்கப்பட்டது) (Tamil Nadu Fisheries Development Corporation Limited (TNFDC Ltd.))**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 1974-ஆம் ஆண்டு அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனமாக தொடங்கப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.5 கோடி மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.4.45 கோடியாகும்.

- தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக இயக்குநர்கள் தமிழக அரசால் நியமிக்கபடுகிறார்கள்.
- தற்போது பல்வேறு பதவிகளில் 121 பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக கட்டமைப்பு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

படம்:3



## 14.1 மீன்குஞ்சு உற்பத்தி.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் தனது கட்டுப்பாட்டில், சுமார் 3.83 ஹெக்டரில் மீன்குஞ்சு உற்பத்தி / வளர்ப்பு பண்ணைகளை சாத்தனூர், ஆழியார், அமராவதி, திருமூர்த்தி மற்றும் பாலாறு – பொறந்தாலாறு ஆகிய நீர்த்தேக்கப் பகுதிகளில் அமைத்துள்ளது. உற்பத்தி செய்யப்படும் தரமான மீன் குஞ்சுகள் தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழக கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுவதுடன், மீன்வளத்துறை மற்றும் தனியார் மீன் பண்ணைகளுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

2016-17ஆம் நிதியாண்டில், 182 இலட்சம் நுண்மீன்குஞ்சுகளும், 33.33 இலட்சம் மீன் குஞ்சு பெருவிரலிகளும் உற்பத்தி செய்யப்பட்டதன் மூலம் ரூ.72.12 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் ஜுன் 2017 வரை, 8.50 இலட்சம் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.0.34 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 14.2 நீர்த்தேக்கங்களில் மீன்வள மேலாண்மை.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகக் கட்டுப்பாட்டில் உள்ள எட்டு நீர்த்தேக்கங்களில், வளங்குன்றா மீன் உற்பத்தியினை

பெருக்கிட, அறிவியல் ரீதியான முறையில் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்படுகின்றன.

2016-17ஆம் நிதியாண்டில், 649.34 டன் மீன்கள் நீர்தேக்கங்களிலிருந்து பிடிக்கப்பட்டு, ரூ.600.29 இலட்சம் வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில், ஜுன் 2017 வரை 131.27 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ.122.33 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 14.3 வண்ண மீன் உற்பத்தி மற்றும் விற்பனை

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், ஆழியார் மற்றும் திருமூர்த்தி ஆகிய இடங்களில் வண்ண மீன் உற்பத்தி நிலையங்களை அமைத்துள்ளது. மேலும், சென்னை, தேனாம்பேட்டையில் மீன் விற்பனை நிலையத்துடன் கூடிய வண்ண மீன் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

2016-17ஆம் நிதியாண்டில் வண்ண மீன்கள் உற்பத்தி, மற்றும் மீன்காட்சியக உபகரணங்கள் விற்பனை செய்ததன் மூலம், ரூ.20.05 இலட்சம் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் ஜுன் 2017 வரை, ரூ.5.10 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 14.4 மீன் விற்பனை

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருப்பூர், பொள்ளாச்சி, உதகமண்டலம், தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் உள்ள சில்லரை மீன் விற்பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள் மூலமாக தரமான மீன்கள் மற்றும் கடல்மீன் உணவுகள் விற்பனை செய்யப்படுகின்றன. 2016-17ஆம் நிதியாண்டில், 939.48 டன் மீன்கள் விற்பனை செய்யப்பட்டு ரூ.103.16 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் ஜுன் 2017 வரை, 192.36 டன் மீன்கள் விற்பனை செய்யப்பட்டு ரூ.13.52 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

## 14.5 எரியெண்ணெய் விற்பனை நிலையங்கள்.

மாநிலத்தின் பல்வேறு கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களில் கழகத்தால் 31 டீசல் எரியெண்ணெய் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு, இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகு மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்களுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட அதிவிரைவு டீசல் விநியோகம் செய்யப்படுகிறது.

2016-17ஆம் ஆண்டில் 84,392 கிலோ லிட்டர் வரி விலக்கு அளிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு, ரூ.1001.31 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் ஜுன் 2017 வரை, 9,327 கிலோ லிட்டர் விற்பனை செய்யப்பட்டு ரூ.67.06 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

**14.6 இயந்திரமயமாக்கப்பட்ட பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட மானியத்துடன் கூடிய வணிகரீதியிலான தொழிலக மண்ணெண்ணெய் வழங்குதல்.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இயந்திரமயமாக்கப்பட்ட பாரம்பரிய மீன்பிடி நாட்டு படகுகளுக்கு, விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்ட மானியத்துடன் கூடிய மண்ணெண்ணெய், 2016-17ஆம் நிதியாண்டில் 6,636 கிலோ லிட்டர் விநியோகம் செய்யப்பட்டு, ரூ.32.75 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் ஜுன் 2017 வரை, 1,810 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்பட்டு ரூ.3.34 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

## 14.7. சேத்துப்பட்டு பசுமைப் பூங்கா மேலாண்மை.

சென்னை பெருநகரத்தின் மையப் பகுதியாக கருதப்படும் சேத்துப்பட்டு ஏரியில் மீன்வளத் துறையால் ரூ.42 கோடி திட்டமதிப்பீட்டில் விளையாட்டு தூண்டில் மீன்பிடிப்பு வசதிகளுடன் கூடிய பசுமைப் பூங்கா ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பசுமைப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள, படகு சவாரிக்கான படகு குழாம், சிறுவர்கள் விளையாட்டுப் பகுதி, மருத்துவ மூலிகைச் செடிகள் தோட்டம், பல அடுக்கு வாகன நிறுத்துமிடம், முப்பரிமாண காட்சி அரங்கு, மீன் உணவகம் போன்றவை தினந்தோறும் ஏராளமான பொதுமக்களை ஈர்க்கின்றன. ஜுன் 2017 வரை, 3,31,616 எண்ணிக்கையிலான பார்வையாளர்கள் இப்பசுமைப் பூங்காவினை பார்வையிட்டுள்ளனர். இப்பசுமைப் பூங்கா வளாகத்தில் மீன்காட்சியகம் மற்றும் நீர்வாழ் உயிரின மெய்நிகர் காட்சியகம் (Aquarium-cum-Aquatic Virtual Reality Centre) ஒன்று ரூ.6 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 14.8. இதர திட்டங்கள்.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால் பின்வரும் புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

### 14.8.1. புதிய கூடுதல் நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்டுதல்.

சென்னை, சாந்தோமிலுள்ள மீன் விற்பனை பிரிவிற்காக கூடுதலாக நிர்வாக அலுவலகக் கட்டடம் ஒன்றினை **ரூ.3.50** கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், அதனுடைய சொந்த நிதியில் கட்டிட திட்டமிட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 14.8.2 தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால் நவீன நடமாடும் கடல் மீன் விற்பனை உணவகங்களை அமைத்து இயக்குதல்.

2016-17ஆம் நிதியாண்டில், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், நுகர்வோர்கள் எளிதில் வாங்கும் விலையில், சுவை மிகுந்த கடல் மீன் உணவுப் பொருட்களை, சென்னை மற்றும் மகாபலிபுரம் பகுதிகளில் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்திட ஏதுவாக ரூ.57.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 2 நடமாடும் கடல் மீன்

விற்பனை உணவகங்கள் கழகத்தால் கட்டமைக்கப்பட்டு வருகின்றன.

### 14.8.3 கடல் மீன் உணவுப் பொருட்களை தயாரித்திட மைய சமையலறைக் கூடம் மற்றும் பயிற்சி மையம் ஒன்றினை அமைத்திடல்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி எண்.110 இன் கீழ் அறிவிக்கப்பட்டபடி, தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் பொதுமக்களிடையே கடல் மீன் உணவுப் பொருட்களை அதிக அளவில் உட்கொள்ளும் பழக்கத்தினை ஏற்படுத்திடவும் மற்றும் சுயவேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திடவும் சென்னை, இராயபுரத்தில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால், 2016-17ஆம் நிதியாண்டில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், ரூ.304.44 இலட்சம் மதிப்பீட்டில் உடனடியாக சமையல் செய்து உண்ணக் கூடிய வகையிலான கடல் மீன் உணவுப் பொருட்களை தயாரித்திடவும், அதனை சந்தைப்படுத்திடவும், மைய சமையலறைக் கூடம் ஒன்று ஏற்படுத்திடவும், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு உடனடியாக சமைத்திடக் கூடிய கடல் மீன் உணவுப் பொருட்களை தயாரித்தல் மற்றும் அவற்றினை விற்பனைச் செய்வது குறித்து பயிற்சி அளித்திட ஏதுவாக, ஒரு பயிற்சி

மையம் கழகத்தால் அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### 14.8.4. சாத்தனூர் நீர்த்தேக்க மீன்பண்ணையினை பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல்.

மீன்குஞ்சுகளின் உற்பத்தியினை மேம்படுத்தும் பொருட்டு 2016-17ஆம் நிதியாண்டில், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.240 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சாத்தனூர் நீர்த்தேக்க மீன் பண்ணையில் பழுதுபார்க்கும் பணிகள் மற்றும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 14.8.5. ஆழியார் மீன் பண்ணையில் பறவை தடுப்பு வேலி அமைத்தல்.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் ஆழியார் மீன்பண்ணையில் மீன்குஞ்சுகளின் உயிர் பிழைப்புத்திறனை அதிகப்படுத்தும் வகையில், அப்பண்ணையில் உள்ள மீன்குஞ்சு வளர்ப்புப் தொட்டிகளுக்கு, பறவைகள் உட்புகுந்திடாத வகையில், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.77.25 இலட்சம் நிதியுதவியுடன்

2016-17ஆம் நிதியாண்டில் பறவைகள் தடுப்பு வேலி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 14.8.6 சென்னையில் மீன் விற்பனையை இணையதள வசதி மூலம் செயல்படுத்துதல்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமானது பொதுமக்களிடையே கடல் மீன் உணவுப் பொருட்களை உண்ண வேண்டியதன் அவசியத்தையும், அதனால் ஏற்படக்கூடிய உடல் நலன் குறித்த ஆரோக்கியமான வாழ்வு தொடர்பான விழிப்புணர்வையும் ஏற்படுத்திட சென்னை மீன் விற்பனைப் பிரிவின் மூலம் சோதனை அடிப்படையில் இணையதளம் மூலமாக மீன் விற்பனையை மேற்கொள்ள ரூ.10 இலட்சம் செலவில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்களால் 25.05.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

### 14.9. நிதி நிலை.

2016-17ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், மீன் விற்பனை, கடல் மீன் உணவு மையங்கள், டீசல் எரியெண்ணெய் / மண்ணெண்ணெய் விநியோகம் மற்றும் நீர்த்தேக்க மேலாண்மை ஆகிய வணிக ரீதியிலான

செயல்பாடுகள் மூலமாக ரூ.1,184.50 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. நடப்பு நிதியாண்டில் ஜுன் 2017 வரை ரூ.115 இலட்சம் இலாபம்(தணிக்கை செய்யப்படாதது) ஈட்டியுள்ளது.

**14.9.1. அரசுக்கு செலுத்தப்பட்ட பங்கு ஈவு தொகை மற்றும் முதலமைச்சர் பொது நிவாரண நிதி.**

2015-16ஆம் நிதியாண்டிற்கு, தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமானது ரூ.1.82 கோடி தொகையை பங்கு ஈவுத் தொகையாக மாநில அரசுக்கு செலுத்தியுள்ளது. 2016-17 ஆம் நிதியாண்டில், முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்காக, ஒரு கோடி ரூபாயினை அரசுக்கு வழங்கியுள்ளது.

**14.9.2 மீன்வள திட்டங்கள் மற்றும் மீனவர்களின் நலத்திட்டங்களில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் பங்களிப்பு.**

2016-17ஆம் நிதியாண்டில் ரூ.1.03 கோடி தொகையை தமிழ்நாடு மீனவர் நலவாரியத்திற்கு, தனது பங்களிப்பாக தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் வழங்கியுள்ளது.

மேலும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் தனது சமுதாய பங்களிப்பாக, ரூ.43.33 இலட்சம் தொகையினை,

பல்வேறு மீனவர் நலத்திட்டங்களுக்காக பெருநிறுவன சமூக பொறுப்பு (Corporate Social Responsibility) நிதியிலிருந்து பின்வரும் விவரப்படி வழங்கியுள்ளது :

**அட்டவணை:18**
**மீனவர் நலத்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட பெருநிறுவன சமூக பொறுப்பு (CSR) நிதி**

| நலத்திட்டங்கள் | தொகை (ரூ) |
|---|---|
| கடலாமை விடுவிப்பு பொறி (Turtle Excluder Device) குறித்த விழிப்புணர்வு பற்றிய பதாகைகள் | 1,62,500 |
| நீலாங்கரையிலுள்ள மீன்விற்பனை அங்காடியினை நவீனமயமாக்குதல் | 20,21,600 |
| பெசன்ட் நகரிலுள்ள மீன்விற்பனை அங்காடியினை நவீனமயமாக்குதல் | 1,50,000 |
| மீனவர் நல பணிக்கான செலவினம் | 4,45,282 |
| காணாமல்போன மீனவர்களை தேடுதல் பணிக்கான செலவினம் | 20,000 |
| சென்னை–நடுக்குப்பத்தில் தற்காலிக மீன் விற்பனை சந்தை அமைத்தல் மற்றும் மீனவர்களுக்கு மீன் விற்பனை உபகரணங்கள் வழங்குதல் | 15,33,366 |
| **மொத்தம்** | **43,32,748** |

## 15. தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் (TamilNadu Fisheries University)

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம், மாநில அரசின் நிதியுதவியுடன், மாநில வேளாண் பல்கலைக்கழக முறைகள் மற்றும் பாடத்திட்டத்தைத் தழுவி, இந்தியாவிலேயே

முதன்முதலாக, மீன்வளத்தில் தனித்துவ தொழில் கல்வி வழங்கும் பல்கலைக்கழகமாக 19.06.2012 அன்று நாகப்பட்டினத்தில் ரூ.18.10 கோடி செலவில் துவக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் மீன்வளக்கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க கல்வி மூலம் தமிழகத்தின் மீன் உற்பத்தி மற்றும் அதன் பயன்பாட்டை மேம்படுத்தி வருகிறது.

## 15.1. பல்கலைக்கழகத்தின் தொலைநோக்குப் பார்வை.

“அறிவியல் அடிப்படையிலான மீன்வள முன்னேற்றத்தால் மக்களின் உணவு மற்றும் ஊட்டச்சத்துத் தேவையைப் பூர்த்தி செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல்” என்பது தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் தொலை நோக்கு பார்வை ஆகும்.

## 15.2. நோக்கங்கள்.


தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

- மீன்வள அறிவியல் சார்ந்த பல்வேறு பிரிவுகளில் தரமான தொழிற் கல்வியை வழங்குதல்.

- மீன்வள அறிவியலில் உள்ள முதன்மையான பிரிவுகளில் அதிநவீன தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கு முறையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.
- மீன்வளர்ப்போர்கள், மீனவர்கள், வேலையில்லா இளைஞர்கள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு, மீன்வளம் சார்ந்த அறிவியல் பிரிவுகளில் பயிற்சி, கலந்தாலோசனை மற்றும் திட்ட அறிக்கை தயாரித்தல் போன்ற விரிவாக்க சேவைகளை அளித்தல்.
- மீன்வள அறிவியலில் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு முன்னேற்றம் ஏற்பட துணைபுரிந்து, மாநிலத்தின் பொருளாதாரத்தில் மீன்வளப்பிரிவு மூலம் கூடுதல் பங்களிப்பினை வழங்குதல் மற்றும் மீன்வள அறிவியல் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் போன்றவைகளுக்கான இலக்கினை நிர்ணயித்தல்.
- நீர்வாழ் உயிரினங்களின் பல்லுயிர் பெருக்கம் மற்றும் மீன்வள ஆதாரங்கள் ஆகியவற்றிற்கான அடிப்படை விவரங்களை சேகரித்தல்.

- இந்திய கால்நடை குழுமத்தின் கட்டுப்பாட்டு விதிகளை மாதிரியாகக் கொண்டு, மீன்வள அறிவியலில் தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்குதல்.
- மீன் மற்றும் மீன் பொருட்களை சந்தைப்படுத்திடவும் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை தயாரிப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல்.
- நீர்வாழ் உயிரினங்களில் நோய் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை முறையை தமிழ்நாட்டில் ஏற்படுத்துதல்.
- தமிழகத்தின் மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு தொடர்புடைய ஒருங்கிணைந்த மீன்வள தரவுக் களஞ்சியம் உருவாக்குதல்.

படம்:4




தூத்துக்குடி வளாகத்தில் உள்ள மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், இந்தியாவின் இரண்டாவது மீன்வளக்கல்லூரியாக 1977 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கல்லூரியின் மூலம் இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டப்படிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், 2012 ஆம் ஆண்டு பொன்னேரியில் நிறுவப்பட்ட மீன்வள தொழில்நுட்ப நிலையம், 2014-15 ஆம் ஆண்டு முதல் மீன்வள கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமாக மேம்படுத்தப்பட்டு, 60 மாணாக்கர்கள் 2016-17 ஆம் கல்வி ஆண்டில் சேர்க்கப்பட்டு, இளங்கலை பட்டப்படிப்பு வழங்கப்பட்டு வருகிறது. நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள மற்றொரு மீன்வள தொழில்நுட்ப நிலையம், 2016-17 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதல் மீன்வள பொறியியல் கல்லூரியாக மாற்றப்பட்டு, 20 மாணாக்கர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், மாதவரம் மற்றும் வாணியஞ்சாவடி வளாகத்தில் உள்ள இப்பல்கலைக்கழக நிலையங்களின் மூலம் முதுகலை ஆராய்ச்சி பட்டங்களை வழங்க அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

## 15.3 தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள்.

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகிய செயல்பாடுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

### 15.3.1 கல்வி

- தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் 2016 -17 ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை விவரமானது கீழே அட்டவணை 19ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை:19**
**மாணவர் சேர்க்கை விவரம்**

| பாடப்பிரிவு கள் | மீன்வளக்கல் லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி | | மீன்வளக்கல் லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரி | | மீன்வளப் பொறியியல் கல்லூரி, நாகப்பட்டினம் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| இளங்கலை மீன்வளம் (B.F.Sc.,) | 25 | 25 | 32 | 27 | -- | -- | 109* |
| இளங்கலை மீன்வளப் பொறியியல் (B.E.,) | -- | -- | -- | -- | 8 | 12 | 20 |
| முதுகலை மீன்வளம் (M.F.Sc) | 10 | 9 | 4 | -- | -- | -- | 23 |
| முனைவர் பட்டம் (Ph.D) | 3 | 5 | 2 | 3 | -- | -- | 13** |
| | | | | | | மொத்தம் | **165** |

** வெளிநாடு வாழ் இந்தியர்கள் (2 எண்ணிக்கை) மற்றும் சர்வதேச மாணவர் சேர்க்கை (2 எண்ணிக்கை) உள்ளடக்கியது.*

*** சர்வதேச மாணவர் சேர்க்கை(1 எண்ணிக்கை) உள்ளடக்கியது.*

இப்பல்கலைக்கழகத்தில் பயிலும் இளங்கலை மற்றும் முதுகலை மாணவ மாணவிகளுக்கு, மத்திய மாநில அரசுகள் அளிக்கும் பல்வேறு வகையான கல்வி உதவித்தொகை மற்றும் ஆராய்ச்சி ஊக்கத்தொகை வழங்கப்படுகின்றன. முதுநிலை மற்றும் முனைவர் பட்டப்படிப்பிற்கு, இப்பல்கலைக்கழகத்தில் நுழைவுத் தேர்வின் மூலம் சேரும் மாணவர்களுக்கு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக உதவித் தொகை மாதத்திற்கு முறையே ரூ.4,000/- மற்றும் ரூ.5,000/- வழங்கப்படுகின்றது. மாணவர்கள், மீன்வளத்தின் அனைத்து புலன்களிலும் நுண்ணறிவினைப் பெற்றிட ஆர்வத்தை உருவாக்கிடவும், அவர்கள் தங்களுக்கேற்ற வேலை வாய்ப்பினை பெற்றிட ஏதுவாக வளாக வேலை வாய்ப்பு உதவி மையம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

## 15.3.2 ஆராய்ச்சி

**அட்டவணை: 20**
**நடைமுறையில் உள்ள ஆராய்ச்சித் திட்டங்கள்**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நிதியுதவி அளித்த நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | வானவில் வண்ண மீன் பூங்கா | தமிழ்நாடு அரசு– தமிழ்நாடு புதுமை திட்டங்கள் ஊக்குவிப்பு நிதியம் | 1030.50 |
| 2. | மீன்தரப் பாதுகாப்பு மற்றும் உறுதிப்பாடுக்கான சிறப்பு மையம் | இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் | 305.61 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நிதியுதவி அளித்த நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 3. | கன்னியாகுமரியில் சினை இறால் வங்கி நிறுவுதல் | தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் | 198.91 |
| 4. | மண்டபத்தில் கடல் துடுப்பு மீன் குஞ்சு பொரிப்பகம் நிறுவுதல். | தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் | 184.50 |
| 5. | பாரூரில் மண்டல மீன்வள ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம் நிறுவுதல். | தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் | 121.04 |
| 6. | சிறு பண்ணையாளர்களின் வளர்ப்பு மீன்களில் ஏற்படும் நோய்களின் முன்னெச்சரிகை கணிப்பு மற்றும் தணிப்பு பற்றிய புதுமையான மூலக்கூறு அணுகுமுறைகள். | உயிர்த்தொழில் நுட்பத் துறை | 109.91 |
| 7. | நீர்வாழ் உயிரினங்களின் நோய்கள் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மைக்கான ஆய்வகம். | இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் | 80.43 |
| 8. | காவேரி ‘டெல்டா’ பகுதியிலுள்ள மீன் பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை நன்னீர் மீன் உற்பத்தி ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் மூலம் உயர்த்துதல். | தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் | 46.04 |
| 9. | தமிழ்நாட்டில் உயிரிப்பாதுகாப்பு நுண்ணியிரி துகள் நுட்பத்தின் அடிப்படையில் ‘பசிபிக் வெள்ளை இறால்’ மற்றும் பால் மீன் வளர்ப்புக்கான சுற்றுச்சுழலுக்கேற்ற வளர்ப்பு முறைகளைக் கண்டறிதல். | தமிழ்நாடு அரசு – பகுதி II திட்டம் | 44.39 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நிதியுதவி அளித்த நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 10. | மீன்பதன கழிவுகளிலிருந்து பெறப்பட்ட நொதிகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட மீன் புரத ஹைட்ரோலைசேட்டிலுள்ள செயல்திறன் கொண்ட பெப்ட்டைடுகளை கண்டறிதல். | அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை | 39.97 |
| 11. | கொலாஜனின் உணவு மற்றும் உயிர் மருத்துவ பயன்கள். | அரசு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப ஆணையம், சீனா | 30.35 |
| 12. | தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகம் பகுதியில் மனிதச் செயல்பாடுகள் மற்றும் சூழ்நிலை மாறுபாடுகளால் மிதவை உயிரிகளில் ஏற்படும் தாக்கம் | மன்னார்வளைகுடா உயிர்க்கோளக் காப்பகம். இராமநாதபுரம் | 10.50 |
| 13. | கொம்புத்துறை மீனவ கிராமத்தில் கூட்டு மேலாண்மை திட்டத்தின் மூலம் மீன்பிடி வளங்களை வளம் குன்றா முறையில் பயன்படுத்துதல். | நிலைத்த வாழ்வாதாரத் திற்கான மீன்வள மேலாண்மை திட்டம் –II. | 4.98 |
| | | **மொத்தம்** | **2207.13** |

## அட்டவணை:21

## புதிதாக பெறப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்கள் – 2016 -17

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நிதியுதவி | பெறப்பட்ட நிதி (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | வளங்குன்றா நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையத்தைச் சார்ந்த பிற மண்டல மையங்களை மேம்படுத்துதல் | தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் | 549.09 |
| 2. | தமிழ்நாட்டில், மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காக துடுப்பு மீன், இறால் மற்றும் இதர மீன்னினங்களுக்கான தரச் சான்றிதழ் மற்றும் நோய் கண்காணிப்பு ஆய்வகங்களை நிறுவுதல் | தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் | 491.07 |
| 3. | நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காக மலிவு விலை மீன் உணவு தீவனங்களை உற்பத்தி செய்தல் | தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் | 398.00 |
| 4. | பழவேற்காடு ஏரி பகுதியிலுள்ள மீனவ மக்களுக்கு மாற்று வாழ்வாதார தொழில் முனைவு முயற்சியாக உவர் நீரில் கரிமீன் உற்பத்தி செய்யும் திட்டத்தை ஊக்குவித்தல். | தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் | 260.88 |
| 5. | ஜெயந்தி ரோகு மீன் குஞ்சுகளை பண்ணையாளர்களுக்கு வழங்குவதற்காக ‘ஜெயந்தி ரோகு’ மீன் இனப்பெருக்கும் மையம் நிறுவுதல் | தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் | 100.00 |

| | | | |
|---|---|---|---|
| 6. | உயிர்க்கூழ்ம தொழில் நுட்பத்தை பயன்படுத்தி தரமான இறால் மற்றும் மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா உற்பத்தி, தொழில் நுட்ப வளர்ச்சி மற்றும் நிலையான இயக்க செயல்முறைகள் | உயிர்த் தொழில் நுட்பத்துறை | 57.93 |
| 7. | தமிழ்நாட்டிலுள்ள வளர்ப்பு இறால் தொழிலை மதிப்பூட்டிய சங்கிலித் தொடர் மூலம் பகுப்பாய்வு செய்தல் | இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் | 12.00 |
| | | **மொத்தம்** | **1868.97** |

**ஆராய்ச்சி சாதனைகள்.**

- ஏற்றுமதி சந்தை, உள்நாட்டு உணவகம், மற்றும் சிற்றுண்டிச்சாலை பதனப்படுத்தப்பட்ட வணிக முக்கியத்துவம் வாய்ந்த விலை மதிப்புமிக்க இறால்களுடன் மலிவு விலை இறால்களை கலப்படம் செய்வதை கண்டறியும் அங்கீகரிக்கப்பட்ட மூலக்கூறு நுட்ப முறை உருவாக்கப்பட்டது.

- மீன்களில் ‘பார்மலின்’ அளவு 2 பிபிஎம் அளவிற்குள் இருந்தாலும், ‘பார்மலின்’ கலப்படத்தை 15 நிமிடங்களுக்குள், கண்டறியும் ‘பார்மலின் அளவினை அறியும் பெட்டகம்’ கண்டுபிடிக்கப்பட்டது.

- தென் தமிழக கடலோரங்களில் அதிகமாக நுகரப்படும் ‘விளமீன்’ தரத்தினை அறிய தரக்குறியீடு முறை கண்டறியப்பட்டது.

## 15.4. மற்ற பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

தமிழ்நாடு மீன்வளப்பல்கலைக்கழகம், 2016 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் வெளிநாடு மற்றும் இந்திய பல்கலைக்கழகங்கள், தேசிய மீன்வள அமைப்புகள், தனியார் மீன் பண்ணையாளர்கள் மற்றும் மீன் தீவன தயாரிப்பாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

**அட்டவணை:22**
**புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் விவரம்**

| வ. எண் | பல்கலைக்கழகம்/ நிலையம்/ தொழில் நிறுவனம் | ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்ட நாள் |
|---|---|---|
| 1. | வெங்கடேஸ்வரா கால்நடைப் பல்கலைக்கழகம், திருப்பதி | 25.05.2016 |
| 2. | ராஜ்ஸ்ரீ பயோ சொலியூசன்ஸ், கோயம்புத்தூர். | 09.06.2016 |
| 3. | 'புளூ லகூன்ஸ்', நடுவூர் மாதாகுப்பம், பழவேற்காடு | 09.06.2016 |
| 4. | ஆடிசோ, பிரான்ஸ் | 14.06.2016 |
| 5. | என்.ஏ.ஏ.எப் அக்குவா ஃபார்ம், கொளத்தூர் | 11.07.2016 |
| 6. | இந்திய வேளாண் திறன் கழகம், ஹரியானா | 26.07.2016 |
| 7 | இளவரசர் சோன் கலா பல்கலைக்கழகம், தாய்லாந்து | 12.08.2016 |
| 8. | இ.ஜி.எஸ். பிள்ளை பொறியியல் கல்லூரி, நாகப்பட்டினம். | 22.08.2016 |

## 15.5 உட்கட்டமைப்பு வசதிகள்

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு வசதிளை மேம்படுத்த 2016-17 ஆம் ஆண்டில் ரூ.33.30 கோடி மதிப்பீட்டிலான கீழ்க்காணும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**அட்டவணை:23**
**உட்கட்டமைப்பு விபரங்கள்**

| வ. எண் | பணியின் பெயர் | தொகை (கோடியில்) |
|---|---|---|
| 1. | பொன்னேரியிலுள்ள மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கல்வி மேம்பாட்டிற்காக கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல். | 10.00 |
| 2. | தூத்துக்குடியில் மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கல்வி மேம்பாட்டிற்காக கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல். | 7.30 |
| 3. | தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகத்தின் சென்னை வானியஞ்சாவடியிலுள்ள OMR வளாகத்தில் முதுகலை மீன்வள மாணவர் மையம் அமைத்தல் | 10.00 |
| 4. | சென்னை மாதவரத்திலுள்ள மீன்வள ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையத்தில் தங்கும் வசதியுடன் கூடிய மீன் வளர்ப்போர் பயிற்சி மையம் மற்றும் தங்கும் விடுதி அமைத்தல் | 6.00 |
| | **மொத்தம்** | **33.30** |

## 15.6 அறிவுரை வழங்குதல் / சான்றளித்தல் / கலந்தாலோசனை சேவைகள்

- இப்பல்கலைக்கழகம், கடல் உணவுப்பொருட்களுக்கு, தூத்துக்குடியிலுள்ள மீன் தர கண்காணிப்பு சான்றிதழ் மையத்தின் மூலமாக சான்றிதழ் அளித்து வருகின்றது. இச்சேவை மூலம் கடந்த வருடம் ரூ.4,26,850/- வருமானமாக இம்மையம் ஈட்டியுள்ளது.
- சென்னை மாதவரத்திலுள்ள மாநில மீன் நோய் கண்டறியும் ஆய்வகம், மீன் பண்ணையாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் சேவை மூலம் **2016–17**ல் மொத்தம் ரூ.1,83,800/- வருமானமாக ஈட்டியுள்ளது. மேலும், மீன்களில் நோய் உண்டாக்கும் கிருமிகளை கண்டறியும் மற்றொரு மண்டல ஆய்வகம் தூத்துக்குடியில் செயல்பட்டு வருகிறது.

## 15.7. விரிவாக்கச் செயல்பாடுகள்

இப்பல்கலைகழகமானது விரிவாக்கப் பணிகளையும், பண்ணை தொழில்களுக்கான பயிற்சிகளையும் அளித்து வருகின்றது. மீன்வள அறிவியலில் ஏற்பட்டுள்ள நவீன தகவல்கள் குறித்த விழிப்புணர்வை மீன்வளர்ப்போரிடம்

ஏற்படுத்தும் பொருட்டு கையேடுகள், பருவ இதழ்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் ஆகியவற்றை அச்சிட்டு வெளியிடுகிறது. கிராம மக்களிடையே மீன் வளர்ப்பு மற்றும் பராமரிப்பு குறித்த தகவல் பரிமாற்றத்தினை மேற்கொள்ள, கண்காட்சி, மக்கள் தொடர்பு முகாம், வானொலி உரை, தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒளிபரப்பு போன்றவற்றை தொடர் நடவடிக்கைகளாக மேற்கொண்டு வருகிறது. இப்பல்கலைக்கழகம், தொழில்நுட்பங்களை பரவலாக்கும் நோக்கோடு பல்வேறு பயிற்சிகளை, மீன்வளத்துறை, தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மற்றும் இதர அரசு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது.

2016-17 ஆம் ஆண்டில், இப்பல்கலைக்கழகத்தின் மூலம் 96 தொழில் கல்வி மற்றும் தொழில் முனைவோருக்கான பயிற்சிகள் நடத்தப்பட்டன. இதில் மொத்தமாக 2,178 பயனாளிகள் பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளனர். மேலும், இப்பல்கலைக்கழகத்தின் மூலம் 46 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் குறிப்பாக சுகாதாரமான முறையில் மீன்பிடி துறைமுகம் மற்றும் மீன் இறங்குதளங்களை பாதுகாத்தல் குறித்த விழிப்புணர்வு பயிற்சியில் மொத்தமாக 1,903 பயனாளிகள் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளனர்.

2016-17 ஆம் ஆண்டில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ரூபாய் 49.30 இலட்சம் நிதியாக அளிக்கப்பட்டு மீன்வளம் சம்பந்தப்பட்ட பயிற்சிகள் நடத்தப்பட்டன. இந்த பயிற்சியின் மூலம் 205 பயனாளிகள் பயிற்சி பெற்று பயன்பெற்றுள்ளனர்.

மீன்வளம் தொழில்நுட்பம் சார்ந்த 20க்கும் மேற்பட்ட மடிப்பிதழ்கள் பிரசுரம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. ‘மீன்வளச்சுடர்’ என்ற தமிழ் காலாண்டு இதழ் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வெளியிடப்பட்டு வருகிறது. இந்த இதழ் குறிப்பாக மீன்வளத் தொழில்நுட்பம், மீன்வளத்தில் தற்போதைய நிலை, மீன்வளப்போரை மேம்படுத்தும் வகையில் மீன்வளம் சார்ந்த திட்டங்கள், பண்ணையாளர்களின் வெற்றி கதைகள் போன்ற தொகுப்புகளை உள்ளடக்கியுள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் மூலம் ஆங்கிலத்தில் செய்திமடல் (News letter) வெளியிடப்பட்டு வருகிறது. மேலும், வண்ண மீன்வளர்ப்பு தொழில்நுட்பங்கள், நன்னீர் மீன்வளர்ப்பு தொழில் நுட்பங்கள் மற்றும் ‘வெனாமி’ இறால் வளர்ப்பில் சிறந்த மேலாண்மை முறைகள் என்ற தலைப்புகளில் மூன்று வானொலி வேளாண்மை பள்ளி பாடத்திட்டங்கள் அகில இந்திய வானொலி மூலம் நடைபெற்றது.

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் மீன்வள அலுவலர் பயிற்சி நிலையத்தில் தமிழ்நாடு மீன்வளத் துறையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு துறைப் பயிற்சி, புத்தாக்க பயிற்சி மற்றும் புத்தறிவுப் பயிற்சி வழங்கப்படுகிறது. மீன்வளப் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு சுய முன்னேற்றப் பயிற்சி மற்றும் அலுவலர்களுக்கு பல்வேறு அலுவலக நடைமுறை மற்றும் நடத்தை விதிகள் குறித்தான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

## 15.8. எதிர்காலத் திட்டங்கள்

- உயிர்கூழ்ம தொழில்நுட்பத்தின் கீழ் தீவிர நீரோட்ட ‘வெனாமி’ இறால் வளர்ப்பு காட்சிப்பண்ணை மற்றும் குஞ்சு பொரிப்பகத்தை தூத்துக்குடி மாவட்டம் தருவை குளத்தில் உருவாக்குதல்.

- வளங்குன்றா நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையத்தை சார்ந்த மண்டல மையங்களில் மீன் பண்ணையாளருக்கான திறன்மேம்பாடு மற்றும் அனுபவ பயிற்சி அளித்தல்.

- தென் தமிழகத்தில் மீன் உணவு பொருட்களுக்கான நுண்ணுயிர் தரச் சான்றிதழ் வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகத்தை நிறுவுதல்.

- மீன் பதன தொழில் பூங்கா மற்றும் மீன்வள வணிக காப்பு மையம் நிறுவுதல்.
- சென்னை முட்டுக்காட்டில் வண்ண மீன்களுக்கான சினை மீன்வங்கி ஏற்படுத்துதல்.
- சென்னை முட்டுகாட்டில் மீன்தீவன ஆலை நிறுவுதல்
- மீனவளம் மற்றும் மீன்வளர்ப்பு குறித்த செல்பேசி செயலிகளை பல்கலைகழகத்தின் மீன்வள மேலாண்மை, திட்டமிடல் மற்றும் கொள்கை வடிவமைப்பு மையம் மூலம் உருவாக்குதல்.

## 15.9 ஆராய்ச்சிக்கான முன்னுரிமை பகுதிகள்

- திறந்த நீர் நிலைகளில் கூண்டுகளில் மீன்வளர்த்தல்
- உயிர்க்கூழ்ம தொழில் நுட்பத்தில் மீன் வளர்த்தல்
- நன்னீரில் 'வெனாமி' இறால் வளர்த்தல்
- மீன்களில் நுண்ணுயிர் இடர்பாடு மற்றும் இரசாயன படிவுகளை ஆய்வு செய்தல்
- இந்தியப் பெருங்கெண்டைகளுடன், அயிரை மீன்கள் வளர்க்கும் தொழில்நுட்பத்தை உருவாக்குதல்

- மீன்வள அருங்காட்சியகத்தை மேம்படுத்தி நீர்வாழ் பல்லுயிர் பெருக்கு தகவல் மையத்தை நிறுவுதல்.
  ( Aquatic biodiversity referral center)

- வளங்குன்றா மீன்வளத்தை நிலைநாட்ட மற்றும் மீன்வளம் தொடர்பான இதர தேவைகளை பூர்த்தி செய்வதற்கான கைபேசி செயலிகளை (Mobile Applications) உருவாக்குதல்.

- மீன்வள தரவுக்களஞ்சியம் (Fisheries Database) மற்றும் மீன் வள தொழில்நுட்ப இணையவழி தகவல் வாயில் (Fish Tech Portal) நிறுவுதல்.

- மன்னார் வளைகுடா பகுதியில் கரை ஒதுங்கும் கடல் பாசிகளை பயன்படுத்தி வேளாண் தொழிலுக்கான உயிர் உரங்களை தயாரித்தல்.

- நுண்ணுயிரிகளைப் பயன்படுத்தி உயிர் நிவர்த்தி தொழில்நுட்பம் (Bioremediation) மூலம் மீன்பதன தொழிற்சாலைக் கழிவுகளை அகற்றுதல்.

## 16. 2017-18 ஆம் ஆண்டு மீன்வளத்துறைக்கான மொத்த நிதி ஒதுக்கீடு

2017-18 ஆம் ஆண்டிற்கு ரூ.768.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.619.18 கோடி வருவாய் செலவினமாகவும் ரூ.149.14 கோடி மூலதன செலவினமாகவும் இருக்கும்.

## 17. நிறைவுரை

உணவு வழங்குவதிலும், உணவுப் பாதுகாப்பினை அளிப்பதிலும், மீன்வளப்பிரிவு மிக முக்கிய பங்கினை வகிக்கிறது. கடலோர பகுதிகளிலுள்ள சமூகங்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கும் முதன்மை ஆதாரமாகவும் விளங்குகிறது.

ஆழ்கடல் மீன்பிடிப்பினை ஊக்குவிக்கவும் மற்றும் இழுவலைப் படகுகளை தூண்டில் முறை சூரை மீன்பிடி படகுகளாக மாற்றுவதற்கு மானிய உதவி வழங்கும் அரசின் முயற்சிகள் மீனவர்களின் உயிர் மற்றும் உடமைகளைப் பாதுகாப்பதோடு பாக் வளைகுடா பகுதி மீனவர்கள் எதிர்கொள்ளும் துயரினையும் தணித்திடும். கடல் உயிரின வளர்ப்பு நடவடிக்கைகளான கூண்டுகளில் கடல் மீன்

வளர்த்தல் மற்றும் மிதவைகளில் கடற்பாசி வளர்த்தல் மீன்பிடித் தொழிலை சார்ந்திருக்கும் மீனவர்களுக்கு குறிப்பாக பாக் பகுதியில் ஒரு மாற்று வாழ்வாதாரத் தொழிலாக அமையும்.

கடலில் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதில் அரசு எப்பொழுதுமே முன்னுரிமை அளித்து வருகிறது. பாரம்பரிய மீன்பிடி படகுகளுக்கு உயிர்காக்கும் மிதவைகள் மற்றும் ஆபத்துக் கால எச்சரிக்கை கருவிகள் இந்த அரசால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. மேலும், கடலில் பாதுகாப்பினை உறுதி செய்ய விரைவில் VHF கருவிகளும் வழங்கப்படும்.

இந்த அரசின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றான மீனவர்களுக்கென்று பிரத்தியேகமாக 5,000 வீடுகள் வழங்கும் திட்டத்தினை நிறைவேற்றும் வண்ணம் 2016-17ஆம் ஆண்டில் அரசு ரூ.85 கோடி நிதியினை ஒதுக்கியுள்ளது.

நன்னீரில் மீன்வளர்ப்பு நடவடிக்கைகளை வேளாண் தொழிலுடன் ஒருங்கிணைப்பதன் மூலம், விவசாயிகளின் வருமானம் அதிகரிப்பதுடன் மீன் உற்பத்தியும் அதிகரித்திடும்.

கிருஷ்ணகிரியில் அமைக்கப்பட்ட “கிப்ட்” (GIFT) திலேப்பியா மீன் குஞ்சு பொரிப்பகம், பல்நோக்கு பண்ணைக்குட்டைகளில் மீன் வளர்ப்பினை மேம்படுத்துதல் மற்றும் நீர்தேக்கங்களில் கூண்டுகளில் மீன் வளர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது போன்ற நடவடிக்கைகளினால் மாநிலத்தின் மீன் உற்பத்தி வரும் ஆண்டுகளில் பன்மடங்கு உயரும்.

அறிவியல் பூர்வமான மீன்வள பாதுகாப்பு மற்றும் மேலாண்மை ஆகியவற்றுடன் பல்வேறு மேம்பாட்டு முயற்சிகள் இணையும் தருணத்தில் இந்த மாநிலத்தின் மீன்வள மேம்பாடு தடையின்றி வளர்ச்சி அடைவதற்கான உத்வேகத்தை அளிக்கும். இந்த அரசு, 2017-18ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டினை எப்போதுமில்லாத அளவுக்கு அதிகபட்சமாக ரூ.768.32 கோடியாக ஒதுக்கீடு செய்துள்ளது. சுற்றுச்சூழலுக்குகந்த நீடித்த வளங்குன்றா மீன்வள மேம்பாட்டு கொள்கையினை பின்பற்றி, திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவது, மீனவர்களுக்கு வளமான வாழ்வினை அளிப்பதுடன் மாநிலத்தின் குறிக்கோளான ஒருமித்த வளர்ச்சியினை அடையவும் உதவிடும்.

தொலைநோக்கு சிந்தனையுள்ள **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதல்கள், வரும் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மீன்வளம் பன்மடங்கு வளர்ச்சி அடைந்திட, அரசால் எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் உதவிடும்.

**D.ஜெயக்குமார்**
**மீன்வளம், நிதி மற்றும் பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர்**